# மாணவர் தமிழ்த் துணைவன்

63

எட்டாம் வகுப்பு

மாணவர் கலா நிலையம்:
விருதுநகர்

# எட்டாம் வகுப்புத்

# தமிழ்ப் பாடத் துணைவன்

நிலைய ஆசிரியர் குழு
தயாரித்தது

பதிப்பித்தோர்
மாணவர் கலா நிலையம்
விருதுநகர்

63/1-78

நிலைய வெளியீடு எண்: 203

முதற்பதிப்பு: டிசம்பர் 1967

[மாணவர் தமிழ் விருந்து]

147157.

TB
031(8)
N67

விலை ரூ. 1-50

அச்சிட்டோர்
ராஜமோகன் பிரிண்டர்ஸ்
விருதுநகர்

# பதிப்புரை

*அன்புமிக்க மாணவ மணிகாள்!*

'தமிழ்' என்பதே இனிமை! 'யாமறிந்த மொழிகளிலே தமிழ்போல் இனிதாவது எங்கும் காணோம்' என்றார் பாரதியார். அத்துணை இனியமொழி நம் தாய் மொழியாம் தமிழ். அதனைச் சிறப்புற ஓதித் தமிழின்பமும் தமிழ் ஆர்வமும் உம்மிடைத் தழைத்தோங்கவே இந்நூலைப் பதிப்பித்துள்ளோம். அவ்வப்போது பள்ளியில் பயிலும் பகுதியை இந்நூலின் துணைகொண்டு படித்து வாருங்கள். சிறந்த வெற்றி உங்களைத் தேடியடையும்.

– பதிப்பகத்தார்

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1 செய்யுட்பகுதி உரை | ... | 5 |
| 1. வாழ்த்துப் பகுதி | ... | 5 |
| 2. நீதிப் பகுதி | ... | 9 |
| 3. கதைப் பகுதி | ... | 37 |
| 4. பல்சுவைப் பகுதி | ... | 62 |
| 2 செய்யுள் விருந்து வினா விடை | ... | 80 |
| 3 உரை நடைப் பகுதி வினா விடை | ... | 99 |

# செய்யுள் விருந்து

## I வாழ்த்துப் பகுதி

### கடவுள் வாழ்த்து

### 1. திருவருட்பா

**முன்னுரை:** திரு + அருள் + பா — திருவருட்பா. இறைவன் திருவருளால் பாடப்பட்ட பாடல்கள் அடங்கிய நூல் என்பது பொருள். இறைவன் திருவருளைப் பெறுவதற்குப் பாடப்பட்ட பாடல்கள் அடங்கிய நூல் என்றும் பொருள் கூறுவர்.

**ஆசிரியர் வரலாறு:** ஆசிரியர் — இராமலிங்க அடிகளார். பிறப்பிடம்-மருதூர். பெற்றோர்-இராமையா பிள்ளை, சின்னம்மை, மரபு-கருணீகர் குலம், இயற்றிய நூல்கள்—சமரச சன்மார்க்கம், சிவகாருணிய ஒழுக்கம், மநுமுறை கண்ட வாசகம். காலம் — கி. பி. 1823—1873.

**பதவுரை:** இன்பப் பெருக்கே—இன்ப வெள்ளமே, அருட் கடலே, இறையே—கடவுளே, அழியா இரும் பொருளே — அழி வற்ற பெரிய பொருளே, அன்பர்க்கு அருளும்—அன்பு கொண்ட அடியவர்களுக்கு அருள் செய்யும், பெருங் கருணை அரசே—பெரிய கருணை காட்டும் அரசே, உணர்வால் ஆம் பயனே — உணர்வால் ஆகிய பயனாக விளங்குபவனே, வன்பர்க்கு—வலியருக்கு, அரிதாம் —அரிதாக விளங்கும், பரஞ்சோதி—மேலான ஒளியோடு கூடிய, வடிவே—உருவமாக இருப்பவனே, வடிவேல் மணியே-கூரிய வேல் தாங்கும் மணியே, என் துன்பம் அத்து இடர் ஐ — என்னுடைய துன்பமாகிய இடரை, பொடியாக்கி—பொடியாக்கி, சுகம் தந்து அருளத் துணியாயே—சுகம் அருளிச் செய்து காப்பாற்றுவாயாக.

**தெளிவுரை:** இன்பமாகிய வெள்ளம் போன்றவனே! அருள் கடலாக விளங்குபவனே! இறையே! அழிவற்ற பெரும் பொருளே! அடியவர்களுக்கருள் செய்யும் பெருங்கருணை கொண்டு விளங்கும் அரசே! உணர்வால் ஆகிய பயனாக விளங்குபவனே! கொடியவர் களுக்கு அரிதாக விளங்கும் மேலான ஒளியோடு கூடிய உருவமான வனே! கூரிய வேல் தாங்கும் மணியே! என் துன்பமாகிய இடரை நீக்கி, அருள் செய்வாயாக.

**இலக்கணம்:** இன்பப் பெருக்கு, துன்பத் திடர், அருட்கடல் —உருவகங்கள்.

பெருங்கருணை—பண்புத்தொகை

அழியா—ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

## 2. தேவாரம்

முன்னுரை: தே + வாரம் — தேவாரம் — தெய்வத்துக்குரிய இசைப் பாடல். தே + ஆரம்—தெய்வத்தைப் பற்றிய பாமாலை.

ஆசிரியர் வரலாறு: ஆசிரியர்—திருநாவுக்கரசர், பிறப்பிடம் திருவாமூர், குலம்—வேளாளர், இயற்பெயர் — மருள் நீக்கியார், பெற்றோர்—புகழனார், மாதினியார், தமக்கை-திலகவதியார், வேறு பெயர்கள்—அப்பர், வாகீசர், காலம்—கி. பி. 7ஆம் நூற்றாண்டு.

பதவுரை: மாசு இல் வீணையும் — குற்றமில்லாத வீணையின் நாதமும், மாலை மதியமும்—அந்திக் காலத்து வெண் மதியும், வீசு தென்றலும்—வீசுகின்ற தென்றல் காற்றும், வீங்கு—இன்பம் மிகுகின்ற, இளவேனிலும்—வசந்தமும், மூசு—மொய்க்கின்ற, வண்டு அறை பொய்கையும்-வண்டுகள் ஒலிக்கின்ற குளமும், போன்றதே —போல விளங்குகின்றது, ஈசன் எந்தை—கடவுளாகிய தந்தையின், இணையடி நிழலே—இரு திருவடிகளின் நிழல்.

தெளிவுரை: இறைவனுடைய திருவடி நிழல் குற்றமற்ற வீணையின் நாதமும், மாலைக் காலத்து வெண்மதியும், வீசுகின்ற தென்றல் காற்றும், இன்பம் நல்குகின்ற வசந்தமும், மொய்க்கின்ற வண்டுகள் நிறைந்த குளமும் போல இன்பம் தருகின்றது.

இலக்கணம்: இல்—கடைக்குறை
வீசுதென்றல்—வினைத்தொகை
எந்தை—என் தந்தை என்பதன் மரூஉ
நிழலே—நிழல் என்பதன் நீட்டல் விகாரம்.

## 3. திருவாய்மொழி

முன்னுரை: வைணவர்கள் பாடிய பாடல் தொகுதி நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம், அதைத் தொகுத்தவர் நாதமுனிகள். அந்நூலில் இத்திருவாய்மொழி பாடியவர் நம்மாழ்வார்.

ஆசிரியர் வரலாறு: ஆசிரியர்—நம்மாழ்வார், பிறப்பிடம்—பாண்டிய நாட்டைச் சேர்ந்த குருகூர், குலம்—வேளாளர், காலம் —கி. பி. 8ஆம் நூற்றாண்டு.

பதவுரை: உயர்வு அற—மற்றவர்களின் உயர்வு நீங்கும்படி, உயர்நலம — சிறந்த இன்பத்தை, உடையவன் எவன் அவன் — உடையவன் எவனோ அவனுடைய, மயர்வு அற—மயக்கம் நீங்கும் படியாக, மதிநலம அருளினன் எவன் அவன் — அறிவு நலத்தைக் கொடுத்தவன் எவனோ அவனுடைய, அயர்வு அறும் — தளர்ச்சியைப் போக்கிய அமரர்கள் அதிபதி எவன அவன் — தேவர்களுக்குத் தலைவன் எவனோ அவனுடைய, துயர் அறு — துன்பத்தைப் போக்கும், சுடர் அடி—ஒளி பொருந்திய திருவடிகளை, மனனே— மனமே, தொழுது எழு—பணிந்து எழுவாயாக.

**தெளிவுரை:** நெஞ்சமே! இதற்குமேல் உயர்வு இல்லையாம் எனும்படி, உயர்ந்த நலத்தை உடையவனும், அறியாமையாகிய மயக்கத்தைப் போக்கி, அறிவு நலத்தைத் தந்தவனும், மறதியைப் போக்கிய அமரர்களின் தலைவனும் ஆகிய திருமாலின் ஒளி பொருந்திய திருவடிகளைப் பணிந்து எழுவாயாக.

**இலக்கணம்:** மதிநலம்—6ஆம் வேற்றுமைத் தொகை

சுடரடி—2ஆம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை

மனனே—கடைப் போலி ஏகாரம் விளி பெற்றது.

## 4. தேம்பாவணி

**முன்னுரை:** தேம்பாவணி—வாடா அழகு. ஏசுநாதருடைய வளர்ப்புத் தந்தையான சூசையப்பரின் வாழ்க்கை வரலாற்றைக் கூறும் நூல்.

**ஆசிரியர் வரலாறு:** ஆசிரியர் — ஜோஸப் பெஸ்கி (வீரமா முனிவர்) பெற்றோர் — கண்டால் போ பெஷி, எலிசபெத் பெஷி, பிறப்பிடம் — இத்தாலி நாட்டில் உள்ள காஸ்திகிளியோனே. இயற்றிய நூல்கள்—சதுர் அகராதி, தேம்பாவணி, தொன்னூல் விளக்கம், திருக்காவலூர்க் கலம்பகம், கித்தேரியம்மன் அம்மானை, பரமார்த்த குரு கதை, வேத விளக்கம், வேதியர் ஒழுக்கம். காலம் — கி. பி. 1680 நவம்பர்த் திங்கள் 9ஆம் நாள் — கி. பி. 1747 பிப்ரவரி 4.

**பதவுரை:** அறம் தாய் தந்தை சுற்றமும் — அறமும் தாயும் தந்தையும் உறவினரும், மற்று அனைத்தும் நீயே—இன்னும் வேறு எல்லாமும் நீயே. கதி நீயே—எனக்குக் கதியும் நீயே, பிறந்தாய் — இவ்வுலகில் தோன்றினாய், உலகிற்கு — உலக மக்களுக்கு, உயிரன்னாய் — உயிர் போன்றவனே, பிறந்து — இவ்வுலகில் தோன்றி, எம் துயரும் எம்பகையும் துறந்தாய்—எங்களுக்கு ஏற்படும் துன்பத்தையும் பகையையும் விட்டாய், எங்கள் சிறை தீர்த்தாய்-எங்களுடைய சிறைத் தன்மையை நீக்கினாய். துகள் பூட்டிய பாலம் பூட்டிய, வீட்டு உயர் வாசல் திறந்தாய் — வீடு பேற்றின் உயர்ந்த வாயிலைத் திறந்தாய், இவை யாவரும் அறிய—இவை எல்லாம் உலகத்தார் அறிய, திறன் செய்து அருள் செய்து இரங்காயோ —நன்மையைச் செய்து அருள் செய்து இரங்குவாயோ?

**தெளிவுரை:** அறம், தாய், தந்தை உறவினர் மற்றும் எல்லாச் செல்வங்களும் நீயே! நீயே எனக்குக் கதி. உயிரைப் போன்றவனே! இந்த உலகில் பிறந்து எம் துயர்களையும், பகையையும் போக்கினாய் எங்களுக்கு விடுதலையளித்தாய். பாவத்தால் பூட்டப்பட்ட வீட்டுலக வாயிலைத் திறந்தருள் செய்தாய்! இனியும் யாவரும் அறிய நன்மைகளைச் செய்து அருளைக் கொடுத்து இரங்குவாய்.

இலக்கணம்: அறந்தாய் தந்தை சுற்றமும்—எண்ணும்மைகள்

துறந்தாய், திறந்தாய், பிறந்தாய் — முன்னிலை ஒருமை வினை முற்றுக்கள்.

## 5. சீருப்புராணம்

முன்னுரை: சீரு என்பது அரபு மொழி. பெரியோருடைய புகழ் என்று பொருள். இஸ்லாமிய மதப் பெரியோராகிய முகமது நபியின் வரலாற்றைக் கூறுதலால், இந்நூல் சீருப் புராணம் எனப் பெயர் பெற்றது.

ஆசிரியர் வரலாறு: ஆசிரியர்—உமறுப் புலவர், தந்தை—சேகு முதலியார், பிறப்பிடம் — கீழக் கரையைச் சேர்ந்த ஒரு சிற்றூர், ஆசிரியர்—கடிகை முத்துப் புலவர், ஆதரித்தவர்—சீதக் காதியின் அமைச்சராகிய அப்துல் காசிம். காலம்—கி. பி. 17 ஆம் நூற்றாண்டு.

பதவுரை: திருவினும் திருவாய் — செல்வங்களுள் எல்லாம் சிறந்த செல்வமாய், பொருளினும் பொருளாய்—பொருள்களுள் எல்லாம சிறந்த பொருளாய், தெளிவினும் தெளிவதாய் — ஞானிகள் கண்ட தெளிவுகளுள் சிறந்த தெளிவாய், சிறந்த மருவினும் மருவாய்—சிறந்த மணங்களுள் மேலான மணமாய், அணுவினுக்கு அணுவாய்-அணுவினுக்கு உளளே உள்ள நுண்ணிய அணுவாய், மதித்திடாப் பேரொளி அனைத்தும்-(இத்தன்மையானவை என்று கண்களால் கண்டு) மதிக்க முடியாத பெரிய ஒளிகள் எல்லாம, பொருவினும் (ஒரு சேரத் திரணடு வந்து) ஒப்பானாலும், பொருவா —ஒப்பாகாத, வடிவினும வடிவாய் — அழகிற் சிறந்த அழகாய், பூதலத்து உறைந்த — பூமியிலே பொருந்தியுள்ள, பல் உயிரின்—பல உயிர்களின், கருவினும் கருவாய்-கருக்களுக்குள்ளே கருவாய, பெருந்தலம் புரந்த — இப்பெரிய உலகைத் தனது பேரருளால் காப்பாற்றி வருகின்ற, கருத்தனை—இறைவனை, பொருத்துதல்—(மனதில்) பொருந்தச் செய்தல், கருத்து—(எனது) எண்ணமாகும்.

தெளிவுரை: செல்வங்களில் சிறந்த செல்வமாய், பொருள்களில் சிறந்த பொருளாய், ஞானிகள் கண்ட தெளிவுகளுள் சிறந்த தெளிவாய், மணங்களில் சிறந்த மணமாய், அணுக்களுள மேலான அணுவாய், கண்களால் கண்டு இத்தன்மையானது என்று மதிக்க முடியாத பெரிய ஒளிகளெல்லாம் ஒரு சேரத் திரண்டு வந்து ஒப்பானாலும், ஒப்பாகாத அழகிற் சிறந்த அழகாய், பூமியில் பொருந்தியுள்ள பல உயிர்களின் கருக்களுள் பொருந்திய கருவாய், இப்பெரிய உலகைத் தனது பேரருளால் காப்பாற்றி வருகின்ற இறைவனை, என் மனத்தில் பொருந்தச் செய்தல் என் எண்ணமாகும்.

இலக்கணம்: மதித்திடாப் பேரொளி — ஈறுகெட்ட எதிர் மறைப் பெயரெச்சம்

பேரொளி—பண்புத்தொகை

பெருந்தவம்—பண்புத்தொகை

# II நீதிப்பகுதி

## அ) திருக்குறள்

முன்னுரை: சிறப்பு மிகுந்த குறள் வெண்பாக்களினால் ஆகிய நூல். திரு + குறள்; திரு—எம்மதத்தினரும் சம்மதமாக ஏற்றுக் கொள்ளும் சிறப்பு; குறள் —குறுகிய இரண்டு அடிகளை உடைய குறள் வெண்பாக்களினால் ஆன நூல். (குறள் வெண்பா என்று பொருள்படும் குறள்களால்ஆன நாலுக்குக் குறள் என்பது கருவி யாகு பெயர். திரு—அடைமொழி திருக்குறள்-அடையடுத்த கருவி யாகு பெயர்.

நூலின் அமைப்பு: மூன்று பெரும் பிரிவுகள் கொண்டது. அறம், பொருள், இன்பம் என்பன. அவை 133 அதிகாரங்கள். அதிகாரம் ஒன்றுக்குப் பத்துக் குறட்பாக்கள் வீதம் 1330 குறட் பாக்களையும் உடையது. 'பதினெண் கீழ்க் கணக்கு' நூல் தொகுப் பைச் சேர்ந்தது.

நூலின் பெருமை: 'ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி; நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி' என்ற பழமொழியாலும், 'பழகு தமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில்' என்ற ஔவையாரின் பாராட்டு மொழியாலும், இந்நூலின் பெருமை தெற்றென விளங் கும்.

ஆசிரியர் வரலாறு: பெயர்—திருவள்ளுவர்; பிறப்பிடம் — மைலாப்பூர் எனக் கூறுவர்; பெற்றோர் — தாய் ஆதி என்றும், தந்தை பகவன் என்றும் கூறுவர். குலம்—வள்ளுவர் குலம் என்பர். மனைவி—வாசுகி. காலம்—கடைச்சங்க காலம்.

திருவள்ளுவருக்கு வழங்கும் வேறு பெயர்கள்: 1) திருவள்ளு வர் 2) நாயனார் 3) தேவர் 4) முதற் பாவலர் 5) தெய்வப் புலவர் 6) நான்முகனார் 7) மாதானுபங்கி 8) செந்நாப்போதார் 9) பெரு நாவலர் 10) பொய்யில் புலவர்.

நூலின் வேறு பெயர்கள்: 1) திருக்குறள் 2) முப்பால் 3) உத்தரவேதம் 4) தெய்வ நூல் 5) திருவள்ளுவர் 6) பொய்யாமொழி 7) வாயுறை வாழ்த்து 8) தமிழ் மறை 9) பொதுமறை 10) திருவள்ளுவப் பயன்.

உரையாசிரியர்கள்: 1) தருமர் 2) மணக்குடவர் 3) தாமத்தர் 4) நச்சர் 5) பரிதி 6) பரிமேலழகர் 7) திருமலையர் 8) மல்லர் 9) கவிப் பெருமாள் 10) காளிங்கர்.

இவ்வுரைகளில் பரிமேலழகர் எழுதிய உரை சிறந்ததாகும்.

## 1. கடவுள் வாழ்த்து

பதவுரை: மலர்மிசை—(அன்பால் நினைப்பவரது) மனமாகிய தாமரை மலரின் மேல், ஏகினான்—விரைந்து சென்று வீற்றிருப்பவனாகிய இறைவனுடைய, மாண் அடி — பெருமை பொருந்திய திருவடிகளை, சேர்ந்தார்—வணங்கியவர், நிலமிசை — (எல்லா உலகங்களுக்கும் மேலான) வீட்டு உலகத்தில், நீடு வாழ்வார் — எந்தக் காலத்திலும் இன்பமாக வாழ்ந்திருப்பார்கள்.

தெளிவுரை: (அன்பால் நினைப்பவரது) மனமாகிய தாமரை மலரின் மேல் விரைந்து சென்று வீற்றிருப்பவனாகிய இறைவனாகிய இறைவனுடைய, பெருமை பொருந்திய திருவடிகளை வணங்கியவர், எல்லா உலகங்களுக்கும் மேலான, வீட்டுலகத்தில் எந்தக் காலத்திலும் இன்பமாக வாழ்ந்திருப்பார்கள்.

கருத்து: கடவுளினது அடிகளைச் சேர்ந்தவர்கள் மோட்சத்தில் வாழ்வார்கள்.

இலக்கணம்: ஏகினான், சேர்ந்தார் — வினையால் அணையும் பெயர்கள்

வாழ்வார்—பலர்பால் வினைமுற்று.

## 2. நீத்தார் பெருமை

பதவுரை: செயற்கு அரிய செய்வார் பெரியர்—பெரியோர்கள் சாதாரண மக்களால் செய்ய முடியாத அரிய செயல்களைச் செய்வார்கள், சிறியர்—சிறியோர், செயற்கு அரிய செய்கலாதார்-எளியவற்றைச் செய்வார்களே தவிர, அரியவற்றைச் செய்ய மாட்டார்கள்.

தெளிவுரை: பெரியோர்கள் சாதாரண மக்களால் செய்ய முடியாத அரிய செயல்களைச் செய்வார்கள். சிறியோர் எளியவற்றைச் செய்வார்களே தவிர அரியவற்றைச் செய்ய மாட்டார்கள்.

கருத்து: பெரியோர் செயற்கரியவைகளைச் செய்வார்கள்; சிறியோர் எளியவைகளைச் செய்வார்.

இலக்கணம்: அரிய—குறிப்பு வினைமுற்று
செய்கலாதார்—வினையால் அணையும் பெயர்
பெரியர், சிறியர்—குறிப்பு வினையால் அணையும் பெயர்கள்

## 3. அறன் வலியுறுத்தல்

பதவுரை: மனத்துக்கண்—மனத்தில், மாசு இலன் ஆதல் — குற்றம் இல்லாதவன் ஆகுக, அறன் அனைத்து — அறம் அவ்வளவினதேயாம், பிற—மற்றைய சொல்லும் செயலும், ஆகுலம் நீர—ஆரவாரத் தன்மையுடையன.

**தெளிவுரை:** மனத்தில் குற்றம் இல்லாதவன் ஆகுக; அறம் அவ்வளவினதேயாம்; மற்றைய சொல்லும் செயலும் ஆரவாரத் தன்மையுடையன.

**கருத்து:** 'தூய மனத்துடன் கலந்த சொல்லும் செயலுமே அறம்' ஆகும்.

**இலக்கணம்:** மனம் + அத்து + கண் — அத்து — சாரியை.
ஆதல் — வியங்கோள் வினைமுற்று
அனைத்து — குறிப்பு வினைமுற்று.

## 4. மக்கட் பேறு

**பதவுரை:** தந்தை மகற்கு ஆற்றும் நன்றி — தந்தை மகனுக்குச் செய்ய வேண்டிய நன்மை, அவையத்து — அவையில், முந்தியிருப்பச் செயல் — முதன்மையானவருள் ஒருவனாக இருக்கும்படி செய்து வைப்பதாகும்.

**தெளிவுரை:** தந்தை மகனுக்குச் செய்ய வேண்டிய நன்மை, அவையில் முதன்மையானவருள் ஒருவனாக இருக்கும்படி செய்து வைப்பதாகும்.

**கருத்து:** தந்தை தம் மகனுக்குச் செய்யும் உதவி, கற்றவர் கூட்டத்தில கல்வியில் சிறந்தவனாக அவனை முதன்மையாக இருக்கும்படி செய்வதாம்.

**இலக்கணம்:** செயல் — வியங்கோள் வினைமுற்று.

## 5. விருந்தோம்பல்

**பதவுரை:** அனிச்சம் — அனிச்சமலர், மோப்ப — மோந்த அளவில், குழையும் — வாடும், விருந்து — விருந்தினரோ, முகம் திரிந்து — முகம் வேறுபட்டு, நோக்க — பார்த்த அளவில், குழையும் — வாடிவிடுவர்.

**தெளிவுரை:** அனிச்சமலர் மோந்த அளவில் வாடும். விருந்தினரோ முகம் வேறுபட்டுப் பார்த்த அளவில் வாடி விடுவர்.

**கருத்து:** இல் வாழ்பவர் முகம் வேறு பட்டுப் பார்த்த அளவில் விருந்தினர் வாடுவர்.

**இலக்கணம்:** அனிச்சம் — பொருளாகு பெயர், மோப்ப — 'செய' என்ற வாய்பாட்டு வினையெச்சம், குழையும் — 'செய்யும், என்னும் வாய்பாட்டு வினைமுற்று.

## 6. இனியவை கூறல்

**பதவுரை:** இனிய — (அறத்தை உண்டாக்கும்)இனிய சொற்களும், உள ஆக — தான் சொல்லுவதற்குத் தன் பால் இருப்பனவாக (அவற்றைக் கூறாமல்), இன்னாத — பாவத்தை உண்டாக்கும்)

கொடுமையான சொற்களைக் கூறல்—ஒருவன் சொல்லுதல், கனி—இனிய சுவையோடு கூடிய கனிகளும், இருப்ப — தன் கையில் இருக்க (அவற்றை உண்ணுமல்), காய் — இனிமையற்ற காய்களை, கவர்ந்து அற்று — உண்டதோடு ஒக்கும்.

தெளிவுரை: இனிய சொற்களும் தான் சொல்லுவதற்குத் தன்பால் இருப்பனவாக, அவற்றைக் கூருமல், கொடுமையான சொற்களைக் கூறல், இனிய சுவையோடு கூடிய கனிகளும் தன்கையில் இருக்க, அவற்றை உண்ணுமல், இனிமையற்ற காய்களை உண்டதோடு ஒக்கும்.

கருத்து: கடுஞ்சொற்களை நீக்கி, இனிய சொற்களையே பேச வேண்டும்.

இலக்கணம்: இனிய, இன்னுத — குறிப்பு வினையால் அணையும் பெயர்கள், உள — தொகுத்தல் விவகாரம், கூறல்— தொழிற் பெயர், அற்று — குறிப்பு வினைமுற்று.

## 7. செய்ந்நன்றியறிதல்

பதவுரை: செய்யாமல் (முன் ஓர் உதவியும்) செய்யாமல் இருந்தவர்க்கு, செய்த உதவிக்கு — செய்யக்கூடிய உதவிக்கு, வையகமும் — நிலவுலகமும், வான் அகமும் — வானுலகமும், ஆற்றல் — ஈடாகக்கொடுத்தாலும், அரிது — ஒப்பாகாது,

தெளிவுரை: முன் ஓர் உதவியும் செய்யாமல் இருந்தவர்க்கு, செய்யக்கூடிய உதவிக்கு, நிலவுலகமும் வானுலகமும் ஈடாகக் கொடுத்தாலும் ஒப்பாகாது.

கருத்து: உதவி செய்யாதவர்க்குச் செய்யப்பட்ட உதவிக்கு ஈடாதல எதுவும் இல்லை.

இலக்கணம்: வையகம் — காரணப்பெயர், வையகமும் வானகமும் — எண்ணும்மைகள்.

## 8. நடுவு நிலைமை

பதவுரை: நன்றே தரினும்— நன்மையே கொடுப்பதாக இருந்தாலும, நடுவு இகந்து ஆம் ஆக்கத்தை —நடுவுநிலை நீங்கி உண்டாகின்ற செல்வத்தை, அன்றே ஒழிய விடல் — அப்பொழுதே ஒழிய விடுக.

தெளிவுரை: தீமை இல்லாமல் நன்மையே கொடுப்பதாக இருந்தாலும், நடுவு நிலை நீங்கி உண்டாகின்ற செல்வத்தை, அப்பொழுதே ஒழிய விடுக.

கருத்து: நடுவுநிலை தவறிய செல்வத்தை, அப்பொழுதே கைவிட்டுவிட வேண்டும்.

இலக்கணம்: விடல் தொழிற் பெயர்.

## 9. அடக்கமுடைமை

**பதவுரை:** யாகாவாராயினும் — தம்மால் காக்கப்படுவன எல்லாவற்றையும் காக்க மாட்டாராயினும், நா காக்க—நா ஒன்றினையாவது காக்க, காவாக்கால்—அதனைக் காவாராயின், சொல் இழுக்குப்பட்டு—சொற்குற்றத்தின் கண்பட்டுத் தாமே, சோகாப்பர்—துன்புறுவர்.

**தெளிவுரை:** தம்மால் காக்கப்படுவன எல்லாவற்றையும் காக்க மாட்டாராயினும், நா ஒன்றினையாவது காக்க வேண்டும். அதனைக் காவாராயின், சொற் குற்றத்தின்கண் பட்டுத் தாமே துன்புறுவர். ஆதலால் நாவடக்கம் வேண்டும்.

**கருத்து:** எதைக் காவாவிட்டாலும், நா ஒன்றினையாவது காத்தல் வேண்டும்.

**இலக்கணம்:** காக்க—வியங்கோள் வினைமுற்று

## 10. பொறையுடைமை

**பதவுரை:** என்றும்—எப்பொழுதும், இறப்பினை-பிறர் செய்த குற்றத்தை, பொறுத்தல்—பொறுகக. அதனை மறத்தல்—அதனை மனத்தில் வைத்துக் கொள்ளாது அக்கணமே மறத்தல், அதனினும் நன்று—பொறுத்தலைவிட நன்மையானது.

**தெளிவுரை:** எப்பொழுதும் பிறர் செய்த குற்றத்தைப் பொறுத்தல் வேண்டும்; அதனை அக்கணமே மறத்தல் பொறுத்தலை விட நல்லது.

**கருத்து:** பிறர் குற்றங்களைப் பொறுத்தல் நல்லது; பொறுத்தலைவிட மறத்தல் நல்லது.

**இலக்கணம்:** பொறுத்தல்—வியங்கோள் வினைமுற்று

## 11. புறங்கூறாமை

**பதவுரை:** கண் நின்று — (ஒருவன்) கண்ணெதிரே நின்று, கண் அற—கருணையற்ற (இழிந்த சொற்களை), சொல்லினும் — ஒருவன் சொன்னாயினும், முன் இன்று — அவன் கண் எதிரில் இல்லாத பொழுது, பின் நோக்கா — பின் விளைவைக் கருதாத, சொல்—சொல்லை, சொல்லற்க—சொல்லாதொழிக.

**தெளிவுரை:** ஒருவன் கண்ணெதிரே நின்று, கருணையற்ற இழிந்த சொற்களைச் சொல்லினும், அவன கண் எதிரில் இல்லாத பொழுது, பின் விளைவைக் கருதாத சொல்லைச் சொலலாதொழிக.

**கருத்து:** ஒருவனை முன்னிலையில் இகழினும், பின் இகழாதிருப்பது நல்லது.

இலக்கணம்: சொல்லினும்—எதிர்மறை உம்மை
சொல்லற்க—எதிர்மறை வியங்கோள் வினைமுற்று
பின்—ஆகு பெயர்
நோக்கா—ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

## 12. பயனில சொல்லாமை

பதவுரை: சொல்லில்—சொற்களில், பயன் உடைய—பயன் தரும் சொற்களை, சொல்லுக—சொல்லுவார்களாக, சொல்லில்—சொற்களில், பயன் இலா—பயன் தராத சொற்களை, சொல்லற்க—சொல்லாதிருப்பார்களாக.

தெளிவுரை: சொற்களில் பயன்தரும் சொற்களை சொல்லுவார்களாக; பயன் தராத சொற்களைச் சொல்லாதிருப்பார்களாக.

கருத்து: பயன்தரும் சொற்களையே பேச வேண்டும்.

இலக்கணம்: சொல்லுக — உடன்பாட்டு வியங்கோள் வினைமுற்று.

பயன் இலா—ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

## 13. தீவினையச்சம்

பதவுரை: தன்னைத்தான் காதலன் ஆயின் — (ஒருவன்) தன்னைத்தான் நேசிப்பவனாயின், தீவினைப்பால் எனைத்து ஒன்றும் — தீவினை எவ்வளவு சிறிதாயினும், துன்னற்க (பிறர்க்குச்) செய்யாது ஒழிக.

தெளிவுரை: ஒருவன் தன்னைத்தான் நேசிப்பவனாயின், தீவினையைச் சிறிதளவும் பிறர்க்குச் செய்யக்கூடாது.

கருத்து: தீவினையைச் சிறிதளவும் பிறர்க்குச் செய்யாதிருக்க வேண்டும்.

இலக்கணம்: துன்னற்க — எதிர்மறை வியங்கோள் வினைமுற்று.

## 14. ஈகை

பதவுரை: ஆற்றுவார் ஆற்றல் — தவம் செய்கிறவர்களின் திறமை, பசி ஆற்றல்—தம் பசியைப் பொறுத்துக் கொள்வதாகும், (அதுகூட) அப்பசியை மாற்றுவார் ஆற்றலின் பின்-அந்தப் பசியை அது அடைந்தவர்களிடத்தில் இல்லாது போகும்படி, மாற்றி வைக்கிறவர் திறமைக்குப் பிற்பட்டதே.

தெளிவுரை: தவ வலிமையுடையவரின் வலிமை தம் பசியைப் பொறுத்தல்; அவ்வலிமைகூட அங்ஙனம் பொறுத்தற்கு அரிய பசியைத் தம ஈகையால் மாற்றுபவரின் ஆற்றலுக்குப் பிற்பட்டதே.

கருத்து: பசியால் வருந்துவோரின் பசியைப் போக்குவதே மேலான வலிமையாகும்.

இலக்கணம்: ஆற்றுவார், மாற்றுவார்—வினையால் அணையும் பெயர்கள்.

## 15. புகழ்

பதவுரை: புகழ்பட — (தமக்குப்) புகழ் உண்டாகுமாறு, வாழாதார் — வாழத் தெரியாதவர், தம் நோவார் — தம்முடைய நிலைக்கு வருந்தாராய், தம்மை இகழ்வாரை — தம்மை இகழ்ந்து கூறுபவர் மீது, நோவது எவன்?—வருத்தங் கொள்வது ஏன்?

தெளிவுரை: தமக்குப் புகழ் உண்டாகுமாறு வாழத் தெரியாதவர், தம்மை நொந்து கொள்ளாமல், தம்மை இகழ்வாரை நோவதில் பொருளே இல்லை.

கருத்து: தமக்குப் புகழ் உண்டாகுமாறு வாழ வேண்டும்.

இலக்கணம்: வாழாதார் — எதிர்மறை வினையால் அணையும் பெயர்

இகழ்வாரை—உடன்பாட்டு வினையால் அணையும் பெயர்

## 16. கள்ளாமை

பதவுரை: களவினால் ஆகிய ஆக்கம் — களவினால் சேர்த்த பொருள், ஆவது போல—வளர்வது போலத் தோன்றி, அளவு இறந்து கெடும்—தன் எல்லையைக் கடந்து கெடும்.

தெளிவுரை: களவினால் சேர்த்த பொருள் வளர்வது போலத் தோனறி, தன எல்லையைக கடந்து கெடும்.

கருத்து: களவினால் சேர்த்த பொருள் அழிந்துவிடும்.

இலக்கணம்: கெடும்—'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினைமுற்று.

## 17. வாய்மை

பதவுரை: தன் நெஞ்சு அறிவது-ஒருவன் தன் மனம் அறிந்த ஒன்றை, பொய்யற்க—(பிறர் அறியமாட்டார்) என்று பொய்யாது ஒழிக, பொய்த்தபின்—அவ்வாறு பொய்த்தானாயின், தன் நெஞ்சே தன்னைச் சுடும் — அதனை அறிந்த தன் மனமே சாட்சியாக நின்று வருத்தும்.

தெளிவுரை: ஒருவன் தன் மனம் அறிந்த ஒன்றை, பிறர் அறியமாட்டார் எனறு பொய்யாது ஒழிக. அவ்வாறு பொய்த்தானாயின், அதனை அறிந்த தன் மனமே சாட்சியாக நின்று வருத்தும்.

கருத்து: ஒருவன் மனமறிந்து பொய் சொன்னால், அவன் மனமே அவனைக் கெடுக்கும்.

இலக்கணம்: பொய்யற்க — எதிர்மறை வியங்கோள் வினைமுற்று.

சுடும்—'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினைமுற்று.

## 18. வெகுளாமை

பதவுரை: நகையும் உவகையும் — (ஒருவனுடைய) முகத்தில் தோன்றும் சிரிப்பையும், உள்ளத்தில் தோன்றும் மகிழ்ச்சியையும், கொல்லும் சினத்தின் — கொல்லும் கோபத்தை விட, பிறவகை யும் உளவோ? — பிறவகைகளும் உண்டோ?

தெளிவுரை: ஒருவனுடைய முகத்தில் தோன்றும் சிரிப்பை யும், உள்ளத்தில் தோன்றும் மகிழ்ச்சியையும் கொல்லும் கோபத்தை விடப் பிற வகைகளும் உண்டோ?

கருத்து: முகமலர்ச்சியையும், மன மகிழ்ச்சியையும் கெடுக் கும் சினத்தை விட்டொழிக.

இலக்கணம்: கொல்லும் — செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று, உளவோ — எதிர்மறை ஓகாரம்.

## 19. இன்னா செய்யாமை

பதவுரை: இன்னா செய்தாரை ஒறுத்தல் — தனக்குத் துன் பஞ் செய்தவர்களைத் தண்டித்தல், அவர் நாண — அவர்கள் வெட் கப்படும்படி, நல்நயம் செய்துவிடல் — அவர்களுக்கு நல்ல உதவி களைச் செய்து விடல்.

தெளிவுரை: தனக்குத் துன்பஞ் செய்தவர்களைத் தண்டித்தல், அவர்கள் வெட்கப்படும்படி, அவர்களுக்கு நல்ல உதவிகளைச் செய்து விடல் ஆகும்.

கருத்து: துன்பஞ் செய்தவரைத் தண்டித்தலாவது, அவர் நாணும்படி நன்மை செய்தலாகும்.

இலக்கணம்: ஒறுத்தல் — தொழிற்பெயர், நாண — 'செய' என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

## 20. இறைமாட்சி

பதவுரை: முறை செய்து — அறநெறி நின்று, காப்பாற்றும் மன்னவன் — (குடிமக்களைக்) காக்கும் அரசன், மக்கட்கு — மக்க ளுக்கு, இறையென்று — தலைவன் என்று, வைக்கப்படும் — கருதப் படுவான்.

தெளிவுரை: அறநெறி நின்று, குடி மக்களைக் காக்கும் அர சன், மக்களுக்குத் தலைவன் என்று கருதப்படுவான்.

கருத்து: முறைப்படி ஆட்சி செய்து, குடி மக்களைக் காக்கும் அரசன், தெய்வமாகப் போற்றப்படுவான்.

இலக்கணம்: காப்பாற்றும் — பெயரெச்சம்.

## 21. கல்வி

பதவுரை: ஒருவற்கு — ஒரு மனிதனுக்கு, கேடு இல் — அழிவு இல்லாத, விழுச் செல்வம் — சிறந்த செல்வம், கல்வி — கல்வியேயாகும், மற்றையவை மாடு அல்ல — (அது நீங்கிய மணியும் பொன்னும்) செல்வமல்ல.

தெளிவுரை: ஒரு மனிதனுக்குக் கேடற்ற செல்வம் கல்வியேயாகும். அது நீங்கிய பிற செல்வங்கள் செல்வங்கள் ஆகா.

கருத்து: ஒருவனுக்கு அழிவற்ற செல்வம் கல்வியேயாகும்.

இலக்கணம்: மற்றயவை — பலவின்பால் வினையாலணையும் பெயர், இல் — கடைகுறை.

## 22. கேள்வி

பதவுரை: கற்றிலன் ஆயினும் — (ஒருவன்) கல்லாதவனாக இருந்தாலும், கேட்க — கற்றறிந்தார் சொல்வதையாவது கேட்க, அஃது — அவ்வாறு கேட்கப்பட்ட, கேள்வி — கேள்வியானது, ஒருவற்கு — ஒருவனுக்கு, ஒற்கத்தின் — தளர்ச்சி வந்த காலத்து, ஊற்றாம் துணை — ஊன்று கோல் போல உதவும்.

தெளிவுரை: (ஒருவன்) கல்லாதவனாக இருந்தாலும், கற்றறிந்தார் சொல்வதையாவது கேட்க; அவ்வாறு கேட்கப்பட்ட கேள்வியானது, ஒருவனுக்கு, தளர்ச்சி வந்த காலத்து, ஊன்று கோல் போல உதவும்.

கருத்து: கற்காவிட்டாலும் கற்றவர் கூறுவதையாவது கேட்க வேண்டும்.

இலக்கணம்: கற்றிலன் — எதிர்மறை வினையால் அணையும் பெயர், கேட்க — உடன்பாட்டு வியங்கோள் வினைமுற்று.

## 23. குற்றங்கடிதல்

பதவுரை: பழி நாணுவார் — பழியை அஞ்சுவார், தினைத் துணையாம் குற்றம் வரினும் — தம் கண் தினையின் அளவாம் குற்றம் வந்ததாயினும், அதனை அவ்வளவாக அன்றி, பனைத்துணையாகக் கொள்வர் — பனையின் அளவாகக் கொள்வர்.

தெளிவுரை: பழியை அஞ்சுவார், தம் கண் தினையின் அளவாம் குற்றம் வந்ததாயினும், அதனை அவ்வளவாக அன்றிப் பனையின் அளவாகக் கொள்வர்.

கருத்து: தமக்குத் தினையளவு பழிவரினும், பெரியோர் மிகவும் வருந்துவர்.

இலக்கணம்; பழிநாணுவார் — வினையால் அணையும் பெயர், தினைத்துணை, பனைத்துணை — 6 ஆம் வேற்றுமைத் தொகைகள்.

## 24. தெரிந்து செயல் வகை

**பதவுரை:** கருமம் — செய்யத் தக்க கருமமும் முடிக்கும் உபாயத்தையும், எண்ணித் துணிக — எண்ணித் தொடங்குக. துணிந்த பின் — தொடங்கி வைத்துப் பின், எண்ணுவம் என்பது இழுக்கு — எண்ணக்கடவோம் என்று ஒழிதல் குற்றம் ஆதலான்.

**தெளிவுரை:** செய்யத்தக்க கருமமும் முடிக்கும் உபாயத்தையும் எண்ணித் தொடங்குக; தொடங்கி வைத்துப்பின், எண்ணக் கடவோம் என்று கூறுவது குற்றமாகும்.

**கருத்து:** எவ்வகைச் செயல்களையும் ஆராய்ந்த பின்னரே செயலில் ஈடுபட வேண்டும்.

**இலக்கணம்:** துணிக — வியங்கோள் வினைமுற்று, தொடங்குக — வியங்கோள் வினைமுற்று.

## 25. காலம் அறிதல்

**பதவுரை:** காலம் கருதி — காலம் அறிந்து, இடத்தால் — இடத்தோடு பொருந்த, செயின் — (ஒரு வினையைச்) செய்யுமொருவன், ஞாலம் கருதினும் — உலகம் முழுமையும் தானே ஆளக் கருதினாலும், கைகூடும் — கைவரப் பெறலாம்.

**தெளிவுரை:** காலமும் இடமும் அறிந்து ஒரு வினையைச் செய்பவன், நிலவுலக முழுவதையும் தான் ஒருவனே ஆளக் கருதினாலும், கைகூடப் பெறுவான்.

**கருத்து:** காலம் அறிந்து இடத்தோடு பொருந்த ஒரு செயலைச் செய்ய வேண்டும.

**இலக்கணம்:** ஞாலம் — இடவாகு பெயர், செயின் — வினையெச்சம்.

## 26. தெரிந்து தெளிதல்

**பதவுரை:** குணம் நாடி — குணத்தை ஆராய்ந்து, குற்றமும் நாடி — குற்றத்தையும் ஆராய்ந்து, அவற்றுள் மிகை நாடி — அவற்றுள் எது அதிகம் என்பதை ஆராய்ந்து, மிக்க கொளல் — மிகுதியானது எதுவோ அதைக் கொள்ள வேண்டும்.

**தெளிவுரை:** ஒருவனுடைய குணங்களையும், குற்றங்களையும் ஆராய்ந்து, மிக்கக் குணமுடையோனையே ஏற்றுக் கொள்ள வேண்டும்,

**கருத்து:** குணம் நாடி, குற்றமும் நாடி, எது மிகுதியோ அதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**இலக்கணம்:** கொளல் — வியங்கோள் வினைமுற்று.

## 27. சுற்றந்தழால்

பதவுரை: செல்வம் பெற்றத்தால் பெற்ற பயன் — செல்வம் பெற்ற அதனுல் ஒருவன் பெற்ற பயனுவது, சுற்றத்தால் தான் சுற்றப்பட ஒழுகல் — தன் சுற்றத்தால் தான் சூழப்படும் வகை அதனைத் தழீஇ ஒழுகுதல்

தெளிவுரை: செல்வம் பெற்ற அதனுல் ஒருவன் பெற்ற பயனுவது, தன் சுற்றத்தால் தான் சூழப்படும் வகை அதனைத் தழீஇ ஒழுகுதல்.

கருத்து: செல்வம் பெற்ற ஒருவன், உறவினருடன் கூடி வாழ வேண்டும்.

இலக்கணம்: ஒழுகல் — தொழிற்பெயர்

## 28. கொடுங்கோன்மை

பதவுரை: அல்லல்பட்டு ஆற்ருது — கொடுங்கோன்மையால் துன்பப்பட்டு பொறுக்க முடியாது, அழுத கண்ணீர் அன்றே — குடிமக்கள் அழுது வடிக்கும் கண்ணீர் அல்லவா, செல்வத்தைத் தேய்க்கும்படை — செல்வத்தை அழித்து விடும் பகையாவர்.

தெளிவுரை: கொடுங்கோன்மையால் துன்பப்பட்டு, பொறுக்க முடியாது, குடிமக்கள் அழுது வடிக்கும் கண்ணீர் அல்லவா, செல்வத்தை அழித்து விடும் பகையாவர்.

கருத்து: முறை செய்யாமையால் துன்பமடைந்த குடிமக்கள் அழுத கண்ணீர் அரசனுடைய செல்வத்தை அழிக்கும்.

இலக்கணம்: அழுத கண்ணீர் — பெயரெச்சம்

## 29. ஆள்வினையுடைமை

பதவுரை: தெய்வத்தால் ஆகாது எனினும் —(முயன்று செய்யும் செயல்) தெய்வத்தால் தடை செய்யப்பட்டாலும், முயற்சி — இடை விடாத முயற்சியோடு, தன் மெய் வருத்த—தன் உடலை வருத்தி உழைக்க, கூலி தரும் — (அந்த உழைப்பிற்கேற்ற) பயன் தரும்.

தெளிவுரை: முயன்று செய்யும் செயல் தெய்வத்தால் தடை செய்யப்பட்டாலும், இடைவிடாத முயற்சியோடு, தன் உடலை வருத்தி உழைக்க, அந்த உழைப்பிற்கேற்ற பயன் தரும்.

கருத்து: ஊழின் காரணமாகப் பயன் இல்லாது போனுலும், மெய் வருந்திய முயற்சியின் அளவு பயன் கொடுக்கும்.

இலக்கணம்: தரும் — 'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினை முற்று.

## 30. சொல் வன்மை

பதவுரை: பிறிது ஓர் சொல் அச்சொல்லை — இன்னொரு சொல் அந்தச் சொல்லைக் காட்டிலும், வெல்லுஞ் சொல் இன்மை அறிந்து — சிறந்த சொல்லாக இல்லையென்பதை அறிந்து, சொல லைச் சொல்லுக — சொல்லைச் சொலல் வேண்டும்.

தெளிவுரை: இன்னொரு சொல் அந்தச் சொல்லைக் காட்டி லும் சிறந்த சொல்லாக இல்லை என்பதை அறிந்து, சொல்லைச் சொல்ல வேண்டும்.

கருத்து: சொல்லக் கருதிய சொல்லைப் பிறிதோர் சொல் வெல்லாதிருத்தலை அறிந்து சொல்ல வேண்டும்.

இலக்கணம்; சொல்லுக — உடன்பாட்டு வியங்கோள் வினை முற்று, வெல்லும் சொல் — பெயரெச்சம்.

## 31. வினைத்திட்பம்

பதவுரை: இன்பம் பயக்கும் வினை — இன்பந்தரும் செயல் களை, துன்பம் உறவரினும் — துன்பம் மிகுதியாக வருமாயினும், துணிவு ஆற்றிச் செய்க — துணிந்து முயற்சியுடன் செய்க.

தெளிவுரை: இன்பந்தரும் செயல்களை, முதற்கண் துன்பம் மிகுதியாக வந்தாலும், தளராது துணிவுடன் செய்க.

கருத்து: முதற்கண் மெய், முயற்சியால் தமக்குத் துன்பம் மிக வருமாயினும், அது நோக்கித் தளராது, முடிவின் கண் இன பம் பயக்கும் வினையைத் திட்பமுடையராய்ச் செய்க.

இலக்கணம்: செய்க — வியங்கோள்வினைமுற்று.

## 32. நட்பு

பதவுரை; முகநக நட்பது நட்பு அன்று — கண்டவழி அக மொழிய முகமாத்திரமே மலரும் வகையில் நட்பாவது நட்பாகாது; நெஞ்சத்து அகம்நக நட்பது நட்பு — அன்பால் அகமும் மலர நட் பதே நட்பாகும்.

தெளிவுரை: கண்டவழி அகமொழிய முகமாத்திரமே மலரும் வகையில் நட்பாவது நட்பாகாது; அன்பால் அகமும் மலர நட்பதே நட்பாகும்.

கருத்து: நெஞ்சத்தால் அகம் மலர நட்பதே நட்பாகும்.

இலக்கணம்: நட்பு — தொழிற்பெயர்.

## 33. குடிமை

பதவுரை: குடிப்பிறந்தார் — நல்ல குடியிற் பிறந்தவர்கள், ஒழுக்கமும் வாய்மையும் நாணும் — நல்லொழுக்கமும், உண்மையும், பழிக்கஞ்சுவதும்; இம்மூன்றும் — ஆகிய இம்மூன்று குணங்களும். இழுக்கார் — தவறமாட்டார்கள்.

தெளிவுரை: நல்ல குடியிற் பிறந்தவர்கள் நல்லொழுக்கமும், உண்மையும், பழிக்கஞ்சுவதும் ஆகிய இம் மூன்று குணங்களும் தவற மாட்டார்கள்.

கருத்து: நல்ல குடிப் பிறந்தவர் ஒழுக்கம், உண்மை, நாணம் இவற்றிலிருந்து தவறூர்.

இலக்கணம்: மூன்றும் — முற்றும்மை, குடிப்பிறந்தார் — ஏழாம் வேற்றுமைத் தொகை.

## 34. மானம்

பதவுரை: குன்றின் அனையாரும் — (குடிப்பிறப்பால்) மலை போல உயர்ந்தவரும், குன்றுவ — (தாம் தாழ்வு அடைவதற்குக்) காரணமாகிய செயல்களை, குன்றி அனைய — குன்றிமணியளவாயினும் செயின் — செய்வாராயின், குன்றுவர் — தாழ்ச்சியை அடைவர்.

தெளிவுரை: குடிப் பிறப்பால் மலை போல் உயர்ந்தவரும், தாம் தாழ்வு அடைவதற்குக் காரணமாகிய, செயல்களை, குன்றி மணியளவாயினும், செய்வாராயின், தாழ்ச்சியை அடைவர்.

கருத்து: உயர் குடிப்பிறந்தவர் தாம் தாழ்வடைவதற்கான செயல்களைச் சிறிதே செய்தாலும் பெருமையை இழப்பர்.

இலக்கணம்: குன்றுவ — பலவின் பால் வினையால் அணையும் பெயர், செயின் — வினையெச்சம்.

## 35. குடி செயல் வகை

பதவுரை: குடிசெய்வல் என்னும் ஒருவற்கு — குடியை உயரச் செய்வேன் என்னும் உறுதியையுடைய ஒருவனுக்கு, தெய்வம்- கடவுள், மடிதற்று — உடையை இறுக உடுத்திக் கொண்டு, தான் முந்துறும் — தானாகவே முன்னால் வரும்.

தெளிவுரை: குடியை உயரச் செய்வேன் என்னும் உறுதியையுடைய ஒருவனுக்கு, கடவுள் இறுக உடையை உடுத்திக்கொண்டு, தான் முந்துறும் — தானாகவே முன்னால் வரும்.

கருத்து: தன் குடியை உயரச் செய்யும் எண்ணமுடன் உறுதியான செயல்களைச் செய்பவருக்கு, தெய்வம் ஆடையை இறுக்கக் கட்டிக் கொண்டு, உதவி செய்யத்தானே முன் வந்து நிற்கும்.

இலக்கணம்: செய்வல் — தன்மை ஒருமை வினைமுற்று.

## (ஆ) நாலடியார்

**முன்னுரை:** நான்கு அடிகளையுடைய வெண்பாக்களினால் ஆகிய நூல. நான்கு + அடி — நான்காகிய அடிகளை உடைய வெண்பா. பண்புத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. நூலை உணர்த்தியதால் கருவியாகு பெயர். ஆர் — சிறப்பு விகுதி. நூலின் வேறு பெயர்கள், நாலடி நானூறு, வேளாண் வேதம்.

**நூலின் அமைப்பு:** குறளைப்போலவே மூன்று பால்கள்; பதினொரு இயல்கள் கொண்டது. 40 அதிகாரங்கள் கொண்டது. அதிகாரம் ஒன்றுக்குப் பத்துப் பாடல்கள் வீதம் 400 பாடல்கள் உள்ள நூல்.

**நூல் வரலாறு:** எண்ணாயிரம் சமண முனிவர்கள், கொடிய, பஞ்சங் காரணமாகச் சோழ நாட்டிலிருந்து பாண்டியநாடு வந்து பாண்டியனின் ஆதரவு பெற்று வாழ்ந்து வந்தனர். சோழ நாட்டில் பஞ்சம் நீங்கியது தெரிந்ததும், அங்குச் செல்ல விரும்பிய முனிவர்கள் பாண்டியனின் அநுமதி கோரினர். பாண்டியன் எக்காரணத்தாலோ, அநுமதி தராமல் இருந்தான். ஆகவே, சமண முனிவர்கள், ஆளுக்கு ஒவ்வோர் பாடலைப்பாடி, தாம் அமரும் இருக்கைகளினடியில் வைத்து விட்டு, அரசனிடம் சொல்லாமல் சோழ நாடு சென்று விட்டனர். மறு நாள், பாண்டியன் சீற்றங்கொண்டு முனிவர்கள் எழுதி வைத்த ஓலைகளை வையைப் பேராற்றில் எறியும்படி ஆணையிட்டான் அவ்வாறு எறியப்பட்ட பொழுது 400 ஓலை நறுக்குகள் நீரை எதிர்த்து வந்தன. அவவோலைகளை எடுத்துத் தொகுக்கப்பட்ட நூலே நாலடியார். தொகுத்தவர் பதுமனார் என்னும புலவர் ஆவர். இந்நூல பதினெண் கீழ்க் கணக்கு நூல்களில் ஒன்று. நூலின் காலம கடைச்சங்க காலம.

**பதவுரை:** வடுஇலா — குற்றமில்லாத, வையத்து — உலகத்தில், மன்னிய மூன்றில் — நிலைபெறறு விளங்கும் உறுதிப்பொருள்களான அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றனுள், நடுவனது எய்த — நடுவில் நின்றதான பொருள் என்பதை ஒருவன் அடைய, இருதலையும் எய்தும் — அது காரணமாக அதன் இரு பக்கத்தனவான 'அறம்' 'இன்பம்' என்னும் இரண்டையும் அவன் அடைவான், நடுவனது எய்தாதான — அவ்வாறு நடுவில நின்றதான செல்வப் பொருளை அடையாதவன், உலைப்பெய்து அடுவது போலும் துயர் — கொல்லன் உலையில் இட்டு இரும்பைக் காய்ச்சுவது போலும் வறுமைத் துன்பத்தை, எய்தும் — அடைந்து நைவன்.

**தெளிவுரை:** இவ்வுலகில் நிலை பெற்று விளங்கும் அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்று பொருள்களில், ஒருவன் நடுவில் இருக்கின்ற பொருளை அடைவானானால, அவன் முதலில் உள்ள அறத்தையும், இறுதியில் உள்ள இன்பத்தையும் அடைவான். அப்பொருளை அவன் அடையவில்லையானால், கொல்லனுடைய உலைக்

களத்திலே இட்டுக் காய்ச்சப்படுவதனுலாகும் துன்பத்தைப போனற துன்பததை அடைவான.

கருத்து: தக்கோர்க்குப் பொருள் ஏனையெல்லா அறங்களை யும் நலகும.

இலக்கணம்: இலா — ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச் சம், எய்தாதான் — எதிர்மறைவினையால அணையும பெயர், உலைப பெய்து — 7 ஆம் வேறறுமைத தொகை.

## 2. நல்லினஞ் சேர்தல்

பதவுரை: பாலோடு அளாய நீர் — பாலோடு கலந்த நீர் பாலாகுமலலது — பாலாகித் தோனறு மல்லது, நீராய் நிறந தெரிநது தோன்ருது, தேரின் — ஆராய்ந்தால், சிறியார் சிறுமை யும — சிறியாருடைய குறைபாடும, நல்ல பெரியார் பெருமையைச் சார்ந்தது — உயர்நதோருடைய பெருந்தன்மையைச் சேர்தலால, தோனருது ஆம — தோன்ருது ஆகும.

தெளிவுரை: பாலோடு கலந்த தண்ணீர், பாலாகித் தோன் றுமேயனறி, தண்ணீரின் நிறம பெறறுத் தோன்ருது. அதுபோல பெரியாரோடு சேர்தலால, சிறியாருடைய குறைபாடும் தோன்ருது மறையும்.

கருத்து: மக்கள் பெரியாரோடு சேர்ந்து, தம் குறை நீங்கிப் பெருமையயடைதல வேணடும.

இலக்கணம்: சிறியார், பெரியார் — குறிப்பு வினையால் அணை யும் பெயர்கள். பாடல எடுததுக்காட்டுவமையணி.

## 3. அறிவுடைமை

பதவுரை: எறிகடல் தண் சேர்ப்ப — அலைகள் வீசுகின்ற கடலின குளிர்ந்த கரையை உடையவனே, கடல் சார்ந்தும் — கடலையடுத்தும, இன்னீர் பிறக்கும் — இன்சுவை மிக்க ஊற்று நீர் தோன்றுதல உண்டு; மலை சார்ந்தும் — மலையை யடுத்தும், உப்பு ஈண்டு உவரி பிறத்தலால — உவர்ப்பு மிகக உப்பு நீர் உண்டாத லால், மக்கள் எனபார் — பகுத்தறிவுடைய மக்களென்று சிறப் பிககப்படுவோர், இனத்தனையர் அல்லர் — தமது சார்போடொத்த இயல்பினர் அல்லர், மனத்து அனையர் — தத்தம் இயற்கையறிவோ டொதத நிலையினராவர்.

தெளிவுரை: அலைகள் வீசுகின்ற கடலின் குளிர்ந்த கரையை உடையவனே! கடலையடுத்தும் இன்சுவை மிக்க ஊற்று நீர் தோன் றுதல் உண்டு. மலையையடுத்தும உவர்ப்பு மிக்க உபபு நீர் உண்டா தல உணடு. பகுத்தறிவுடைய மக்கள் என்று சிறப்பிக்கப்படு வோர் தமது சார்போடொத்த இயல்பினர் அல்லர்; தத்தம், இயற் கையறிவோடொத்த நிலையினர் ஆவர்.

இலக்கணம்: இன்னீர் — பண்புத் தொகை. எறி கடற்றண் சேர்ப்ப — ஆடூஉ முன்னிலை.

## 4. அறிவின்மை

பதவுரை: கல்லாது நீண்ட ஒருவன் — கல்வியறிவு பெருமல் வளர்ந்து விட்ட ஒருவன், உலகத்து — உலகத்தில், நல்லறிவாளர் இடைப்புக்கு — உயர்ந்த அறிவாளிகளின் அவையில், புக்கு — நுழைந்து, மெல்ல இருப்பினும் — இருக்குமிடம் தெரியாமல் இருந்தாலும், நாய் இருந்தற்றே — அங்கிலே ஒரு நாய் இருந்தாற் போன்ற தன்மையுடையதாகும், இராது — அவ்வாறு அடக்கமாக இராமல், உரைப்பினும் — ஏதானும் ஒன்று வாய் திறந்து கூறினும், நாய் குரைத்தற்று — நாய் குரைத்தாற்போன்ற தன்மையுடையதாகும்.

தெளிவுரை: கல்வியறிவு பெருமல் வளர்ந்து விட்ட ஒருவன், உலகத்தில் உயர்ந்த அறிவாளிகளின் அவையில் நுழைந்து, இருக்குமிடம் தெரியாமல் இருந்தாலும், அங்கிலே ஒரு நாய் இருந்தாற் போன்ற தன்மையை உடையதாகும், அவ்வாறு அடக்கமாக இராமல் ஏதேனும் ஒன்று வாய் திறந்து கூறினும் அது நாய் குரைத்தாற்போன்ற தன்மையை உடையதாகும.

கருத்து: கல்வியறிவு பெருதோர் நாயின் நிலையில் வைத்துக் கருதப்படுவர்.

இலக்கணம்: இராஅது — சொல்லிசையளபெடை
அற்றே — அசை.

## 5.

பதவுரை: கற்றறிந்த நாவினர் — கற்றுத் தெளிந்த நாவன்மையுடைய மேலோர், தம் சோர்வு அஞ்சி — தம் தவறுதலுக்கு அஞ்சி, சொல்லார் — மிகுதியாகப் பேசார், மற்றையராவார் (ஆனல்) கற்றறிவில்லா ஏனையோராவர், பகர்வர்–அவ்வச்சமின்றி யாதானும் பேசிக் கொண்டிருப்பர்; பனையின் மேல் வற்றிய ஓலை— பனை மரத்தில் நீர் வற்றிய உலர்ந்த ஓலை, கலகலக்கும் — கலகல வென்று ஓசையிட்டபடி இருக்கும், எஞ்ஞான்றும் பச்சோலைக்கு ஒலி இல்லை — ஆனல், நீர்ப்பசையோடு கூடிய பச்சை ஓலைக்கு எப்பொழுதும் ஒலி இல்லை.

தெளிவுரை: கற்றுத் தெளிந்த நாவன்மையுடைய மேலோர் தம் தவறுதலுக்கு அஞ்சி மிகுதியாகப் பேசார், ஆனல் கற்றறிவில்லா ஏனையோராவர் அவ்வச்சமின்றி, யாதானும் பேசிக்கொண்டிருப்பர். பனையின் மேல் நீர் வற்றிய உலர்ந்த ஓலை கலகலவென்று ஓசையிட்டபடி இருக்கும். ஆனல், நீர்ப்பசையோடு கூடிய பச்சை ஓலைக்கு எப்போதும் ஒலி இல்லை,

கருத்து: அறிவில்லாதார் எப்பொழுதும் ஆரவாரித்துக் கொண்டிருப்பார்கள்.

இலக்கணம்: வற்றிய — பெயரெச்சம், கலகல—இரட்டைக் கிளவி

## (இ) பழமொழி

முன்னுரை: பழமையாகிய மொழிகளையுடைய நூல். பண்புத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. பழமை+மொழி. ஒவ்வொரு பழமொழியை ஈற்றிலே கொண்டுள்ள நானூறு வெண்பாக்களை உடையது. பழமொழி நானூறு என்ற பெயரும் உடையது.

முதல் இரண்டு அடிகளில் ஆசிரியர் கூற விரும்பும் பொருளும், நான்காமடியில் ஒரு பழமொழியும், மூன்றுமடியில் பெரும்பாலும் ஆடூஉ முன்னிலையும், சிறுபான்மை மகடூஉ முன்னிலையும் அமைந்துள்ளன. இது முதல் நூல். பதினெண் கீழ்க்கணக்கு நூல் வகையைச் சேர்ந்தது.

ஆசிரியர்—முன்றுரையரையனர்
பிறப்பிடம்—முன்றுரை
சமயம்—சமணம்

### 1. அறிவுடைமை

பதவுரை: பாய் இருள் நீக்கும் மதியம் போல்—பரவிய இருளைப் போக்கும் கதிரவனைப் போல. பல்மீனும் நிலா காய்கலா ஆகும்—பல விண்மீன்களும் ஒன்றுகூடினாலும் நிலவை எறிக்க மாட்டா, (அதுபோல) அறிவிலார் ஆயிரவரானும் தொக்கக்கால்—அறிவு இல்லாதவர்கள் ஆயிரம் பேர் திரண்டனராயினும், மாயிரு ஞாலத்து—பெருமையையுடைய பெரிய இவ்வுலகின்கண், மாண்பு ஒருவன் போல் கலார்—அறிவினால் மாட்சிமைப்பட்ட ஒருவனைப் போல் விளங்கார்.

தெளிவுரை: (வானத்தில் உள்ள) பலவாகிய விண்மீன்களும் ஒன்று சேர்ந்தனவானாலும், பரந்த இருளைப் போக்குகின்ற திங்களைப் போல அவை ஒளியைத் (நிலவை) தாரா. (அதுபோல) அறிவில்லாதவர்கள் ஆயிரம் பேர்களாக ஒன்றுசேர்ந்தபொழுதும், மிகப்பெரிய இவ்வுலகின்கண் அறிவின் மாட்சியினை உடைய ஒருவனை ஒவ்வார்கள்.

கருத்து: அறிவிலார் பலர் திரண்டாலும் அறிவுடையான் ஒருவனை ஒவ்வார்.

இலக்கணம்: காய்கலா — எதிர்மறைப் பலவின்பால் வினை முற்று, ஆயிரவரானும்—'ஆனும்'' இடைகுறை, மாயிருள் — ஒரு பொருட் பன்மொழி, பாயிருள்—வினைத்தொகை, இப்பாடல எடுத்துக்காட்டுவமையணி.

2.

பதவுரை: பெருவரை நாட—பெரிய மலைநாட்டை உடையவனே!. திருஉடையர் ஆயின் — செல்வம் உடையவர்களுக்கு ஆயின, அருவிலை மாண்கலனும—(அவர்தம்) அரிய விலையுடைய மாட்சிமைப்பட்ட பூண்களும், ஆன்ற பொருளும் திரிந்தும் வரும — ஈறைந்த செலவமும் நிலை பெறுது மாறி வரும் இயல்பை உடையன, பிரிவு இன்று — (அறிவுச் செல்வம உடையோர்கு ஆயின் அவர் தம் செல்வம்) பிரிதல் இல்லை, அதனால்—அத் தன்மையால், திருவினும் திட்பம பெறும—செல்வத்தினும் அறிவே உயர்வைப் பெறுப,

தெளிவுரை: பெரிய மலைகள் பொருந்திய நாட்டை உடையவனே! செலவர்களின் மிக்க விலையினையுடைய மாடசிமைப்பட்ட அணிகலன்களும், நிறைந்த பொருள்களும அவர்களிடமே நிலைத்திராமல் மாறியும் வரும். ஆனல், அறிவுச் செல்வம் மாறுதல் இல்லாதது. அதனல், நிலையற்ற பொருள் செல்வத்தைக் காட்டிலும் நிலைத்த அறிவுச் செலவமே சிறப்பினைப் பெற்று விளங்கும்.

கருத்து: அறிவுச் செல்வம் பொருட் செல்வம் போல் பிரிதல் இல்லாமையால் அதனையே தேடுதல் வேண்டும்.

இலக்கணம்: பெருவரை நாட—ஆடூஉ முன்னிலை, மாண் கலன, அருவிலை, பெருவரை—பண்புத்தொகைகள், திருவினும— உயர்வு சிறப்புமமை.

## 3. ஒழுக்கம்

பதவுரை: நெடுவரை—பெரிய சக்கரவாளமாகிய மலைகளால் முற்றும—சூழப்பட்ட, நீராழி வரையகத்து-நீரையுடைய கடலால் வரையறுககபபட்ட பூமியினகண், ஈண்டிய கல தேயும—தொக்க மலைகள் தேய்வடையும், சொல் தேயாது — பழிச்சொல் மாறுதல் இல்லை, (ஆகையால்) கெடுவல எனப்பட்ட கண்ணும்—(இவர்க்கு இத்தீங்கு செய்து பழியை எய்தாதொழியின்) யான் கெடுவேன என்று கருதப்பட்ட இடத்தும, தனககு ஓர் வடு அலல செய்தலே வேண்டுப—தனக்கு ஒரு சிறிதும் பழியைப பயவாத செயல்களைச் செய்தலையே (ஒவ்வொருவனும்) விரும்புதல் வேண்டும்.

தெளிவுரை: பெரிய சக்கரவாளமாகிய மலைகளால் சூழப்பட்ட, நீரையுடைய கடலால் வரையறுக்கப்பட்ட பூமியின்கண் நெருங்கி உள்ள மலைகளும் ஒரு காலத்தில் தேய்வை அடையும், (ஆனல்) ஒருவன் பெற்ற பழிச்சொல்லோ என்றும் தேய்வடை

யாது. (ஆதலால்) இப் பழிச் செயலைச் செய்யாவிடின் யான் கெடுவேன் என்று ஒருவன் அறிந்தவிடத்தும், அவன் தனக்கு எவ்விதப் பழியும் தராதனவாகிய செயல்களையே செய்தல் வேண்டும்.

கருத்து: தான் அழியவரினும் பழியொடுபட்டவைகளைச் செய்ய வேண்டா.

இலக்கணம்: கெடுவல் — தன்மையொருமை வினைமுற்று. தேயாது—எதிர்மறை வினைமுற்று. நெடுவரை—பண்புத்தொகை, முற்று நீர்—வினைத்தொகை.

## 4.

பதவுரை: ஆவிற்கு அரும்பனி தாங்கிய மாலையும் — பசுக் கூட்டங்களுக்கு வந்த அரிய துன்பத்தை நீக்கிய திருமாலையும், கோவிற்குக் கோவலன் என்று உலகம் கூறும்—ஆநிரைகளுக்குத் தக்க இடையன் என்று உலகம் சொல்லும். (ஆகையால்) தேவர்க்கு மக்கட்கு எனல் வேண்டா—தேவர்க்கு உரைப்பது இது, மக்கட்கு உரைப்பது இது வெனல் வேண்டப்படுவதன்று, தீங்கு உரைக்கு நாவிற்கு—தீமையை எடுத்துக் கூறும் நாவினுக்கு. நல் குரவு இல்—வறுமை இல்லை.

தெளிவுரை: ஆநிரைகளுக்கு உண்டாகிய அரிய துன்பங்களை நீக்கிப் பாதுகாத்த திருமாலையும், பசுக்களுக்கே ஏற்ற இடையன் என்று புல்லர் உலகம இழித்துக் கூறும். (ஆதலால்) இது தேவர்களுக்குக் கூறும் சொல், இது மக்களுக்குக் கூறும் சொல் என்று சொற்களை வேறுபடுத்திக் கூறுதலை அறியார். ஏனெனில், பிறர் தீமைகளை எடுத்துக் கூறும் நாவிற்குச் சொற்களில் வறுமை இல்லை (நாவைப் படைத்த அவர்களுக்குச் சொற்களில் வறுமை இல்லை.)

கருத்து: பழித்துரைக்கப் புகுவார்க்கு உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்பதில்லை.

இலக்கணம்: உலகம்—இடவாகுபெயர், வேண்டா—எதிர்மறை வினைமுற்று, அரும்பனி—பண்புத்தொகை.

## 5. முயற்சி

பதவுரை: செல்நீர் அருவி மலை நாட—பரந்து செல்கின்ற அருவியை உடைய மலை நாடனே! தம்மால் முடிவதனை—தம்மால் முடிக்கலானதொரு செயலை, தாம் ஆற்றிச் செய்கல்லார் — தாம் முடித்துச் செய்ய மாட்டாதவராய், பின்னை ஒருவரால் செய்வித்தும் என்றிருத்தல்—பிறகு வேறொருவரால் செய்வித்துக்கொள்வோம் என்று சோம்பியிருத்தல், வெந்நீரும் ஆடாதார்—வெந்நீரிலும் குளியாதார், தீ பாய்ப வோ—தீயின்கண் பாய்வார்களோ? (இல்லை அதுபோல அதுவுமில்லையாம்)

தெளிவுரை: பாய்ந்து செல்லும் நீரருவி பொருந்திய மலை நாட்டையுடையவனே! வெந்நீரிலும் குளிக்காதவர் தீயில் பாய்வார்களோ? (பாயமாட்டார்கள்) ஆதலால், ஒருவர் தம்மால் செய்து முடிக்கக்கூடிய செயலை, தாமே செய்து முடிக்காதவராய், வேறொருவரால் செய்து முடித்துக் கொள்வோம் என்று எண்ணியிருத்தல் அறியாமையாகும்.

கருத்து: தம்மால் முடியும் செயலைத் தாமே செய்தல் வேண்டும்.

இலக்கணம்: செய்கலார் — முற்றெச்சம், பாய்பவோ—எதிர் மறை ஓகாரம். ஆடாதார் — எதிர்மறை வினையால் அணையும் பெயர், சென்னீர்—வினைத்தொகை, வெந்நீர்—பண்புத்தொகை.

## (ஈ) நீதிநெறி விளக்கம்

முன்னுரை: 102 பாடல்கள் கொண்ட நூல், நீதியின் வழிகளை விளக்கிக்காட்டும் நூல். ஒவ்வொரு பாடலும் உயர்ந்த நீதியைக் கொண்டது.

ஆசிரியர் — குமரகுருபரர். பிறப்பிடம் — ஸ்ரீவைகுண்டம். பெற்றோர் — சண்முகச் சிகாமணிக் கவிராயர், சிவகாமி அம்மையார், இயற்றிய நூல்கள் — கந்தர் கலிவெண்பா, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், மீனாட்சியம்மை இரட்டை மணிமாலை, மதுரைக் கலம்பகம், நீதிநெறி விளக்கம். காலம் — கி. பி. 17ஆம் நூற்றாண்டு.

### 1. கல்வியின் சிறப்பு

பதவுரை: சிறு உயிர்க்கு—குறைந்த வாழ்நாட்களை உடைய மக்களின் உயிர்களுக்கு, உற்ற துணை— தக்க துணை, கல்வியின் ஊங்கில்லை—கல்வியை விட வேறு இல்லை, (ஏனெனில் கல்வியானது) அறம் பொருள் இன்பமும் வீடும் பயக்கும்—ஒழுக்கமும் செல்வமும் இன்பமும் என்னும் மூன்றையும் வீடு பேற்றையும் கொடுக்கும், புறங்கடை நல்லிசையும் நாட்டும் — உலகத்தில் குற்றமற்ற புகழையும் நிலைநிறுத்தும். உறுங்கவல் ஒன்று உற்றுழியும் கை கொடுக்கும் — நேரக்கூடிய வருத்தமொன்று நேர்ந்த பொழுதும் கை கொடுத்து உதவி செய்யும்.

தெளிவுரை: (கல்வி) ஒழுக்கம் செல்வம் இன்பம் என்னும் மூன்றையும், வீடு பேற்றையும் கொடுக்கும் உலகத்தில் குற்றமற்ற புகழையும் நிலைநிறுத்தும். நேரக்கூடிய வருத்தமொன்று நேர்ந்த பொழுதும், கை கொடுத்து உதவி செய்யும். (ஆதலால்) குறைந்த வாழ்நாட்களை உடைய மக்கட்குத் தக்க துணை கல்வியைவிடப் பிறிதில்லை

**இலக்கணம்:** பயக்கும் — 'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினைமுற்று, நல்லிசை — பண்புத்தொகை, சிற்றுயிர் — பண்புத் தொகை.

## 2. கற்றவை போற்றல்

**பதவுரை:** தாம் வருந்திக் கற்றன — தாங்கள் வருந்திக் கற்ற நூற்பொருள்களை, ஓம்பாது — (மறந்து போகாதவாறு அடிக்கடி நினைத்துப்) பாதுகாக்காமல், மற்றும் சில — இன்னும் சில நூல்களை, பரிந்து கற்பான் தொடங்கல் — வருந்திக் கற்கத் தொடங்குதல், கைத்தலத்த கருந்தனம் — (ஒருவன்) கையில் இருப்பதான பணத்தை, உய்த்து சொரிந்திட்டு — வீசி எறிந்து விட்டு, ஆங்கு அரிப்பு அரித்து எய்த்துப் பொருள் செய்திடல் — எறிந்த அவ்விடத்தில் அரிப்பரித்து இளைத்துப் பொருள் சேர்ப்பது போலாகும்.

**தெளிவுரை:** தாம் வருந்திக் கற்ற நூற்பொருள்களை மறந்து போகாமலிருக்க, அடிக்கடி படிக்காமல், வேறு சில நூல்களை வருந்திக் கற்கத் தொடங்கல், கையில் இருக்கும் பணத்தை வீசியெறிந்துவிட்டு, எறிந்த அவ்விடத்தில் அரிப்பரித்து, இளைத்துப் பொருள் சேர்ப்பது போலாகும்.

**இலக்கணம்:** கருந்தனம்—பண்புத்தொகை, இடல்—தொழிற் பெயர், ஓம்பாது—எதிர்மறை வினையெச்சம்.

## 3. மேன் மேலும் கற்க

**பதவுரை:** தம்மின் மெலியாரை நோக்கி — தம்மைவிடச் செல்வத்தில் தாழ்ந்தவர்களை நோக்கி, தமது உடைமை அம்மா பெரிது என்று அகமகிழ்க — தமது செல்வம் அதிகம் என்று உள்ளம் மகிழ்க, தம்மினும் கற்றாரை நோக்கி—தம்மைவிடக் கல்வியிற் சிறந்தோரைக் கண்டு, நாம் கற்றதெல்லாம் — நாம் கற்ற கல்வியெல்லாம், எற்றே இவர்க்கு என்று — இவரோடு ஒப்பிடும் பொழுது எவ்வளவு தாழ்ந்தது என்று, கருத்து அழிக — உள்ளம் உடைக.

**தெளிவுரை:** தம்மைவிடச் செல்வத்தில் தாழ்ந்தவர்களை நோக்கி, தமது செல்வம் அதிகம் என்று மகிழ வேண்டும். தம்மை விடக் கல்வியிற்சிறந்தோரைக் கண்டு, நாம் கற்ற கல்வியெல்லாம் இவரோடு ஒப்பிடும் பொழுது எவ்வளவு தாழ்ந்தது என்று உள்ளம் உடைக.

**இலக்கணம்:** அம்மா—வியப்பிடைச் சொல், மகிழ்க—வியங்கோள் வினைமுற்று.

## 4. பெரும் புகழ் பெறச் செய்ய வேண்டுவது

பதவுரை: பிறரால் பெருஞ்சுட்டு வேண்டுவான்—பிறரால் மதிப்பதற்கான பெருமதிப்பை விரும்பும் ஒருவன், யாண்டும் — எப்பொழுதும், மறவாமே நோற்பது—எப்பொழுதும் மறவாமற் செய்யத்தக்கது, ஒன்று உண்டு — ஒன்று இருக்கின்றது (அது) பிறர் பிறர் சீர் எல்லாம் — பிறருடைய பெருமைகளை யெல்லாம், தூற்றி — மறைக்காமல் வெளியே பரப்பி, சிறுமை புறங்காத்து— அவர்களுடைய தீயவொழுக்கத்தை மட்டும் அங்ஙனம் வெளியே பரப்பாமற் காத்து, யார் யார்க்கும் தாழ்ச்சி சொலல்—எல்லாரிடத்திலும் பணிவான மொழிகளைச் சொல்லுதலாம்.

தெளிவுரை: பிறரால் மதிப்பதற்கான பெருமதிப்பை விரும்பு மொருவன், எப்பொழுதும் மறவாமற் செய்யத்தக்கது ஒன்றிருக்கின்றது. (அது) பிறருடைய பெருமைகளையெல்லாம் மறைக்காமல் வெளியே பரப்பி, அவர்கள் தீயவொழுக்கத்தை மட்டும் அங்ஙனம் வெளியே பரப்பாமற் காத்து, எல்லோரிடத்திலும் வணக்கமான மொழிகளையே பேசுதலாகும்.

இலக்கணம்: வேண்டுவான் — வினையால் அணையும் பெயர், பிறர் பிறர்—அடுக்குத் தொடர், புறங்காத்து — 2 ஆம் வேற்றுமைத்தொகை, சிறுமை—பண்புப் பெயர்.

## 5. கெடுவது காட்டும் குறிகள்

பதவுரை: நட்புப் பிரித்தல் — நண்பர்களைப் பகையாக்கிக் கொள்ளலும், பகை நட்டல்—பகைவர்களை நட்பாக்கிக்கொள்ளலும், ஒற்று இகழ்தல் — ஒற்றர்களை இழித்துரைத்தலும், பக்கத்தார் யாரையும் ஐயுறுதல்—பக்கத்திலுள்ள எல்லாரிடத்திலும் ஐயுறவு கொள்ளலும், தக்கார் நெடுமொழி கோறல் — பெரியோருடைய அறிவுரைகளை மீறலும், குணம் பிறிது ஆதல்—இயல்பான தன்மைக்கு மாறுதலும், (ஆக இந்த ஆறு பொருந்தாத செயல்களும்) கெடுவது காட்டும் குறி—பின்னால் வரும கெடுதிகளைக் காட்டும் அடையாளங்களாகும்.

தெளிவுரை: நண்பர்களைப் பகையாக்கிக் கொள்ளலும், பகைவர்களை நட்பாக்கிக் கொள்ளலும், ஒற்றர்களை இழித்துரைத்தலும், பக்கத்திலுள்ள எல்லாரிடத்திலும ஐயுறவு கொள்ளலும். பெரியோர்களுடைய அறிவுரைகளை மீறலும், இயல்பான தன்மைக்கு மாறுதலும் ஆக இந்த ஆறு பொருந்தாத செயல்களும் பின்னால் வரும் கெடுதிகளைக் காட்டும் அடையாளங்களாகும்.

இலக்கணம்: பிரித்தல், நட்டல், இகழ்தல், ஐயுறுதல், கோறல், ஆதல்—தொழிற் பெயர்கள், நெடுமொழி—பண்புத் தொகை.

**பிரித்தல்:**

நன்மை + இசை — நல்லிசை
ஊங்கு + இல்லை — ஊங்கில்லை
சிறுமை + உயிர் — சிற்றுயிர்
பெருமை + சுட்டு — பெருஞ்சுட்டு
ஒற்று + இகழ்தல் — ஒற்றிகழ்தல்
நெடுமை + மொழி — நெடுமொழி

## (உ) ஏலாதி

முன்னுரை: ஏலம் + ஆதி — ஏலாதி. ஏலம், இலவங்கம், சிறு நாவற்பூ, மிளகு, திப்பிலி, சுக்கு ஆகிய ஆறு பொருள்களால் செய்யப்பட்ட மருந்து உடற்பிணியைப் போக்குவது போல, இந்நூலின் செய்யுளில் சொல்லப்பட்டவை உளநோயைப் போக்குவன ஆதலின் இஃது இப்பெயரைப் பெற்றது.

ஆசிரியர் — கணிமேதையார், சமயம் — சமணம், காலம் — கி.பி 2ஆம் நூற்றாண்டு.

### 1. வீட்டினை அடையும் வழியைச் செய்க.

பதவுரை: பால் போலும் — பாலைப்போன்ற, சொல்லினாய் — மொழி பேசும் பெண்ணே! இளமை கழியும் — இளமைப்பருவம் நில்லாது மறையும், பிணிமூப்பு — நோயும் முதுமையும், இயையும் - வந்து சேரும், வளமை — செல்வமும், வலி — உடல் வலியும், இவை வாடும் — ஆகிய இவை குன்றும், உளநாளால் — கழிந்ததுபோக எஞ்சியுள்ள வாழ்நாளில், பாடே புரியாது — துன்பம் தரும் செயல்களைச் செய்துகொண்டிராமல், வீடே புரிதல் — வீடு பேற்றுக்கான தவ ஒழுக்கங்களையே விரும்பிச் செய்தல், விதி — முறையாகும்.

தெளிவுரை: பால்போலும் சொல்லினாய்! இளமை நில்லாது மறையும், நோயும் முதுமையும் வந்தடையும்; செல்வமும் வளமும் வாடும்; ஆகவே, இவ்வைந்தானும் வரும் துன்பத்தை நுகர விரும்பாது, வீடு பேற்றுக்கான அறச் செயலை ஆற்றுவதே முறை.

இலக்கணம்: பாடே, வீடே — பிரிநிலை ஏகாரம், சொல்லினாய் — மகடூஉ முன்னிலை, இளமை — பண்பாகு பெயர்.

### 2. பெரியோர்க்குரிய குணங்கள்

பதவுரை: கொல்லான் — ஓர் உயிரையும் கொலை செய்யான், கொலை புரியான் — பிறர் கொலை செய்தலையும் விரும்பான், பொய்யான் — பொய் சொல்லான். பிறர் மனைமேல் — பிறர்க்குரிய மனைவி மேல், செல்லான் — தனக்குரிமை விரும்பான், சிறியார் இனம் —

கீழ்மக்கள் கூட்டத்தை, சேரான்—இணங்கான், சொல்லும்—மறைவாய்ச் சொல்லபபடுகின்ற, மறையில்—மறைபொருள்களில், செவிஇலன்—செவி கொடான், தீச்சொற்கள்—தீய சொற்களைப் பேசுதலில், மூங்கை—ஊமை, இவை—ஆகிய இவ்வியல்புகள், இறையில்—பெருந்தன்மையில், பெரியாற்கு—பெரியவனுக்கு (உரியனவாம்)

தெளிவுரை: தான் ஒருயிரைக் கொல்லான், பிறர் கொன்ற கொலையினை விரும்பான், பொய் சொல்லான், பிறர்மனை விழையான், கீழினச் சேர்க்கை விரும்பான், பிறர்மறை கேட்க விரும்பான், பிறரைத் தீச்சொற் சொல்லுமிடத்து மூங்கை போலிருப்பான்; இவ்வேழு திறமைகளும் கொண்டோனே பெரியோன்.

இலக்கணம்: சொல்லான் — எதிர் மறை முற்றெச்சம், கோதாய்—மகடூஉ முன்னிலை, கொலை புரியான் — 2ஆம் வேற்றுமைத் தொகை.

### 3. காலனை நீக்க ஞான நூல் கற்க

பதவுரை: வாள் அஞ்சான்—பகைவனுடைய வாட்படைக்குப் பயப்படான், வன் கண்மை அஞ்சான்—கண்ணோட்டமின்மையை அஞ்சான், வனப்பு அஞ்சான் — ஆண்மைத்தோற்றத்துக்கு அஞ்சான், ஆள் அஞ்சான்—ஆட்சிக்கு அஞ்சான், ஆய்பொருள் அஞ்சான்—தெரிந்து தேடிய பொருளை அஞ்சான், (ஆயினும்) நாள் எஞ்சா—நாள் குறையாத, காலன் — கூற்றுவனுடைய, வரவு ஒழிதல்—வரவு நீங்குதலை; காணின்—ஒருவன் அடைய விரும்புவானுயின், வீடு எய்திய—வீடு பேற்றை அடையும் பொருட்டு ஏற்பட்ட, பாலின் நூல் — அருட்டன்மை பொருந்திய அறிவு நூல் ஒழுக்கங்களை, எய்தப்படுப—அடைதல் வேண்டும்.

தெளிவுரை: வாள் வெற்றியை அஞ்சான், தறுகண்மையை அஞ்சான், தோற்றப் பொலிவினை அஞ்சான், படையாளனென்று அஞ்சான், செல்வன என்று அஞ்சான், நாள் குறையாத கூற்றுவனுடைய வருகை நீங்குதலை ஒருவன் அடைய விருமபுவானுயின், வீடு பேற்றை அடையும் பொருட்டு, ஏற்பட்ட அருட்டன்மை வாய்ந்த அறிவு நூல் ஒழுக்கங்களை அடைதல் வேண்டும்.

இலக்கணம்: வாள் அஞ்சான்—2ஆம் வேற்றுமைத் தொகை. படும்—'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினைமுற்று. வண்கண்மை, தறுகண்மை—பண்புப்பெயர்கள்.

### 4. பண்டிதராய் வாழ்பவர்

பதவுரை: கற்றுரை—கற்றுவல்ல சான்றோரை, கற்றது — தாம் கற்ற கல்விப் பொருளை, உணரார் என-அறியமாட்டாரென்று, மதியார் — நினையாமலும், உற்றுரை—உறவினர் நண்பரையும், அன்னணமும்—அவ்வகையாக, ஓராமல்—அன்பில் உயர்வு தாழ்வு

கள் எண்ணுமலும், அற்றார்க்கு—பொருளற்ற வறிஞர்க்கும் பற்றற்ற துறவிகட்கும், உண்டி உறை உள் உடுக்கை—உணவும், மருந்தும், இடமும், உடையும், இவை ஈந்தார்—என்று இவற்றைக் கொடுக்கின்றவர்கள், பண்டிதராய்—அறிஞர்களாய், பயின்று—யாவராலும் மதிக்கப்பட்டு, வாழ்வார்— இனிது வாழ்வார்கள்.

**தெளிவுரை:** கற்றாரைக் கற்றிலரென்று மனத்திற்கொள்ளாதே, உற்றாரையும் உற்றாரென்று கொள்ளாதே, பொருளற்றார்க்குணவும், மருந்தும், உறைவிடமும், உடுக்கையும் பயின்று கொடுத்தார், அறிவுடையா ரென்று பிறரான் மதிக்கப்படுவர்.

**இலக்கணம்:** கற்றாரை, உற்றாரை — வினையால் அணையும் பெயர்கள், ஈந்தார் —வினையால் அணையும் பெயர்.

## 5 நூல் நோக்கி வாழ்பவன்

**பதவுரை:** வணங்கி—வணக்கமுடையவர்களாய், வழி ஒழுகி-நல்ல வழியிலே நடந்து, மாண்டார் சொல் கொண்டு — சான்றோர்களின் அறிவுரைகளை மேற்கொண்டு, நுணங்கிய நூல் — நுட்பமான அறிவு நூல்களை, நோக்கி— ஆராய்ந்து, நுழையா—அந்நூற்பொருள்களில் தன் அறிவைச் செலுத்தி, இணங்கிய பால் நோக்கி —பொருத்தமான பகுதிகளை ஆராய்ந்து,வாழ்வான்—அவற்றின்படி வாழ்கின்றவன், பழி இல்லா மன்னனுய்—வடுவில்லா வேந்தனுய், நூல் நுனித்து நோக்கி—அறிவு நூல்களையும் நுட்பமாய் ஆராய்ந்துணர்ந்து, வாழ்வான்—பெருவாழ்வு வாழ்வான்.

**தெளிவுரை:** பிறர்க்குப் பணிந்து, நெறியேயொழுகி, சான்ரேர்களின் அறிவுரைகளை மேற்கொண்டு, நுண்ணிய நூல்களையோதி அந்நூற்பொருள்களில் அறிவைச் செலுத்தி, பொருத்தமான பகுதிகளை ஆய்ந்து, அவற்றின்படி வாழ்கின்றவன்—அறிவு நூல்களையும் நுட்பமாய் ஆராய்ந்துணர்ந்து பெருவாழ்வு வாழ்வான்.

**இலக்கணம்:** பரியா—மல் ஈறுதொக்க வினையெச்சம், கரியார் சொல்—6ஆம் வேற்றுமைத் தொகை, மாண்டார் சொல் —6ஆம் வேற்றுமைத்தொகை, வாழ்வான்—வினையாலணையும் பெயர், இன்சொல்—பண்புத்தொகை.

## (ஊ) சிறு பஞ்ச மூலம்

**முன்னுரை:** சிறு + பஞ்சம் + மூலம் = சிறுபஞ்சமூலம். மருந்தாகப்பயன்படும் ஐந்துசிறிய வேர்கள் என்பது பொருள். சிறுவழுதுணைவேர், நெருஞ்சிவேர், சிறுமல்லிவேர், பெருமல்லிவேர், கண்டங்கத்திரிவேர் என்னும் ஐந்தும் சிறுபஞ்ச மூலம் எனப்படும். இவை ஐந்தும் உடற்பிணியைப் போக்கும ஆற்றல் பெற்றவை, இவை போல, ஒவ்வொரு செய்யுளிலும் கூறப்பட்டுள்ள ஐந்து கருத்துக்களும், உள்ளத்து நோயைப் போக்கும். இதனல் இப்பெயர் பெற்றது. 97 பாடல்கள் கொண்டது.

ஆசிரியர் வரலாறு: காரியாசான், பிறப்பிடம் — மதுரை. ஆசிரியர்—மாக்காயனார். சமயம்—சமணம், காலம்—கி. பி. 750க்கு முற்பட்டவர்.

## 1. பெருமை, சிறுமை

பதவுரை: பிழைத்தல்—தனக்குப் பிறன் ஒருவன் செய்த பிழையை), பொறுத்தல்—பொறுத்துக்கொள்ளுதல், பெருமை—பெருமையாகும், இழைத்த—பிறர் செய்த, தீங்கு—தீமையை, எண்ணி இருத்தல் — நினைத்துக்கொண்டேயிருத்தல், சிறுமை—சிறுமையாகும், இழைத்த—தான் செய்த, பகைகெட—பிழைகள் கெடும்படி, வாழ்வதும்—வாழ்தலும், பல்பொருளார்—பல பொருள்களுடைய செல்வர்களும், நல்லார்—பெரியோர்களும், நகைகெட—ஏளனம் செய்து நகைப்பது நீங்க, வாழ்வதும்—வாழ்தலும், நன்று—நன்மையாகும்.

தெளிவுரை: தனக்குப் பிறன் ஒருவன் செய்த பிழையைப் பொறுத்தல் பெருமையாகும். பிறர் செய்த தீமைகளை மறவாதிருத்தல் சிறுமையாகும், தான் செய்த பிழைகள் கெடும்படி வாழ்தலும், செல்வரும் நல்லோரும் ஏளனம் செய்து நகைக்காது வாழ்தலும் நன்மை தரும்.

இலக்கணம்: பொறுத்தல் — தொழிற்பெயர், பெருமை, சிறுமை — பண்புப்பெயர்கள், நன்று — குறிப்பு வினைமுற்று, கெட—செய என்னும் வாய்பாட்டு வினையெச்சம்,

## 2. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்று எளிது

பதவுரை: வான் குருவி கூடு—தூக்கணங்குருவியாற் கட்டப்பட்ட கூடும், அரக்கு—பேரெறும்புகளால் செய்யப்படும் அரக்கும், வால் உலண்டு—தூய உலண்டு என்னும் புழுக்களால் நூற்கப்பட்ட நூலும், கோல் தருதல்—கோற்புழுவால் செய்யப்படுவதாகிய கோறகூடும், தேன்—தேனீக்களால் திரட்டப்பட்ட தேன் பொதியும், (ஆகிய இவ்வைந்தும்) புரிந்து—விரும்பி, யார்க்கும்—எவர்க்கும், செயல் ஆகா—செய்தல் முடியா, (ஆதலால்) வல்லவர்-எல்லாங்கற்ற வல்லவரும், தாம்புரிஇ—தாம் விரும்பி, வாய்பபன என்னார்—நமக்கு இவை வாய்ப்பாகச் செய்யலாமெனக் கருதமாட்டார், ஒரோ ஒருவர்க்கு — ஒவ்வொருவருக்கு, ஒல்காது—குறையாது, ஒரொன்று—ஒரோவொரு அருமையாகிய செயல், படும்—உண்டாயிருக்குமாதலால்.

தெளிவுரை: வலிய தூக்கணங்குருவி செய்யுங் கூடும், பேரெறும்புகளால் செய்யப்படும் அரககும், தூய உலண்டு என்னும் புழுக்களால் நூற்கப்பட்ட நூலும், வேறொரு புழுவாற் செய்யப்பட்ட கோற்கூடும், தேனீயால் திரட்டப்பட்ட தேன்பொதியும், என இவ்வைந்தும் விரும்பியவர்க்குச் செய்ய முடியாவாதலால்,

எல்லாங் கற்று வல்லவர் நமக்கிவை வாய்ப்புச் செய்யலாமென்று கருதார், ஒரோ வொருவர்க்குச் செயலாற் குறைபடாதே யொரோ வொரு செய்கையருமைகள் படுமாதலால்.

இலக்கணம்: புரீஇ—சொல்லிசையளபெடை, கோல்+தருதல்—கோற்றருதல்.

### 3. நகைத்தற்குரியவை

பதவுரை: நாண் இலான்—நாணமில்லாதவனுடைய, சால்பும்—அமைதியும், நடை இலான்—ஒழுக்கம் இல்லாதவனது, நல்நோன்பும் — நல்ல நோன்பும், ஊண் இலான் — தனக்கே உண் பொருள் இல்லாதவன், செய்யும் உதாரதையும்—செய்கின்ற ஈகையும், ஏண் இலான்—வலிமை இல்லாதவனது, சேவகமும்—வீரத் தொழிலும், செந்தமிழ்—செந்தமிழில், தேற்றான்—தன் மனத்தைத் தெளியச் செய்யாதவன், கவி செயலும—பாட்டுக்களைச் செய்தலும், நா அகமே நாவின்-நாவினிடத்துக்கொண்டு ஆராயின், நகை—சிரிப்புக்கு இடமாகும்.

தெளிவுரை: நாணமில்லாதவனது அமைதியும், நல்லொழுக்கமில்லாதவனது நோன்பும். தனக்கே உண்ணும் பொருள் இல்லாதவன் செய்யும் வண்மையும், வலியற்றவன் சொல்லும வீரமொழியும், செந்தமிழை அறியாதவன் கவிதை செய்தலும் ஆகிய ஐந்தும் நகைப்புக்கு இடம் தருபவை.

இலக்கணம்: தேற்றான்—பிறவினை, நன்னோன்பு—நன்மை+நோனபு—பண்புத்தொகை, செந்தமிழ் — (செம்மை+தமிழ்)—பண்புத்தொகை, இலான்—இடைக்குறை.

### 4. அரசன் உயரக் காரணம்

பதவுரை: வார் சான்ற கூந்தல்—நீட்சி மிகுந்த கூந்தலையுடைய பெண்ணே! வரம்புயர—(வயல்களில்) வரப்பானது உயர்ந்திருக்க, நீர் சான்று நீர் உயரும், உயரவே—உயர்ச்சியடையவே, (அந்நீர் வளத்தால்) நெல் உயரும்—நெற் பயிரானது வளர்ந்து உயர்வடையும், சீர் சான்ற தாவர குடி உயர—சிறப்புமிகுந்த அழியாத குடியானவர்கள் உயர்வடைய, தாங்குஅரும்—பிறரால் தாங்குதற்கரிய, சீர்கோ உயரும்—சிறப்பினை உடைய அரசன் உயர்வான் (என்று) உலகு ஓவாது உரைக்கும்—இவ்வுலகமானது ஒழியாமற் சொல்லிக்கொண்டே இருக்கும்.

தெளிவுரை: வார் சான்ற கூந்தலை உடையாய்! வயலினது வரப்பு உயரவே, நீர் உயர்ந்து நெல் உயரும், நெல் உயரக் குடிமக்கள் உயர்வடைவார்கள், குடிமக்கள் உயர்வு அடைய மன்னன் உயர்வடைவான் என்று உலகம் கூறிக்கொண்டே இருக்கும்.

இலக்கணம்: வார், சான்ற — உரிச்சொல்லடியாகப் பிறந்த பெயரெச்சம். தாவா—ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம், உலகு—இடவாகுபெயர், கோவுயரும்—கோ + உயரும், உரைக்கு மூலகு—உரைக்கும் + உலகு, தாங்கருஞ்சீர் — தாங்கு + அரும் + சீர்.

## 5. வாழும் முறை

பதவுரை: தான் பிறந்த இல்நினைந்து—தான் பிறந்த குடியை நினைத்து, தன்னைக் கடைப்பிடித்து—தன்னை நல்லொழுக்கத்தில் வழுவாதபடி கடைப்பிடித்து, தான் பிறரால் கருதற்பாடு உணர்ந்து—தான் பிறராலே மதிக்கப்படுவதற்குரிய செய்கைகளை அறிந்து, தான் பிறரால் சாவ என வாழான்—பிறரால் இவன் செத்தொழிக என்று சொல்லும்படி யொழுகாது, சான்றோரால்—பெரியோரால், பல்யாண்டும்—பல்யாண்டளவும், வாழ்க என—வாழ்கவென்று சொல்லும்படி, வாழ்தல்—ஒருவன் உயிர் வாழ்ந்திருத்தல், நன்று—நன்மையாகும்,

தெளிவுரை: தான் பிறந்த குடியை நினைத்து, தன்னையொழுக்கத்தினின்று வழுவாத வகை கடைப்பிடித்து, தான் பிறரால் மதிக்கப்படுஞ் செய்கையை யுணர்ந்து, தான் பிறராற் சாகவென்று சொல்லும்படி யொழுகாது, சான்றோராலே பல்யாண்டும் வாழ்வானாக என்று சொல்லும்படி யொழுகுதல் நன்று.

இலக்கணம்: இல்—முதலாகுபெயர். வாழான்-முற்றெச்சம்

# III கதைப்பகுதி

## (அ) கம்ப ராமாயணம்

**முன்னுரை:** கம்பரால் பாடப்பெற்ற இராமாயணம் 3 ஆம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கதொகை. கம்பரது இராமாயணம்—6 ஆம் வேற்றுமைத் தொகை இராம + அயநம் —இராமனுடைய கதை. ஆறு காண்டங்கள் கொண்ட நூல். 7 வது காண்டம் ஒட்டக்கூத்தரால் பாடப்பெற்றது. இது வழி நூல். மூல நூல் வான்மீகி இராமாயணம்.

**ஆறு காண்டங்களின் பெயர்கள்:**

1. பாலகாண்டம் 2. அயோத்தியா காண்டம் 3. ஆரண்ணிய காண்டம் 4. கிட்கிந்தா காண்டம் 5. சுந்தரகாண்டம் 6. யுத்த காண்டம் 7வது காண்டம்—உத்தர காண்டம்.

**ஆசிரியர் வரலாறு:** ஆசிரியர்—கம்பர். வேறு பெயர்கள்—கம்பநாடர், கம்பநாட்டாழ்வார், கம்பநாடுடை வள்ளல், பிறப்பிடம்—திருவழுந்தூர், தந்தை—ஆதித்தன், குலம் — உவச்சர் குலம், சமயம்—வைணவம்,

**ஆதரித்தவர்:** திருவெண்ணெய் நல்லூர் சடையப்ப வள்ளல்

**இயற்றிய நூல்கள்:** சடகோபர் அந்தாதி, சுரசுவதி அந்தாதி ஏர் எழுபது, திருக்கை வழக்கம்.

**கம்பரின் பெருமைகள்:** 'கவிச்சக்கரவர்த்தி' 'கல்வியிற் பெரியர் கம்பர்' 'கவிக்குக் கம்பன், 'கம்பன் வீட்டுக்கட்டுத்தறியும் கவிபாடும்' என்பவை; காலம்—கி. பி. 12ஆம் நூற்றாண்டு.

### கைகேயி சூழ்வினைப் படலம்

### 1. தாயென நினைவான் முன்னே கைகேயி கூற்றென வருதல்

**தெளிவுரை:** அப்படிப்பட்டவை, நடக்குங் காலத்தில் தசரதன் வழக்கமாக இருக்குமிடத்து இல்லாதிருந்தபோது) இராமனும், மனஞ்சோர்ந்து, பின்பு தெளிந்து, பரிசுத்தனாகிய தசரதன் இருந்த இடத்தைத் தேடி வருசலைப் பார்த்து, இதனைக் கணவன் தன் வாயாற் கூறான், (ஆதலால்) நான் சொல்வேன், என்றெண்ணிக் கொண்டு, தாயென்றெண்ணுகின்ற இராமன் முன்னே, யமனைப் போல, ஒப்பற்ற கொடுமையையுடைய கைகேயி வந்தாள்.

## 2. கைகேயியை இராமன் வணங்கல்

தெளிவுரை: மாலைப் பொழுதில் வந்து சேர்ந்த, தாயைப் பார்த்த பசுவின் கன்றை ஒத்த இராமன் அவ்வாறு வந்த கைகேயியை தலை நிலத்திற் படும்படி எண்சாண் கிடையாக வணங்கி, வாசனையுள்ளதும், சிந்தூரத்தையும் பவழத்தையும் ஒத்ததுமான, சிவந்த வாயை, சிவந்த ஒரு கையால் மூடிக்கொண்டு, அழகிய பெரிய மற்றொரு கை, ஆடையை மடக்க, வணங்கி நின்றான்.

## 3. மன்னர் வரம் தந்தாரென மகனுக்கு உரைத்தாள்

தெளிவுரை: அங்ஙனம் நின்ற, இராமனைப் பார்த்து, இரும்பாலாகிய மனத்தோடு, உயிர்களைக் கொன்று திரிகின்ற யமன் என்னும் பெயர் மாத்திரமில்லாமல், (அவ்யமன் போன்ற) கொடுந் தொழிலை, மேற்கொண்ட அந்தக் கைகேயி, மைந்த, உன் தந்தை, உனக்குச் சொல்லவேண்டுமென்று கருதியதாகிய ஒப்பற்ற ஒரு வார்த்தை உளது. அவருரைக்க வேண்டுமென்ற அது, இப்பொழுது உனக்குத் தெரிவிக்கலாமென்றால், தெரிவிக்கலாகும்' என்றாள்.

## 4. 'தாயுரையாயினும் தலைநின்றேன்' எனல்

தெளிவுரை: 'என் தந்தையே கட்டளையிட, நீரே சொல்ல, பொருந்துவது ஒன்று உண்டானால், நான் ஈடேறிவிட்டேன். என்னைப் போல, மேம்படப் பிறந்தவர், உலகத்தில் வேறு ஒருவர் இருக்கின்றனரோ? எனது. (முற்பிறப்பிற் செய்த) நல்வினையால், உண்டாகிய, வரக்கடவதாகிய பயன், வந்து விட்டது; இதைவிட வேறொரு பயன் உள்ளதோ? எனக்குத் தந்தையும் த்ாயும் நீங்களே, நீங்கள் சொல்லப் போவதை தலைமேற்கொண்டு நின்றேன். கட்டளையிடுமின்' என்று கூறினான் இராமன்.

## 5. 'தந்தையின் வரம் எனத் தனயனுக்கு உரைத்தல்'

தெளிவுரை: கடல் சூழ்ந்த உலகமனைத்தையும், பரதனே யாண்டு கொண்டிருக்க. நீ போய் தொங்குகின்ற பெரிய சடைகளைத் தரித்துக்கொண்டு, தரித்தற்கரிய, தவவேடத்தை மேற்கொண்டு, புழுதியையுடைய பெரிய காட்டைச் சேர்ந்து, பரிசுத்தமாகிய நதிகளிலே நீராடி, பதினான்கு ஆண்டுகள் கழித்தபின்பு, திரும்பி வருக'' என்று சக்கரவர்த்தி ஆணையிட்டான்' என்றாள்.

## 6. இராமனின் மகிழ்ச்சி

தெளிவுரை: எவராலுஞ் சொல்லுதற்கரிய, திருக்கலியாண குணங்களையுடைய இராமனது, திருமுக மண்டலத்தின் வனப்பை இப்பொழுது பார்த்தால், அது எம்மைப் போன்றவரால், சொல்லுதற்கு எளியதோ? (அன்று) ஏனெனில் இதற்கு முன்பெல்லாம்

செந்தாமரை மலரைப் போன்றதாகிய அம்முகச் செல்வி, அக் கைகேயியின் வார்த்தையைக் கேட்டதன்பின்பு, அப்பொழுதுதான் மலர்ந்த செந்தாமரை மலரை வென்றிட்டது.

### 7. 'தந்தை கட்டளைப்படியே நடப்பேன்' எனல்

தெளிவுரை: "சக்கரவர்த்தியினது கட்டளையன்றாயினும் உமது கட்டளையைச் செய்ய மாட்டேன் என்பேனோ? என் தம்பி யடைந்த செல்வம், நான் அடைந்ததன்றோ? பின்பு இதனினும் மேலான நன்மை யாது? இக்கட்டளையைத் தலைமேற்கொண்டேன். மின்னல் போன்ற வெயில் விளங்குகின்ற காட்டிற்கு, இப் பொழுதே செல்கின்றேன்" என்றான்.

## நகர் நீங்கு படலம்

### 8. இராமன் கோசலையை அடைதல்

தெளிவுரை: மேகங்கள் தங்கப்பெற்ற மலையையொத்த இராமன், 'திருமுடியைச் சூட்டிக்கொண்டு வருவான்' என்று மகிழ்கின்ற மனத்தையுடைய அக் கோசலைக்கு முன், வீசுகின்ற சாமரம் இல்லாமல், வெண்கொற்றக் குடையுமில்லாமல், நன்மை தீமைகளை உண்டாக்குகின்ற ஊழ்வினை முன்னே போகவும், அறக் கடவுள் வருந்திப் பின்னே வரவும், தன்னந்தனியனாய் அவ் விராமன் வந்து சேர்ந்தான்.

### 9. 'முடி புனைதற்குத் தடையுண்டோ?' எனல்

தெளிவுரை: இராமன் திருமுடியைச் சூட்டிக் கொண்டா னில்லை; தலைமயிர் நீராட்டத்திற்குரிய பரிசுத்தமாகிய தீர்த்தத்தி னால் நனையப் பெற்றானில்லை; இதற்குக் காரணம் யாதோ? என்னும் சந்தேகத்தைக் கொண்ட அக் கோசலையினுடைய தாமரை மலர் போன்ற திருவடிகளை, பொன்னினாற் செய்த வீரக்கழலையணிந்த திருவடியையுடைய இராமன் வணங்கவே, அவள் வருந்தி வாழ்த்தி, 'சக்கரவர்த்தி எண்ணின காரியம் யாதாயிற்று? நீண்ட மணிமுடி யைச் சூடுதற்கு யாதாயினும் தடையுளதோ?' என்று கேட்டாள்.

### 10. 'பரதனே முடி சூடுகின்றான்' எனல்

தெளிவுரை: கோசலை, அவ்வார்த்தையைச் சொல்ல, இராமன், சிவந்த கைகளைக் கூப்பிக்கொண்டு, 'உனது அன்பிற்கு இடமான அழகிய குமாரனும், எனது தம்பியுமாகிய, குற்றமில்லாத குணங்களையுடைய பரதனே, உயர்வாகிய பெருமையையுடைய மணிமுடியைக் கவித்துக் கொள்ளுகிறான்' என்றான்.

## 11. கோசலை, 'இளையவன் அரசு புரிதல் முறையன்று' எனல்

தெளிவுரை: (இராமன், இலக்குவன், சத்துருக்கினன் என்ற) நான்கு குமாரர்களிடத்தும், குற்றமற்ற அன்பு செலுத்துவதில், வேறுபாட்டை ஒழித்தவளாகிய கோசலை, "(மூத்தவன் இருக்க இளையவன் அரசு ஆளுதல்) முறைமையன்று என்கின்ற ஒரு குறை மட்டும் உண்டு; அதுவல்லாமல் (மற்றைப்படி), அந்தப் பரதன், யாவரினும் நிறைந்த குணத்தையுடையவன்; உன்னைக் காட்டிலும் நல்லவன்; அன்றியும் (ஒரு வகையாலும்) குறைவு இல்லாதவன்; என்று சொன்னாள்.

## 12. 'தந்தையின் கட்டளையை மீற வேண்டா' எனக் கோசலை கூறுதல்

தெளிவுரை: என்று கூறி, பின்னரும், (கோசலை தன் மகனை நோக்கி) "மகனே! சக்கரவர்த்தி ஆணையிட்ட தொழில் நீதி அன்று என்று கூறுமை, உனக்கு அறமாகும்; நீ, நன்மையாக, உனது தம்பியாகிய பரதனுக்கு, உலகத்தைக் கொடுத்து, (அவனோடு மாறுபடாமல்) கூடியிருந்து, நெடுங்காலம் வாழ்வாயாக" என்றாள்.

## 13. 'தந்தையிட்ட வேறு கட்டளையும் உண்டு' என இராமன் கூறல்

தெளிவுரை: (என்று) கோசலை சொல்லியருளிய வார்த்தையைக் கேட்டு, பரிசுத்தமாகிய மனம் மகிழ்கின்ற, குற்றமற்ற குணங்களையுடைய அவ்விராமன், (தாயை நோக்கி) 'சக்கரவர்த்தி அடியேனை சனமார்க்கத்தில் செலுத்துவதற்காக, நியமித்ததாகிய ஒரு கட்டளை உண்டு' என்று சொன்னான்.

## 14. அடுத்த கட்டளை அன்னைக்கு உரைத்தல்

தெளிவுரை: (அதனைக் கேட்டு) "உன்னிடத்துத் தந்தையாற் சொல்லப்பட்ட பணி யாது?" எனக் கேட்டலும், இராமபிரான் அவளை நோக்கி, 'நீ ஒரு பதினான்கு ஆண்டு காலம் பரந்த காட்டில் மாட்சிமைப்பட்ட சிறந்த துறவிகளுடன் சேர்ந்து தங்கி, பின் திரும்பி வரவேண்டும்' என்று சக்கரவர்த்தி கட்டளையிட்டான், என்றான்,

## 15. இரண்டாங் கட்டளையைக் கேட்டு கோசலை வருந்துதல்

தெளிவுரை: அப்பொழுது, அவ் வார்த்தை யென்கிற தீ, குழை யென்னுங்காதணி அசைகின்ற தன்னுடைய செவிகளில் விழாததற்கு முன்னமே, (அந்தக் கோசலை) இரங்கினாள்; மெலிந்

தாள்; மனம் திகைத்தாள்; மயக்கம் மிகுந்தாள்; அழுதாள்; மேலே விழுந்தாள்.

16. தெளிவுரை: விழுந்த கோசலை, 'மகனே' உன்னைக் குறித்து, 'நீ இப்பெரிய பூமியைப் பற்றுக்கோடாகக் காப்பாயாக' என்று மன்னவர் சொன்ன வார்த்தை வஞ்சனையோ' நஞ்சேயாம்; இனி நான் உயிர் வாழ்வேனோ? எனது அரிய உயிரும் மிகவும் பயப்படுகிறது'' என்று கூறினாள்.

17. தெளிவுரை: (இவ்வாறு பதைத்து) ''(உன்னிடத்துக்) காதலை வெளிப்படுத்துஞ் செயலைச் செய்து வந்த நெஞ்சினையுடைய சக்கரவர்த்திக்கு, நீ என்ன தவறு செய்தாய்?'' என்று சொல்லி, முற் பிறப்பிற் செய்த தீவினை யாலுளதாகிய தரித்திரத்தினால் மிக் கிருக்கப் பெற்றவர், (இடையில தாம் பெற்ற) செல்வம் தவறிப் போக, (செல்வத்தை யிழந்த பெருந் துயரத்தினால் முகத்தை) மூடிக்கொண்டு, வருந்துபவர் போல, இரங்கினாள்.

## 18. கோசலை கன்றினைப் பிரியும் கறவை போல ஆனாள்

தெளிவுரை: பின்னும் அந்தக் கோசலை, 'எனக்குத் தருமம் என்பது துணையாவதில்லையோ?' என்பாள். 'தெய்வங்களே! என்னுடைய உயிர் வாடி அழியும்படி என்னைச் சார்ந்துள்ள தீவினை யாதோ!' என்பாள். அந்தக் கோசலை அப்போது, (தான் ஈன்ற) கன்றைப் பிரிந்தபோது, அந்தக் கன்றை யீன்ற தாய்ப் பசுவைப் போல, மனமுருகி, வருந்தினாள். (அங்ஙனம்) பெருந் துயரால் வருந்திய கோசலைக்குத் தாயைப் பிரிந்த கன்றைத் தவிர. வேறு உவமையாகக் கூறுவதற்கு உரியது யாது உள்ளது? (எதுவு மில்லை.)

## 19. 'தந்தையைப் பொய் கூறியவராக்கலாமோ'? என இராமன் கூறல்

தெளிவுரை: (அப்பொழுது இராமன்). இவ்வகையாகத் துன் மடைகின்ற அக்கோசலையை, தன் கைகளால் தூக்கி, ''அரிய கற் பினையுடையவளே! சத்தியத்தின் மேன்மையை உடைய நமது சக்கரவர்த்தியை, நீ, பொய்யின் பாற்பட்டவனாக்க, முயல்கின் றாயோ? சொல்வாயாக'' என்று தேற்றலானான்.

## 20. இராமன் தன் உறுதியைக் கூறல்

தெளிவுரை: ''சிறந்த பரதன் அரசாட்சி செல்வத்தையடைய என் தந்தையை, மறந்தும் பொய் சொல்லாதவனாகச் செய்து, காட் டில் வசித்து, திரும்பிவருகின்ற நன்மையைப் பெற்றேன். இதனி லும், யான் இவ்வுலகத்தில் தோன்றி, அடைய வேண்டிய பேறு என்று சொல்லப்படுவது எதுவோ?'' (ஒன்றுமில்லை)

21. தெளிவுரை: "வானமும், பூமியும், இந்த மாகடலும், இன்னும் வேறாக எண்ணப்படுகின்ற. தீ, காற்று என்னும் பூதங்களும், இவையனைத்தும், அழிந்து போவதாக இருந்தாலும், சக்கரவர்த்தியினது, ஆணையைத் தடுக்க அடியேனுக்குத் தகுமோ? (தகாது) ஆதலால், இதற்கு நீ மனம் வருந்தாதே" என்று கூறினான் இராமன்.

## 22. 'உடன் வருவேன்' எனக் கோசலை உரைத்தல்

தெளிவுரை: (என்று சொல்லக் கேட்ட கோசலை) "குழந்தாய்! ஆனால், சக்கரவர்த்தியினது கட்டளைப்படி! போகாதே என்பதனை, நானும் சொல்ல மாட்டேன்; (உன்னைப் பிரிந்து) சாகமாட்டாத பிராணனைச் சுமக்க, வல்லவளல்லாத என்னையும், நீ போவாயானால், உன்னோடு அழைத்துக் கொண்டு போவாயாக" என்றாள்.

## 23. இராமன் ஆறுதல் கூறல்

தெளிவுரை: (என்று சொல்லக் கேட்ட இராமன்) "அன்னையே! நீ என்னைப் பிரிந்து, துக்கக் கடலில் மூழ்குகின்ற சக்கரவர்த்தியைத் தைரியப்படுத்தாமல், என்னுடன் நெருங்கிய காட்டிற்கு, வரத் துணிவது, தகுமோ? அறத்தை ஆராய்ந்து பார்க்கவில்லை போலும்" என்றான்.

24. தெளிவுரை: ("நீ செய்ய வேண்டிய கடமை கணவனின் பணிவிடையாயிருக்க) நீ மனம் கலங்குதற்குக் காரணம் யாது? தேவராயிருப்பவர்களும், தமது மனத்திட்பத்துக்குத்தக்க, பெருந் தவத்தைச் செய்து, அதனால் உயர்ச்சி பெற்றார்களல்லவா? (இப்பொழுது என்னைக் காட்டில்வாழுமாறு, தந்தையார் விதித்த) ஆண்டுகள் எத்தனை இருக்கின்றனவோ, அந்தப்பதினான்கு ஆண்டுகளும், (தேவமானத்தாற்) பதினான்கு நாட்கள் அல்லவா?" என்றான்.

25. தெளிவுரை: பிறகும் சொல்லத் தொடங்கினான்; "முன்பு கோசிகன் என்று சொல்லப்படுகின்ற இருடித்தலைவனுடைய கருணையினால், பெற்றவித்தையும், பின்பு அடைந்த பேறும், தவறியனவோ? (இல்லை) அப்படிப்பட்ட முனிவர்கள் ஏவின செயல்களைச் செய்தல், இன்னமும் நல்லது.

## இலக்கணம்

1 பகர்வென் — தன்மையொருமை வினை முற்று.
கூற்று — காரணப் பெயர்.
அயர்ந்து — வினையெச்சம்
வருதல் — தொழில்பெயர்
தேரு—ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

2 செவ்வாய்—பண்புத்தொகை (செம்மை + வாய்)
சுந்தரத் தடக்கை—சுந்தரம் + தடம் + கை
தடக்கை—உரிச்சொற்றொடர்
செங்கை—பண்புத்தொகை

3 நின்றவன்—வினையால் அணையும் பெயர்.
கொடுமை—பண்புப்பெயர்
உந்தை—உன் தந்தை என்பதன் மரூஉ

4 எந்தை—என் தந்தை என்பதன் மரூஉ
பணிமின்—ஏவல் பன்மை வினைமுற்று

5 வெங்கானம்—பண்புத்தொகை

6 செந்தாமரை—பண்புத்தொகை
அம்மா—அசை
செப்பருங்குணத்திராமன் — செப்பு + அருமை + குணம் + அத்து + இராமன்

7 பெற்ற—பெயரெச்சம்
போகின்றேன்—தன்மையொருமை வினைமுற்று

8 கொற்றவெண்குடை—கொற்றம் + வெண்மை + குடை
வெண்குடை—பண்புத்தொகை
என்று என்று — அடுக்குத்தொடர்

9 நளினபாதம்—நளினம் + பாதம்
நெடுமுடி—பண்புத்தொகை

10 செங்கை—பண்புத்தொகை
மாமுடி—உரிச்சொற்றொடர்

11 இலன்—குறிப்பு வினையால் அணையும் பெயர்

12 நானிலம் —பண்புத்தொகை

13 அத்தோமில் குணத்தினன் — அ + தோம் + இல் + குணத்தினன்

14 உரைத்த—பெயரெச்சம்
வரல்—தொழிற்பெயர்

15 மூனம்—முன்னம் என்பதன் தொகுத்தல் விகாரம்
அரோ—அசை
ஏங்கினுளிளைத்தாடிகைத்தாண் மனம் — ஏங்கினுள் + இளைத்தாள் + திகைத்தாள் + மனம்.

16 மாநிலம்—உரிச்சொற்றொடர்
அஞ்சும் அஞ்சும்—அடுக்குத்தொடர்
ஆருயிர்—பண்புத்தொகை

17 பிழைத்தனை—முன்னிலைவினைமுற்று

18 இலேயோ—இல்லையோ என்பதன் தொகுத்தல் விகாரம்
கறவை—காரணப்பெயர்
கரைந்து—வினையெச்சம்

19 இடருறுவாடனை—இடர் + உறுவாள் + தனை
புகல்—ஏவல் ஒருமை வினைமுற்று

20 எந்தை—என் தந்தை என்பதன் மரூஉ

21 அழியேல்—முன்னிலை எதிர்மறை வினைமுற்று
ஒண்ணுமோ—ஓகாரம் எதிர்மறை

22 உரைக்கிலேன்—தன்மை எதிர்மறை வினைமுற்று

23 இடர்க் கடல்—உருவகம்

24 மாதவம்—உரிச் சொற்றொடர்

25 எய்திய—பெயரெச்சம்

பிரித்தெழுதல்

கொன்றுழல் கூற்றம்—கொன்று + உழல் + கூற்றம்
ஒன்றுனக்கு—ஒன்று + உனக்கு
இயைவதுண்டேல்—இயைவது + உண்டேல்
மின்னுளிர் கானம்—மின் + ஒளிர் + கானம்
மழைக்குன்ற மனையான்—மழை + குன்றம் + அனையான்
மஞ்சனப் புனிதநீர்—மஞ்சனம் + புனிதம் + நீர்
பங்கமில் குணத்தெம்பி—பங்கம் + இல் + குணம் + அத்து + எம்பி
ஏழிரேடேழகன் கானிடை—ஏழிரேடு + ஏழ் + அகன் + கானிடை
அறமெனக் கிலேயோ—அறம் + எனக்கு + இலேயோ

என்பதியானும்—என்பது + யானும்

சித்த நீதி கைக்கின்றதென்—சித்தம் + நீ + திகைக்கின்றது + என்

பகலலவோ—பகல் + அலவோ

முனிவரன் றன்னருட்டலை—முனிவரன் + தன் + அருள் + தலை

இன்ன நன்று—இன்னம் + நன்று

## (ஆ) பெரிய புராணம்

**முன்னுரை:** செயற்கரிய செயல்களைச் செய்து பெருமை பெற்ற சிவனடியார்களின் வரலாறுகளைக் கூறுவதால், பெரிய புராணம் என்ற பெயர் பெற்றது. இதற்கு ஆசிரியர் இட்டபெயர் திருத்தொண்டர் புராணம். இது சைவத் திருமுறைகளில் 12வது திருமுறையாகும். இரு காண்டங்கள் 13 சுருக்கங்கள் கொண்டது.

சிவனடியார்களில் தனியடியார் அறுபத்துமூவர். தொகையடியார் ஒன்பதின்மர். ஆக எழுபத்திருவரின் வரலாறுகள் இடம் பெற்றுள்ளன.

**ஆசிரியர் வரலாறு:** ஆசிரியர்—சேக்கிழார்; இயற்பெயர்—அருண்மொழித் தேவர்; பிறப்பிடம்—தொண்டை நாட்டுக் குன்றத்தூர்; குலம்—தொண்டை மண்டல வேளாளர்குலம்; காலம்—கி. பி. 12 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி.

இதில் இளையான் குடிமாற நாயனார் வரலாறு கூறப்படுகிறது.

### 1. நாயனாரின் இயல்பு

**தெளிவுரை:** ஏர்த்தொழில் மூலம் நிறைந்த வளமான செல்வமும், கங்கையைத் தலைமீது கொண்ட சடாமுடியையுடைய சிவபெருமானிடத்து, நிறைந்த பெருமை மிகுந்த அன்பும், அந்த அன்பினால் நிலைபெற்ற மனமும், பாவோர் விரும்ப மற்றைய சிறப்புகளையும் பெற்று, பெருமையுடன் வாழ்பவரானார்.

### 2. அடியவரை இன் சொற்களால் மகிழச் செய்தல்

**தெளிவுரை:** எலும்புகளை மாலையாக அணிந்த சிவபெருமானுடைய அடியவர் என்ற பண்பினால், தம் எதிரே வந்தவர் யாவராக இருந்தாலும், நிலையான பக்திமிக, எதிர்சென்று, கைகளைக் குவித்து வணங்கி நின்று, அடியவர் செவிகளில் குளிர்ச்சியும், மென்மையும், இனிமையும், அன்பும் நிறைந்த சொற்களால் மகிழ்ச்சியை ஏற்படுத்துவார்.

## 3. நாலுவகை உணவுகளை அறுசுவையுடன் படைத்தல்

**தெளிவுரை:** அவ்வடியவரைத் தன் இல்லத்திற்கு அழைத்து வந்து, அடியவரின் சிறப்பு மிகுந்த திருவடிகளைக் கழுவி, நிறைந்த காதலுடன் ஆதனத்தில் அமரச் செய்து, அரிச்சித்து, நான்கு வகையான உணவுகளை, அறுசுவையுடன் உண்பிக்கச் செய்து, ஒப்பற்ற தலைவனான சிவபெருமானுடைய அடியார் உள்ளத்தை மகிழ்ச்சியில் திளைக்கச் செய்வார்.

## 4. இறைவனின் திருவுள்ளம்

**தெளிவுரை:** செல்வம் பொருந்தியிருந்த நாட்களில் இம்மாதிரி அறச் செயலைச் செய்துவந்த நாயனார், துன்பமாகிய வறுமையை யடைந்தகாலத்திலும், அறச்செயலைச் செய்யவல்லவரா வென்பதைச் சோதிக்க, அவருடைய வளமான செல்வம் முழுவதும், மெதுவாக மறைந்து, வறுமையைத் தந்தருள நினைததார், தில்லையம்பதி வாழும் இறைவனாகிய சிவபெருமான்.

## 5. நாயனாரின் செல்வம் குறைதல்

**தெளிவுரை:** இம்மாதிரி வளங்கள் சுருங்கவே, இளையான் குடிமாறனார், மனஞ்சுருங்குதலின்றி, தம்மிடம் உள்ள பொருள்களை விற்று, தம்மையே விலைக்கு விற்றுக் கொடுக்கத்தக்க கடன்கள் பல வாங்கி, முன்னைப் போல குற்றமற்ற திருப்பணிகளில் சிறந்து விளங்கினார்.

## 6. சிவபெருமான் நாயனார் வீட்டையடைதல்

**தெளிவுரை:** மழைக்காலத் திரவு ஒன்றில், ஓர் உதவியுமின்றி பசி மிகுதலைப் பொறுத்துக்கொண்டு, வீட்டுக்கதவையடைந்தபின், பண்பு நிறைந்த தேன் சிந்தும் மாலையினை அணிந்த இளையான் குடிமாறன், விருந்தினர் ஒருவரை எதிர்கொண்டு அழைத்து வந்தான்.

## 7. 'உணவு சமைக்க யாது செய்வோம்' என நாயனார் வினவுதல்

**தெளிவுரை:** மழையால் நனைந்து வந்த அடியாரின் ஈர ஆடையை நீக்கி, வீட்டில இருக்கச் செய்தார் நாயனார். வயிறு நிறையும்படி இனிமையான உணவை உண்பிக்க ஆசை கொண்டார். மனைவியாரை நோக்கி, "துறவியாகிய இவர் மிகவும் பசித்துக் காணப்படுகிறார்; எவ்வாறு இவர் பசியைப் போக்கலாம்?" என்றார்.

## 8. நாயனாரின் மனைவியார் உணவு சமைக்க வழியினைக் கூறல்

**தெளிவுரை:** "நம் துன்பம் நீங்க வேண்டுமானால், நாம் பகலில் வயலில் விதைத்த செந்நெல் முளைகளை வாரி யெடுத்துக் கொண்டு வந்தால், கூடியவரை அமுதாக்கக்கூடும். இதைத் தவிர வேறு வழி ஏதும் அறியேன்" என்றாள் மனைவியார்.

## 9. நாயனார் நெல்லைக் கொணர்தல்

**தெளிவுரை:** உடனே நாயனார், மிக்க இருளாக இருந்தபடியால், காலினால் வழியைத் தடவிச் சென்றார்; நீர்வழி ஒதுங்கிய நெல் முளைகளை வாரிச் சேர்த்து, கூடையில் போட்டுச் சுமந்து கொண்டு, விரைவாக வீடு திரும்பினார்.

## 10. மனைவியார் அடுப்பு எரிக்க விறகில்லை என்று கூறல்

**தெளிவுரை:** நாயனார் திரும்பி வந்ததும், மனைவியார் வாயிலில் நின்று, நெல்லை வாங்கி, மனம் விரும்பித் தண்ணீரில் நெல் மீது ஒட்டியிருந்த சேற்றினை யலம்பி, அடுப்பைப் பற்றவைக்க விறகு இல்லையே என்று கூற, முன்னோர் கட்டிய அவ்வீட்டுக் கூரையில் உள்ள வரிச்சுக்களை அறுத்தெறிந்தார்.

## 11. நாயனாரின் மனைவி சோற்றைச் சமைத்தல்

**தெளிவுரை:** நாயனாரின் மனைவி அந்த வரிச்சுக்களை வாங்கி அடுப்பில் வைத்து, முளையையுடைய விதையாகிய நெல்லை வறுத்து, பின் அரிசியாக்கி, உலையிற்போட்டு, வெறுப்பின்றி, இனிய சோறாக்கி, சிறந்த கற்புத்தன்மைமிக்க அவள், "கறிவகைகளுக்கு என்ன செய்வது?" என்று கேட்டாள்.

## 12. நாயனாரின் மனைவி கறி சமைத்தல்

**தெளிவுரை:** மிகக் களைப்பினோடும், துன்புறுத்திய பசியுடனும், வருந்திய நாயனார், விரைந்து சென்று, குழியில் நிரம்பி வளராத இளம் பயிராகிய கீரை வகைகளைத் தடவி, பாசத்தின் இழிந்த வேரைப் பறிப்பவரைப் போல, அவற்றைப் பறித்துவந்து கறிக்கு நல்கினார்.

**13. தெளிவுரை:** நாயனாரின் மனைவியார், தன் கணவர் தந்த கறிகளை ஆராய்ந்து, தண்ணீரில் கழுவித் தக்க, தூய்மையான ஏனங்களில் போட்டு, தம் கைத்திறமையினால் வெவ்வேறான கறியமுதுகளை ஆக்கினாள். அப்பொழுது முன்னைய செல்வநிலையைப் பற்றிய நினைவும், தற்போது அச்செல்வம் இல்லாத குறையையும் நினைத்து வருந்திக்கொண்டே திருஅமுது சமைத்தாள்.

## 14. நாயனாரைத் துயிலினின்று எழச் செய்தல்

தெளிவுரை: மனைவியார் தம் கணவனாரை நோக்கி, கறியமுது செய்து முடித்ததைத் தெரிவித்தாள். ஒப்பில்லாத அடியாராக வந்துள்ளவரை, 'அமுது படைக்க' எழுப்பும்படி கேட்டுக் கொண்டாள். தம உணர்வால் இன்ன தன்மையன் என்று உணர்தற்கு இயலாத ஒப்பற்ற இறைவனாகி விளங்கும் நாயனாரை எழுப்பப் பகலத்தில் சென்று. நாயனாரைத் துயிலிலிருந்து எழுப்ப முயன்றான்.

## 15. விருந்தினரைக் காணாமை

தெளிவுரை: "துன்பத்தினின்று நீங்கி அடியேன் பிழைத்தற்காக என்பால் அருள் செய்த பெரியீர் அமுது செய்ய எழுந்தருள்க" என்று அடியவராகிய நாயனார் உரைத்தபொழுது, அங்கு ஒரு சோதியாய் அடியவர் எழுந்து தோன்ற, இலக்குமியனைய நாயனாரின் மனைவியாரும், நாயனாரும் திகைத்து நின்றனர்.

## 16. சிவபெருமான் நாயனார்க்குக் காட்சிதரல்

தெளிவுரை: "அடியவனே! அடியார்களுக்கு வழிபட்டு விருந்தளித்த நீ, உன் மனைவியோடு, எம் பெருமை பொருந்திய உலகிற்கு வந்து, பெருஞ் செல்வத்திற்குரியவனான குபேரன் தன் நிதியை ஏந்தி, உன் ஏவல்களையெல்லாம் கேட்டு நடக்க, இன்பம் பெற்று வாழ்வாயாக" என்று எவர்க்கும் மிக்கார் கூறியருளினார்.

### இலக்கணம்

1 மன்னிய—இறந்த காலப் பெயரெச்சம்
நீடு பயன்—பண்புத் தொகை

2 செவிப்புலம்—இரு பெயரொட்டுப் பண்புத் தொகை
புனைந்த—பெயரெச்சம்
குவித்து—வினையெச்சம்
மென்மதுரப்பதம்—பண்புத் தொகை

3 மண்டு காதல்—வினைத்தொகை
ஒப்பிலா—ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

4 அல்லல், நல்குரவு—பண்புப் பெயர்கள்
மல்லல்—உரிச்சொல்

5 விருந்து—ப[illegible] பாகு பெயர்
இல—கடைக்குறை

6 கொண்டனன்—ஆண்பால் வினை முற்று

7 இன்னமுது—பண்புத் தொகை
8 செந்நெல்—பண்புத் தொகை
மல்லல்—உரிச்சொல்
கொடு வந்தால்—'கொண்டு வந்தால்' என்பதன் இடைக் குறை
9 வெண்முளை—பண்புத் தொகை
ஒல்லை—விரைவு குறிப்புச் சொல்
10 வெந்தழல்—பண்புத் தொகை
வீழ்த்தார்—பலர்பால் வினைமுற்று
11 இன்னடிசில்—பண்புத் தொகை
செய்கோம்—தன்மைப் பன்மை வினைமுற்று
12 குறும்பயிர்—பண்புத் தொகை
13 கறியமுது—இரு பெயரொட்டுப் பண்புத் தொகை
வேறு வேறு—அடுக்குத் தொடர்
தந்த—பெயரெச்சம்
14 உணரவொண்ணு—ஈறுகெட்ட எதிர் மறைப் பெயரெச்சம்
துயில் அகற்ற—2 ஆம் வேற்றுமைத் தொகை
15 திகைத்து—வினையெச்சம்
செழுந்திரு—பண்புத் தொகை
அருள்க—வியங்கோள் வினைமுற்று
16 பெருமுலகம்—பண்புத் தொகை
இரு நிதி, பெரு நிதி—பண்புத் தொகைகள்

## பிரித்தெழுதல்

வேணியாரடி யார்—வேணியார் + அடியார்
ஈரமென்மதுரப் பதம் பரிவெய்த—ஈரம் + மென்மை + மதுரம் + பதம் + பரிவு + எய்த
நாடொறும்—நாள் + தொறும்
செய்வதென்னென—செய்வது + என் + என
காலினுற்றடவி—காலினல் + தடவி
வல்லவாற முதாக்கலும்—வல்லவாறு + அமுது + ஆக்கலும்
அல்ல தொன்றறியேன்—அல்லது + ஒன்று + அறியேன்
சுமந்தொல்லை—சுமந்து + ஒல்லை
வெந்தழல்—வெம்மை + தழல்
கறிக்கினியென் செய்கோம்—கறிக்கு + இனி + என் + செய் கோம்
அழிவுறுமையன்—அழிவு + உறும் + ஐயன்

புன் செய்க்குறும் பயிர்—புன்மை + செய் + குறுமை + பயிர்

நின்றங்கவர் துயில்—நின்று + அங்கு + அவர் + துயில்

செழுந்திரு மனைவி யாரும்—செழுமை + திரு + மனைவியாரும்

இரு நிதி—இருமை + நிதி

பெருநிதியம்—பெருமை + நிதியம்

இன்பமார்ந்திருக்க—இன்பம் + ஆர்ந்து + இருக்க

## (இ) திருவிளையாடற் புராணம்

முன்னுரை: மதுரையில் கோயில் கொண்டிருக்கும் சோம சுந்தரக் கடவுள் தம் அடியவர்பொருட்டு ஆற்றிய திருவிளையாடல்கள் 64. அவற்றை விளக்கிக் கூறுவதே இந்நூல்.

வடமொழியில் ஆலாசிய மகாத்மியம் என்னும் நூல் உள்ளது. அந்நூலைத் தழுவி எழுதப்பட்டதே இது. இது மூன்று காண்டங்கள் கொண்டது. அவையாவன 1) மதுரைககாண்டம் 2) கூடற்காண்டம் 3) திருவால்வாய்க் காண்டம்.

ஆசிரியர் வரலாறு: ஆசிரியர்—பரஞ்சோதி முனிவர். பிறப்பிடம்-திருமறைக்காடு. குலம்-வேளாளர். காலம்-கி. பி. 16ஆம் நூற்றுண்டு.

இயற்றிய வேறு நூல்கள்: வேதாரணியத் தல புராணம், திருவிளையாடற் போற்றிக் கலிவெண்பா, மதுரை பதிற்றுப் பத்தந்தாதி. தந்தை-மீனுட்சிசுந்தர தேசிகர்.

### மண் சுமந்த படலம்

#### 1. வந்தியின் வருத்தம்

தெளிவுரை: இந்நிலையில், ஊரில் உள்ள கூலியாளர், தம் தொழிலை முயற்சியுடன் செய்யலாயினர். அப்பொழுது அம் மதுரை மாநகரின் தென்கிழ்த் திசையில் வசித்துவரும், அளவற்ற ஆண்டுகள் முதிர்ந்த, நரைமூதாட்டி ஒருத்தியிருந்தாள். அவளுடைய பெயர் வந்தி என்பதாகும்.

2. தெளிவுரை: வளைந்த யாக்கையுடன் கூடிய அந்நரை மூதாட்டிகருத் தரப்பட்ட பங்கான அணையடைக்கும் பணிக்குக் கூலியாள் கிடையாது வருந்தினுள். 'மன்னன் தண்டித்தால் என் செய்வேன்?' என மயங்கினுள். நான்மாடக்கூடல் இறைவனை உள்ளத்தில் நினைத்தாள்.

#### 3. சிவபெருமானிடம் வந்தி முறையிடல்

தெளிவுரை: "பிட்டு விற்று உண்டு வாழும் பேதையேன் துன்பமடைந்தேனே! எள்ளளவேனும் வேலை செய்யமுடியாதபடி

600 008 ★ 147157

வாழ்ந்துவரும் எனக்கு இப்படியோர் இடையூறு ஏற்பட்டுவிட்டதே! பாண்டியன் ஆணையை எப்படி நிறைவேற்றுவேன்?" என்று கூறி சிவபெருமானிடம் முறையிட்டாள்.

4. தெளிவுரை: "தேவர்களுக்கும் கிடைக்கப்பெறாத தேவனே! அன்பர் யாவருக்கும் எளியனாக விளங்கும் இறைவனே! வேந்தன் ஆணையை நிறைவேற்றும் அமைச்சர் சீற்றம் கொண்டு என்னையடையுமுன், எனக்குக் கூலியாளாக வந்து ஏவல் செய்வாரைக் காணவிட்டால், ஏழையேனாகிய யான் என் செய்வேன்" என்றாள்.

## 5. கூடற்பெருமான் வையையைக் காண விரும்புதல்

தெளிவுரை: குறுகிய வடிவத்தையுடைய குண்டோதரனுக்குத் தாகத்தைத் தீர்ப்பான் வேண்டி, வைகையை ஏற்படுத்தி, நீர் குடிக்கும்படி செய்த இறைவனான சிவபெருமான், கரிய மணலைப் போன்ற கூந்தலையுடைய அவளைக் (வைகை) காண்பதற்காக, போர் இடும் கயலைப் போன்ற நீண்ட கண்களையுடைய மீனாட்சியை ஏமாற்றிவிட்டு, வடிவத்தை மாற்றிக்கொண்டு புறப்படுவாரைப் போல், புறப்பட்டார்.

## 6. சிவபெருமான் கூலியாளாக வருதல்

தெளிவுரை: சிவபெருமான் அழுக்கடைந்த பழமையான துணி ஒன்றை இடுப்பில் உடுத்திக்கொண்டார். சிறப்பான தொண்டர்களுக்கும் கிடைக்கப்பெறாத முடிமாலைக்கொப்பான, சும்மாட்டின்மேல் கூடையொன்றை கவிழ்த்துக்கொண்டார். இரும்புத் தூணை வென்றதற்கொப்பான ஒப்பில்லாத திருத்தோள்களில் மண்வெட்டியைப் போட்டுக்கொண்டு, மதுரைக்குப் புறப்பட்டார்.

## 7. சிவபிரான் வந்தி யிருக்கும் தெருவை அடைதல்

தெளிவுரை: ஒலிக்கும் வேதத்தை மிகச் சிறந்த பாகமாகிய முடியில் கொண்டுள்ள சிவபெருமான் திருவடித் தாமரைகள் நிலத்தில் பட, "எனக்குக் கூலி கொடுத்து என்னை ஏற்றுக்கொள்வோர் உண்டோ?" என்று ஒலிவடிவமான சிறந்த வேதமொழியைப் போல, உரக்கக் கூவிக்கொண்டு, அழுது கண்ணீரைக் கடலாகச் சிந்திக்கொண்டிருக்கும் வந்தி வாழ் தெருவை யடைந்தார்.

## 8. அன்னை எனத் தன்பால் இன்னருள்

தெளிவுரை: கொண்டுவரும் காளையை ஊர்தியாகக் கொண்ட இறைவனைத் தன்னருகே யழைத்த வந்தி, "எனக்களந்த கரையை யடைத்துத் தருவாயோ?" எனக் கேட்டாள். "அவ்வாறே அடைக்கின்றேன், எனக்கு அன்னையிடுங் கூலி யாதோ?" என்றார் இறைவன்.

TB 03187 N67

## 9. சிவபெருமான் கரை கட்ட ஒப்புதல்

தெளிவுரை: அப்பெரு மூதாட்டியான வந்தியும், "உனக்குக் கூலியாகப் பிட்டு இடுவேன்" என்ருள். அதற்கிசைந்த பெருமான், "பெரும்பசியாற் நான் மிக மெலிந்து போனேன். ஆகவே சுவை மிகுந்த பிட்டில் உதிர்ந்தவற்றையெல்லாம் கொடுத்தால், அதைத் தின்று பசியாறியபின். இளைப்பாறி, உன்னுடைய பங்கான கரையை அடைக்கிறேன்" என்ருர் கரையற்ற இறைவன்.

## 10. சிவபெருமானின் விளையாடல்

தெளிவுரை: இறைவன் பிட்டை வாயில் மிதக்க உண்பார், பெருவலி கொண்டவர் போல மண்வெட்டியால் வெட்டுவார்; வெட்டியெடுத்த மண்ணைக்கொண்டு போய் அயலார் பங்கான கரையில் கொட்டுவார், உடைப்பு நின்றதைக் கண்டு, தம் கொள் கையைக் கண்டு ஆர்ப்பரிப்பார். தமது வலிமையான தோள்களைத் தட்டுவார். அயலில் நின்ருரைக் களிப்புடன் தாங்கித் தழுவுவார்.

## 11. "உன் பங்கை இன்னும் அடையாதிருத்தல் ஏன்?" எனக் கேட்டல்

தெளிவுரை: வந்திக்குக் கூலியாளாக வந்திருக்கும் மனிதன் யார் என ஓடிச்சென்று அரசரின் அதிகாரிகள் பார்த்தனர். மன்மதனுக்கொப்பான அழகு படைத்தவனும், காளையைப் போன்றவனுமான இறைவனை நோக்கி, "ஏண்டா அந்தப் பங்குகளான கரைகள் யாவும் அடைபட்டுப் போக, இன்னும் இப்பங்கு ஏன் அடைக்கப்படாமல் இருக்கக் காரணமென்ன? நீ யார்? சும்மா இருக்கிருயா தம்பீ" என்ருர்கள்.

## 12. மேற்பார்வையாளர், வேந்தனுக்கு 'வந்தியின் கூலியாள் இவன்' எனல்

தெளிவுரை: வள்ளலான பாண்டியனின் சினத்தைக் கண்ட மேற்பார்வையாளர், பயந்து, எல்லையற்ற கோபத்துடன், அந்த வஞ்சியின் ஆளானவனின் பெரிய கையைப் பிடித்து இழுத்து, உள்ளும் புறமும் மேலுங்கீழும் உயிர்தொறும் மறைந்து நிற்கும் சிவபெருமானுகிய கள்வனை, 'இவனே வந்தியின் ஆள்' என்று கூறினர்.

## 13. பாண்டியன் பிரம்பினுல் அடித்தல்

தெளிவுரை: அவனைக்கண்ட பாண்டியன் சினத்துடன். கையிற் பொற்பிரம்பு கொண்டு, எல்லா உலகங்களும் எல்லா உயிர்களுமாக நின்றவன் முதுகில் வீசியடித்தான். உடனே (இறைவனுக உள்ள) வேலையாள் தன் கூடையிலிருந்த மண்ணை, உடைப்பில் கொட்டிவிட்டு மறைந்து போயினுன்.

## 14. சிவபிரான் மேல்பட்ட அடி கீழ் மேல் உலகங்களிலுள்ள அனைத்துயிரின் மீதும் படுதல்

**தெளிவுரை:** அறிவு வடிவமாக விளங்கும் சிவபிரான் மீது பட்ட அடி, பாண்டியன் முதுகிற் பட்டது; அவனுடைய மனைவியர் மீது பட்டது. சிறப்புற்ற அமைச்சர்கள் மேனியிற்பட்டது; அரசிளங்குமரர் மீது பட்டது; குதிரைகள் மீது பட்டது; மேற் பார்வை பூண்ட யானைகள் மீதுபட்டது; எவ்வுயிரின் மீதும்பட்டது.

**15. தெளிவுரை:** மதுரை நாயகனை சோமசுந்தரப் பெருமான் மீது விழுந்த அடி, கதிரவன், சந்திரன், இராகு, கேது என்னும் பாம்புகள், ஐந்து கோள்கள், பன்னிற விண்மீன்கள், பெருநிலம், தண்ணீர், தீ, காற்று, வானம் என்னும் பஞ்ச பூதங்கள், மேகம், வேதம், ஆறு சமயங்கள், தேவர்கள், முனிவர்கள், தொண்டர்கள், பூதகணங்கள் — இவ்வாருக எல்லோர் மீதும் பட்டது.

### இலக்கணம்

1 செய்வார்—வினையால் அணையும் பெயர்

2 வளைந்த—பெயரெச்சம்
உளம்—இடைக்குறை

3 இடும்பை—தொழிற்பெயர்
ஐய—அண்மை விளி

4 செய்கேன்—தன்மையொருமை வினைமுற்று

5 காண்பான்—வினையெச்சம்
நெடுங்கண்—பண்புத்தொகை
கயல் நெடுங்கண்—உவமைத்தொகை

6 திண்படை—பண்புத்தொகை
பழந்துணி—பண்புத்தொகை

7 அடிக்கமலம்— உருவகம்
அயர்வான்—வினையால் அணையும் பெயர்

8 தன்பால்—ஏழன் உருபு
பெருமுதியாள்—பண்புத்தொகை

9 பெரும்பசி—பண்புத்தொகை
மெலிந்தேன்—தன்மையொருமை வினைமுற்று
இட்டிடுவாய்—முன்னிலை யொருமை வினைமுற்று

10 பெருவலி—பண்புத்தொகை
திண்டோள்—பண்புத்தொகை
நின்றுரை—வினையால் அணையும் பெயர்

11 இருத்தி—முன்னிலை வினைமுற்று

12 தடக்கை—உரிச் சொற்றொடர்

13 நிறைந்த—பெயரெச்சம்

14 கழற்கால்— இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கதொகை

15 இருநிலம்—பண்புத்தொகை
கடுங்கனல்—பண்புத்தொகை

## பிரித்தெழுதல்

கீழ்த்திசையுளாளவிலாண்டு —கீழ்த்திசை + உளாள் + அளவு + இல் + ஆண்டு

தண்டிக்கினென் செய்கேனென்றுளந்தடுமாறி—தண்டிக்கின் + என் + செய்கேன் + என்று + உளம் + தடுமாறி

பிட்டுவிற்றுண்டு—பிட்டு + விற்று + உண்டு

இரவியெங்கெழுகென்று —இரவி + எங்கு + எழுக + என்று

அரைக்கசைத்து—அரைக்கு + அசைத்து

எனக்கன்னை—எனக்கு + அன்னை

அயனின்றுரை—அயல் + நின்றுரை

எவனீ—எவன் + நீ

இவன்றான்—இவன் + தான்

மண்டனை—மண் + த(ன்)னை

ஐங்கோள்—ஐந்து + கோள்

## (ஈ) சீறாப்புராணம்

முன்னுரை: சீறா என்னும் அரபு மொழிக்குப் பெரியோருடைய புகழ் என்று பொருள். இஸ்லாம் மதப் பெரியாராகிய முகம்மது நபியின் வரலாற்றைக் கூறுவதால், இந்நூல் சீறாப் புராணம் என்னும் பெயர் பெற்றது.

ஆசிரியர் வரலாறு: ஆசிரியர் — உமறுப் புலவர். தந்தை— சேகு முதலியார். பிறப்பிடம் — கீழக்கரையைச் சேர்ந்த ஒரு சிற்றூர். இவருடைய ஆசிரியர் — கடிகை முத்துப்புலவர். ஆதரித்தவர்—வள்ளல் சீதக்காதியின் அமைச்சராகிய அப்துல்காசிம். காலம்—கி. பி. 17ஆம் நூற்றாண்டு.

## கரம் பொருத்துப் படலம்

**கதைப்பகுதி:** முகம்மதுவைத் தங்கள் இல்லத்திற்கு அழைத்து இருக்கையில் அமர்த்தினர் யூதவாணிகர்கள். கீழே அவரை உபசரித்தனர் சிலர்; மேலே பாராங்கல் ஒன்றை உருட்ட முயன்றான் வஞ்சகன் ஒருவன். கல் அவன் கையைப் பற்றிக் கொண்டது. அலறினான் அவன். ஆங்குள்ளோர் கல்லையிழுத்தனர். கை அறுந்தது. யூதர் நபிகளிடம் ஓடினர். மன்னிக்க வேண்டினர். நபிகளும் மன்னித்துக் கரத்தைப் பொருத்தினார்.

### 1. நபியிடம் வாங்கிய பொருளின் விலையைத்தர யூதர் வீட்டுக்கு வருமாறு வேண்டுதல்

**தெளிவுரை:** அந்த யூதர்கள் வஞ்சக நெஞ்சத்தினராய் முகம்மது நபியிடம் சென்று, "மல்தொழில் உடைய தோளினது வலிமை பொருந்திய முகம்மது அவர்களே! உங்களுடைய பொருளுக்குத் தாங்கள் கூறிய, விலைப்பொருளாகிய தொகையினை, உங்களிடத்திலே நாங்கள் உறுதியாகக் கொடுப்பதற்கு எம்முடைய இல்லத்திற்கு நீங்கள் எழுந்தருள வேண்டும்" என்று கேட்டனர்.

### 2. முகம்மது யூதர் இல்லத்திற்குப் புறப்படுதல்

**தெளிவுரை:** ஆமினா என்னும் அம்மையாரின் அழகிய மகனாரும் தேவர்கள் கடலின் அலைகளைப் போல நிறைந்து சூழப்பெற்ற, இவ்வுலகத்திற்குத் தலைவரும் ஆகிய முகம்மது, ஷாமுநாட்டவரான அந்த யூதர்கள் கூறிய, சொற்களுக்கு உடன்பட்டு, மன மகிழ்ச்சியுடன் அவர்கள் தொழுது வருமாறு, அவர்களுடைய இல்லத்திற்குப் புறப்பட்டுச் சென்றனர்.

### 3. வஞ்சகர் கூறிய பொய்யுரை

**தெளிவுரை:** வஞ்சம் பொருந்திய மனத்தினையுடையவராகிய அந்த யூதர்கள் தம் பொய் திகழ்நாவால், "மேகங்கள் தவழ்ந்து வரும் குடையினை உடையீர்! நீங்கள் எங்களுடைய இந்தக்குடிலுக்கு எழுந்தருளுமாறு, நாங்கள் அடைந்த இத்தன்மையானது, நாங்கள் செய்த தவத்தின் பயனோ? எங்களுடைய முன்னோர் செய்த நிறைந்த புண்ணியத்தின் பேறுதானோ? என்று உயர்ச்சி மிகுந்த நல்ல முகமன் மொழிகளாகக் கூறினார்கள்.

### 4. யூதன் ஒருவன் கல்லைத் தள்ளுதல்

**தெளிவுரை:** (யூதர்களில்) தீமை நிறைந்த மனத்தை உடைய வணங்கிய ஒருவன் மேனிலைக்குச் சென்று, அங்கே மேலே பொருத்தப்பட்டிருந்த பலகையினை மெதுவாக இழுத்து, அங்கு இருந்த கல்லினை முகம்மது நபியின் மலைபோன்ற தோள்கள் நசுங்க

வேண்டுமென்று கருதி, கைத்தாங்கலாக உருட்டி, மெதுவாகத் தள்ளினன். அவ்வாறு தள்ளிய அளவில் அக்கல்லானது தன்னை விட்டு நீங்குதற்கு அரிய, அவனுடைய கைகளைப் பற்றிக்கொண்டு, அக்கைகள் நெரிபடுமாறு இறுககியது.

## 5. யூதன் மீளமுடியாமல் திணறுதல்

தெளிவுரை: அந்த யூதன் தன்னுடைய கைகளிலே பதிந்த அக்கல்லைக் கழற்ற முற்பட்டான். ஆனல் கழற்ற முடியவில்லை, எனவே அவன வலிமையுடன் அக்கல்லின் மீது காலை ஊன்றி, அதனை உதைத்தும், இழுத்தும், அசைத்தும், பற்களினுல் உதட்டைக் கடித்தும், நெற்றியின் மீது புருவத்தினை யேற்றி, மலை போன்ற பெரிய தோள்கள் வியர்க்குமாறு, அக்கல்லை வலிமையாக இழுத்தும், அதனைக் கழற்ற முடியாதவனுய், மிகவும் சோர்வுற்று வருந்தினுன்.

## 6. தீங்கு செய்தவர் அதனுல் கெடுதல்

தெளிவுரை: "உயர்ந்த இவ்வுலக மக்களில், ஒருவர்க்கு மற்ருெருவர் கேட்டினைச் செய்ய நினைக்கின்ற கொடிய தீமையானது அவரைவிட்டு நீங்காது, அவருடைய உயிரைப் பருகும் பொருட்டு, அவர் தம் பகைவர்கள் தம் கைகளிலே தாங்குகின்ற, வாட்படையைப் போல் விரைவாக மிகவும் அமைந்து விடும்" என்று சொன்னுன் (தரகன்)

## 7. யூதர் தங்களை மன்னிக்குமாறு வேண்டுதல்

தெளிவுரை: "வளர்கின்ற நல்லறமாகிய பயிரினை அடியுடன் அறுத்து, தீவினையாகிய பயிரினை விளைக்க நினைத்தவர்களாகிய அவ்யூதர்கள (பெரியவராகிய உங்களை) இழிவான மனமுடைய கொடியோராகிய நாங்கள் செய்த இத்தீவினையினை, உங்களுடைய சான்ருண்மையால் பொறுத்துககொண்டு, எங்களிடத்தே, நல்ல அருளினைப் புரிவிராக என்று (நபிகள் நாயகம் அவர்களை) வணங்கி மீண்டும் நல்ல சொற்களைக் கூறினர்.

## 8. அறுந்த கைகள் பொருந்துதல்

தெளிவுரை: "கரிய நிறம் பொருந்திய கல்லிலே பதிந்துள்ள அந்தக் கைகளில் உன்னுடைய இந்தக் கைகளை விளங்குமாறு வைப்பாயாக" என்று நபிகள் நாயகம் கூறிய சொற்களைத் தெளிந்து, அக்கொடிய யூதன், சொரிகின்ற குருதியுடன் காணப்படுகின்ற துடுப்பினைப் போன்ற தன்னுடைய கைகளை, முயற்சியுடன் நீட்டி, அக்கல்லிலே பதிந்த கைகளைத் தொட, (அவ்வளவில்) அக்கைகள் இக்கைகளுடன் ஒட்டின.

## 9. யூதன் தன்னை ஆட்கொள்ள வேண்டுதல்

**தெளிவுரை:** அறுபடுவதற்கு முன்னுள்ள காலத்தினும் பயன் அமைந்த முழு மலர் போன்ற தன் கைகளால் நபியின் அழகிய சிறந்த மலர் போன்ற திருவடிகளைத் தடவி, "பெருமானே, என் துன்பத்தினைப் போக்கினாய். அறுபட்ட இரு கைகளையும் ஒன்றாக்கினாய். இப்பொழுது என்னை ஆட்கொள்வீராக. அது உங்களுக்குக் கடன்" என்று கூறி அடிக்கடி அவன் பணிந்து வணங்கினான்.

### இலக்கணம்

1 வருக—வியங்கோள் வினைமுற்று
புயத்திறல்—6 ஆம் வேற்றுமைத் தொகை

2 விட்டவர்—குறிப்பு வினையால் அணையும் பெயர்
அனைத்தும்—முற்றும்மை
பூமிநாயகர்—4 ஆம் வேற்றுமைத் தொகை

3 பயனோ? பேறோ?—வினா
செய்தவம், திகழ்நா—வினைத் தொகைகள்

4 வரைப்புயம்—உவமைத் தொகை
அருள்கரம்—பண்புத் தொகை

5 ஆகாது—எதிர்மறை வினையெச்சம்
தடப்புயங்கள்—உரிச் சொற்றொடர்

6 ஒல்லை—விரைவு குறிப்புச் சொல்
மாநிலம்—உரிச் சொற்றொடர்
நேரலர்கை—6 ஆம் வேற்றுமைத் தொகை

7 புரிக—வியங்கோள் வினைமுற்று
நினைத்தவர்—வினையால் அணையும் பெயர்
புன்மனம்—பண்புத் தொகை
வினைப்பயிர்—உருவகம்
நன்மொழி—பண்புத் தொகை

8 அன்றே—அசை

9 நாளினும்—உயர்வு சிறப்பும்மை
நீக்கினை, பொருத்தினை—முன்னிலை ஒருமை வினை முற்றுக்கள்
முழுமலர்—பண்புத்தொகை
மலர்க்கரம்—உவமைத் தொகை
மாமலர்—உரிச் சொற்றொடர்

## 2. தேம்பாவணி

முன்னுரை: தேம்பாவணி — தேம் + பா + அணி என்றும், தேம்பா + அணி என்றும் இருவகையாகப்பிரிக்கலாம். இனிமை யான பாடல்களின் வரிசை, வாடாத மலர் மாலை எனப் பொருள் படும்.

ஆசிரியர் வரலாறு: வாழ்த்துப் பகுதியில் காண்க.

கதைப்பகுதி: ஏசுநாதர் மரியம்மையின் குழந்தையாக மார்கழித் திங்கள் 25ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமையில் அவதரித் தார். மிக்கயேல், காபிரியேல் என்னும் வானவர் இருவர் குழந்தையை எடுத்து மரியம்மைக்குக் காட்டினர். குழந்தை ஏசுவை மரியன்னை முத்தமிட்டாள். குழந்தை அயர்ந்து தூங்கி யது. மரியம்மையின் கைகளில் தூங்குங் குழந்தையைக்கண்டு, மகிழ்ச்சி கொண்ட சூசை பலவாறு பாராட்டினர்.

### 1. திருமகன் பிறப்பு

தெளிவுரை: மூன்றுலகங்களிலும் தனக்கு ஒப்புவமை இல்லாத வளாய், முக்காலத்திலும் அழிவில்லாது விளங்கிய, மரியன்னை (பிதா, சுதன், தூய ஆவி) என்னும் ஒரே தெய்வத்தின் மூன்று ஆட்களுள், நடுவாக அமைந்துள்ள சுதனை (ஞாயிறு, திங்கள், தீ) என்னும் மூன்று சுடர்களினும், ஒளி விளங்குமாறு, மகவாகப் பெற்ருள்.

### 2. அன்புமரி ஆதிநாதனை அளித்தல்

தெளிவுரை: மார்கழித் திங்களில், இருபத்தைந்தாம் நாளில், இரவு பதினைந்து நாழிகையில். ஆதிவாரம் என்று சொல்லக்கூடிய ஞாயிற்றுக்கிழமையில், ஆதியாகிய கர்த்தாவை, (இயேசுவை) அன்பினை உடைய மரியம்மை, தன் உள்ளத்தில் மகிழ்ச்சி மிகு மாறு, இவ்வுலகத்திற்குத் தந்தாள்.

### 3. தாய் சேயைக் காணுதல்

தெளிவுரை: அழகு பரந்த உருவத்துடன், பிறந்த மகனுகிய இயேசுவை, மிக்கயேலும், காபிரியேலும், (ஆகிய வானவர் இரு வரும்) விருப்பத்துடன், ஒருமித்துக் கைகளில் ஏந்தியவராய், ஒன் ருகவும், தாயாகிய மரியம்மையின் முன்பாக, மக்களை ஈடேற்றும் தலைவனுகிய அல் ஆண்டவனை, மாட்சிமை மிகுமாறு, காட்டி நின் ருர்கள்.

### 4. தாயின் உவகை

தெளிவுரை: மிகுதி (நிறைந்த) யான மலர் அரும்பு மணம் வீசியது போல, (கன்னித் தன்மை அழியாமல் மகனைப் பெற்ற

வளாகிய) மரியம்மை, விளக்கமுற்ற தன் புதல்வனின் கண்க ளோடு, தன் கண்களும் கலந்து நோக்கிய பொழுது, தனக்கு எதிர்ப்பட்ட, வெம்மையான கதிர்களை உடைய கதிரவனைக்கண்ட முழுமதியைப் போல, முதிர்ந்த இன்பம் பொருந்திய முகத்துடன் விளங்கினுள்.

## 5. கன்னிமரி கர்த்தனைப் போற்றல்

**தெளிவுரை:** (மரியன்னை) செங்காந்தள் மலரைப்போன்ற, தன்னுடைய சிவந்த கைகளில், இயேசுவாகிய பிள்ளையை ஏந்தி, உயர்ச்சி பொருந்திய மார்பின் கண்ணே, இறுகச் சேர்த்து, சிறப்பு மிக்க மலர் போன்ற திருவடிகளைத் தன் கைகளால் தடவி, வணங் கினுள். பெரியோர் ஆய்ந்த நூற்பொருள் அனைத்தையுங் கடந்த நிறைவான ஞானத்தினையடைந்தாள்.

## 6. சேய் அமுதுண்ணல்

**தெளிவுரை:** தெளிவுண்டாக்கப்பெற்ற அலைகளை உடைய கடலால் சூழப்பெற்ற, இவ்வுலகமெங்கும் பொருள்களைத் தொகுதி யாய்ச் சுரந்து, பலவாகிய உயிர்களெல்லாம் நிறைய உண்ணும்படி அவற்றிற்கு உணவுகளைப் படைத்தருளிய நாதன், உயிர்களுக்கு மயக்கத்தினுல் வந்த பாவங்களைப் போக்கும பொருட்டு, இவ் வுலகில் மனிதனுகத் தோன்றி, அன்பினுல் சுரந்த தாய்ப்பாலை மரியன்னை தரக் குடித்தான்.

## 7. சூசை சேயை நோக்குதல்

**தெளிவுரை:** பிறைத் திங்களைப் போன்ற நெற்றியும், விண் மீன்கள் போன்ற கண்களும், தாமரை மலர் போன்ற முகமும், தனது இயல்பினுல் மனம் பொருந்திய குளிர்ந்த மலர் போன்ற உட லும் காட்டித் தோன்றிய, நாதனுகிய இயேசுவை, தாமரை மல ரின் அழகினைப் பொருந்திய கன்னியாகிய மரியம்மையின் செம்மை யான கைகளில், மாலையில் பொருந்திய முத்தினைப்போல், சூசை, கடல் போன்ற இன்பத்தில் மூழ்கிய சிறப்புடன், கண்டான்.

## 8. சூசை அளவற்ற இன்பம் அடைதல்

**தெளிவுரை:** (சூசையானவன்) தன்னுடைய கைகளினுல், அத்தெய்வக்குழந்தையை எடுத்து, மார்போடு அன்புடன் அணைத் தான்; முத்தமிட்டான்; கண்களில் ஒற்றிக்கொண்டான்; அக் குழந்தையின் உடல் முழுவதும் தன் மகிழ்ச்சிக் கண்ணீரால் நனைத் தான்; தன் மனத்தின் கண் அவனையே நினைத்தான்; புதிய மலர் போன்ற அவனுடைய திருவடிகளைத் தன் தலையின் மீது சூடிக் கொண்டான். இவ்வெல்லாத் தன்மைகளாலும், அவன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

## 9. சூசை பராவுதல்

**தெளிவுரை:** "நம்மை இரட்சித்த நாதனாகிய இயேசு, நான் இன்பம் அடையும்படி, தன் அன்பு தூங்காமல், தான் தூங்குகிறான். அதனால் களிப்பினை உடைய இந்நாளிலே தென்றலே! இங்கே இனிமையாக வீசுக! புதிய மலர்காள்! மணமுள்ள தேனைச் சொரியுமாறு, மலருங்கள்! இனிய மாங்குயில்காள்! இனிய பாக்களைப் பாடுங்கள்" என்று சூசை இயேசுவைப் புகழ்ந்தான்.

## 10. இயேசுவின் கருணையைப் புகழ்தல்

**தெளிவுரை:** "கருணையின் இருப்பிடமானவனே! இன்பக் கடல் போன்றவனே! புண்ணாகத் துன்பப்பட்டு வருந்துகின்ற எல்லோருடைய மனத்திற்கும் ஓர் ஒப்புவமையில்லாத இனிய மருந்து போன்றவனே! அருள் நிறைந்த அன்பாக உள்ளவனே! இவ்வுலகத்தைச் சூழ்ந்து அலைகின்ற, கடலைப் போன்ற மயக்கத்தினையுடைய, என் மனத்திற்கு, உயிராகிய நிலைக்களனே! எண்ணிக்கையற்ற செல்வங்களுக்கரசனே! நீ அன்னையின் கைகளின் மேல கண்களை மூடி உறங்க, உன்னைக் கண்டேன் அல்லவோ? நீ என் மீது இரங்கிக் காட்டுகின்ற கருணை இதுவாமோ?

### இலக்கணம்

1 மூன்றினும்—உயர்வு சிறப்பும்மை

2 ஆதிநாள், ஆதிநாதன்—இரு பெயரொட்டுப் பண்புத்தொகை
காதல் நாயகி—6 ஆம் வேற்றுமைத்தொகை

3 எழ—செய என்னும் வாய்பாட்டு வினையெச்சம்
எய்தினர்—முற்றெச்சம்

4 பொதிர்—முதனிலைத் தொழிற்பெயர்
நின்றனள்—தெரிநிலை வினையால் அணையும் பெயர்
வெஞ்சுடர்—பண்புத்தொகை

5 ஏந்தினள், சேர்த்தனள், வணங்கினள்—முற்றெச்சங்கள்
ஏந்த—இடைக்குறை
செங்கரம்—பண்புத்தொகை
பூம்பதம்—உவமைத்தொகை
ஆருணர்வு—வினைத்தொகை

6 சுரந்து—செய்து என்னும் வாய்பாட்டு வினையெச்சம்
திரை—சினையாகுபெயர்

7 என, நேர்—உவம உருபுகள்
இண்டை—முதலாகுபெயர்
நீர்மை—பண்புப்பெயர்

8 இட்டல், இடல்—தொழிற்பெயர்
கழல்—தானியாகுபெயர்
கைத்தலம்—இருபெயரொட்டுப் பண்புத்தொகை
நோக்கு—காரியவாகுபெயர்
மலர்க்கழல்—உவமைத்தொகை

9 அரும்புதி—ஏவல் ஒருமை வினைமுற்று
நாகு—உரிச்சொல்
துயிலா—ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சம்
தேன் அரும்ப—2ஆம் வேற்றுமைத்தொகை
தென்கால்—பண்புத்தொகை

10 கடல், மருந்து—உவம ஆகுபெயர்கள்
பொருவா—ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
அன்ன—உவம உருபு
இதுவோ—வினா
களி—முதனிலைத் தொழிற்பெயர்

### பிரித்தெழுதல்

மூன்றினுணடுவ—மூன்று + இன் + உள் + நடுவ
ஐயைந்து—ஐந்து + ஐந்து
மூவைந்து—மூன்று + ஐந்து
சொக்களாவுரு—சொக்கு + அளாவு + உரு
செங்கரத்து—செம்மை + கரம் + அத்து
காந்தணேரிய—காந்தள் + நேரிய
அருள்சுரந்தமுதாய்தர—அருள் + சுரந்து + அமுது + தாய் + தர
தென்கால்—தெற்கு + கால்
நாண்மலர்காள்—நாள் + மலர்காள்
செல்வரசு—செல்வம் + அரசு
வெஞ்சுடர்—வெம்மை + சுடர்
மாங்குயில்—மா + குயில்

# IV. பல்சுவை

முன்னுரை: பல்வேறு ஆசிரியர்கள் எழுதிய பலவகைப் பாடல்கள் இப்பகுதியில் இடம் பெற்றுள்ளன. ஆகவே பல்சுவை என்னும் பெயர் இப்பகுதிக்கு வைக்கப்பட்டுள்ளது.

## (அ) வருணனை

### 1. உதயம்

முன்னுரை: சூளாமணி என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது. ஐஞ்சிறு காப்பியங்களில் இது முதலில் வைத்து எண்ணப்படுகிறது. சூடாமணி என்ற பெயரும் இந்நூலுக்கு உண்டு.

ஆசிரியர் வரலாறு: ஆசிரியர் -- தோலாமொழித் தேவர், சமயம்-சமணம்.

ஆதரித்தவர்: கார்வெட்டிநகர்த் தலைவர் விசயன்.

காலம்-கி. பி. 10ஆம் நூற்றுண்டின் பிற்பகுதி.

பதவுரை: குளிரும் தென்றல் — குளிர்ந்து வீசும் தென்றல் காற்று, அசைந்துஅசைந்து—அசைந்துஅசைந்து, குலவி மகிழ்ந்து-கலந்து மகிழ்ந்து, தவழ்ந்திடவே—தவழ்ந்து வரவே, மிளிரும்—விளங்கும், உதயச் செவ்வண்ணம்—கதிரவனின் வருகையால் ஏற்படும் சிவந்த நிறம், கிழக்கில்—கீழ்த்திசையில், விரைந்து பெருகிடவே—வேகமாகப் பெருகிப் பரவவே, ஒளிரும்—ஒளிபொருந்திய, சிறை — இறக்கைகளையுடைய, மென்புள்ளினங்கள் — மெல்லிய பறவைகள், ஒன்ருய்—ஒன்ருகக் கூடி, இசைகள் பாடிடவே—பலவகை ஒலிகளில் பாட்டுக்கள் பாடவே, தளிரும் இலையும்—தளிர்களும் இலைகளும், வளர் காவில்—நிறைந்துள்ள சோலையில், தண்ணுர்—குளிர்ச்சி பொருந்திய, மலர்கள்—பூக்கள், கண்விழிக்கும்—மலரும்.

தெளிவுரை: குளிர்ந்த தென்றல் காற்ருனது அசைந்து அசைந்து, இன்பமாகத் தவழ்ந்துவர, ஒளிமிக்க கதிரவனின் தோற்றத்திஞல் ஏற்பட்ட சிவந்த நிறம் கீழ்த்திசையில் விரைவாகப் பரவிவர, அழகுமிக்க மென்மைச் சிறகுகளைக் கொண்ட பறவைகள் ஒன்று கூடி, பலவகை ஒலிகளில் பாட்டிசைக்க, இலைதளிர் நிறைந்த பூங்காவில், குளிர்ச்சியான மலர்கள் விரிந்து மணம் வீசும்.

இலக்கணம்: குளிரும் தென்றல் — எதிர்கால வினையெச்சத் தொடர், அசைந்து அசைந்து—அடுக்குத் தொடர், குலவிமகிழ்ந்து-வினையெச்சம், மென்புள்ளினங்கள்—பண்புத்தொகை, வளர்கா—வினைத்தொகை, விழிக்கும்—'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினைமுற்று.

## 2. நெற்பயிர்

**முன்னுரை:** திருத்தக்க தேவர் எழுதிய பாடல்.

**ஆசிரியர் வரலாறு:** ஆசிரியர்-திருத்தக்க தேவர். சமயம்-சமணம். காலம்-கி. பி. 5ஆம் நூற்றாண்டு. இவர் இயற்றிய வேறு நூல் நரிவிருத்தம்.

**பதவுரை:** சொல் — நெற்பயிர், அரும்சூற் பசும்பாம்பின் தோற்றம் போல்—சூல் கொண்ட பச்சைப்பாம்பு போலத் தோற்ற மளித்து, மெல்லவே கருஇருந்து—கருக்கொண்டிருந்து, ஈன்று—பின்பு கதிர் ஈன்று, மேலலார் செல்வமே போல் தலை நிறுவி—கீழ் மக்கள் போல் பணிவுடைமையின்றித் தலைநிமிர்ந்து நின்று, கதிர் முற்றியபின், தேர்ந்த நூல் கல்வி சேர் மாந்தரின்—கற்றுத் துறை போகிய சான்றோர் தலைவணங்குவது போல், இறைஞ்சிக் காய்த்தவே—(இறைஞ்சி) சாய்ந்து விளைந்தன.

**தெளிவுரை:** நெற்பயிர்கள் பச்சைப்பாம்பைப் போலக் கருக் கொண்டிருந்து, பின்பு கதிர் ஈன்று, கீழ்மக்களைப் போல வணக்க மின்றித் தலைநிமிர்ந்து நின்று, கதிர் முற்றிக் கற்றூர் தலைவணங்கு வது போல், இறைஞ்சிச் சாய்ந்து விளைந்தன.

**இலக்கணம்:** பசும்பாம்பு—பண்புத்தொகை. இருந்து—வினை யெச்சம், தேர்ந்த—பெயரெச்சம்.

## 3. மாலைப்பொழுது

**முன்னுரை:** கம்ப ராமாயணத்தில் உள்ள பாடல். சித்திரக் கூடப் பருவதத்தை இராமன், இலக்குவன், சீதை மூவரும் அடைந் தனர். அப்பொழுது மாலைக்காலம் வந்துற்றது. அம்மாலைப் பொழு தின் காட்சிகள் இப்பாடலில் கூறப்படுகின்றன.

**ஆசிரியர் வரலாறு:** கம்ப ராமாயணப் பகுதியில் பார்க்கவும்.

**பதவுரை:** (அம்மாலைக் காலத்தில்) மந்தியும் கடுவனும் — ஆண் குரங்குகளும் பெண் குரங்குகளும், மரங்கள் நோக்கின — (இரவில் தங்கியிருப்பதற்காக) மரங்களை நோக்கிச் சென்றன, தந்தியும் பிடிகளும்—(பகற்பொழுதிற் காடுகளில் திரிந்த) ஆண் யானைகளும் பெண் யானைகளும் (தாம் தங்கியிருத்ததற்கான) தடங்கள் நோக்கின—மலையடியை நோக்கிச் சென்றன. நிந்தை இல்—குற்றமற்ற, சகுந்தங்கள்—பறவைகள், நீளம் நோக்கின— (தம்) கூடுகளை நோக்கிச் சென்றன, அறிவை நோக்கினன்—(அப் பொழுது தத்துவ ஞானத்தினால் எல்லாம் அறிந்த இராமன் தான் மேற்கொண்ட மனித வடிவிற்கேற்ப, அந்தியை நோக்கினன் — மாலைக்காலத்தில் செய்தற்குரிய கடமைகளைக் கருதிச் சென்றான்.

**தெளிவுரை:** அம்மாலைக் காலத்தில் ஆண் குரங்குகளும், பெண் குரங்குகளும் இரவில் தங்கி யிருப்பதற்காக மரங்களை நோக்கிச் சென்றன, பகற்பொழுதில் காடுகளில் திரிந்த ஆண்

யானைகளும், பெண் யானைகளும், தாம் தங்கியிருத்தற்கான மலையடியை நோக்கிச் சென்றன. குற்றமற்ற பறவைகள், தம் கூடுகளை நோக்கிச் சென்றன. அப்பொழுது தத்துவ ஞானத்தினால் எல்லாம் அறிந்த இராமன், தான் மேற்கொண்ட மனித வடிவிற்கேற்ப மாலைக் காலத்தில் செய்தற்குரிய கடமைகளைக் கருதிச் சென்றான்.

இலக்கணம்: நோக்கின—நோக்கு + இன் + அ; மரங்களோக்கின—மரங்கள் + நோக்கின; இல—கடைக்குறை.

## 4. நாரை விடு தூது

முன்னுரை: தூது என்ற நூல் வகை பிற்காலத்து எழுந்த சிறு பிரபந்த நூல வகைகளைச் சேர்ந்தது. இப்பாடல் தனிப் பாடற்றிரட்டில் காணப்படுகின்றது.

நூல் வரலாறு: பாண்டியன் ஒரு நாள் இரவு நகர் சோதனை செய்யும் பொருட்டு, மதுரை நகரைச் சுற்றி வரும்பொழுது, ஓர் பாழடைந்த சத்திரத்திற் படுத்திருந்த புலவர் தமது துன்பத்தைக் குறித்துப் பாடியது.

ஆசிரியர் வரலாறு: ஆசிரியர்—சத்தி முற்றப் புலவர்; பிறப்பிடம்—சத்தி முற்றம்; இயற்பெயர்—தெரியவில்லை.

பதவுரை: நாராய் நாராய் செங்கால் நாராய்—சிவந்த காலையுடைய நாரைகளே! பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன—கனி பொருந்திய முதிர்ந்த பனையின் கிழங்கை நடுவிற் கீறினாற் போன்ற தோற்றத்தையுடைய, பவளக்கூர் வாய்ச் செங்கால் நாராய்—பவளத்தைப் போலச் சிவப்பாயும் கூர்மையாயுமுள்ள வாயையுடைய செம்மையான நிறத்தோடு கூடிய கால்களையுடைய நாரைகளே! நீயும் நின் மனைவியும—நீயும் உன் மனைவியும், தென்திசையிலுள்ள கன்னியாகுமரியிற் குளித்து விட்டு, வட திசைக்கு ஏகுவீராயின—வடக்குத் திசைப் பக்கம் செல்வீரானால், எம்மூர் சத்திமுத்த வாவியுள் தங்கி—என் பதியாகிய சத்தி முத்தமென்னும் ஊரிலுள்ள பொய்கையில் இடை வெளியில் தங்கி, நனை சுவர்க் கூரை—மழை நீரினால ஈரமான சுவரையுடைய இறப்பிலே, கனைகுரல் பல்லி—ஒரு வகையான ஓசைக் குரலுடைய பல்லியின், பாடு பார்த்திருக்கும—சொல்லை இன்ன தென்று எதிர் பார்த்திருக்கும், என் மனைவியைக் கண்டு—என்னுடைய இல்லாளைப் பார்த்து எம்கோன் மாறன் வழுதி கூடலில்—எமது தலைவனாகிய பாண்டியனுடைய மதுரையிலே, ஆடையின்றி வாடையின் மெலிந்து—உடையில்லாமல் வாடைக்காற்றில் தளர்ந்து போய், கையது கொண்டு மெய்யது பொத்தி—இரு கையினாலும உடம்பை மூடிக்கொண்டு, காலது கொண்டு மேலது தழீஇ—காலினாலே அரையின் மேற்பாகத்தைப் பொருத்திக்கொண்டு, பேழையுள்ளிருக்கும் பாம்பென உயிர்க்கும் — பெட்டிக்குள் அடைத்த பாம்பு போல மூச்சுவிடும், ஏழையாளனை—வறியவனை, கண்டனம எனுமே — பார்த்தோம் என்று தெரிவியுங்கள்.

தெளிவுரை: நாரையே! சிவந்த கால்கள் கொண்ட நாரையே! பழுத்த பழங்கள் நிறைந்த பனையின் கிழங்கு பிளந்தாற் போன்று, பவள நிறங்கொண்ட கூர்மையான வாயும், செம்மையான கால்களும் கொண்ட நாராய்! நீயும் உன் மனைவியும், தென் திசையில் உள்ள கன்னியாகுமரியில் நீராடிய பின், வடதிசைக் கண் செல்வீராயின், என் ஊரான சத்திமுற்றத்திலுள்ள, குளக் கரையில் தங்குங்கள். சுவரின் மீது அமர்ந்து பல்லி சொல்லும் பலனுக்காகக் காத்திருக்கும் என் மனையாளைக் கண்டு, 'மாறன் வழுதி என்ற பாண்டியன் ஆளும் மதுரையில், ஆடையில்லாமல், வாடையால் மெலிந்து, தன் கைகளினாலேயே உடலைப் பொத்திக் கொண்டு, கால்களால் உடலைப் போர்த்தி முடங்கி, பெட்டியில் இருக்கும் பாம்பு போலப் பெரு மூச்சுவிட்டுக் கொண்டிருக்கும், ஏழைப் புலவனைக் கண்டோம் எனச் சொல்லுவீர்களாக! என்றார். (சத்திமுற்றப்புலவர்)

## இலக்கணம்

நாராய்—அண்மைவிளி

பவளக்கூர்வாய்—உவமைத்தொகை

நனைசுவர், கனைகுரல்—வினைத்தொகைகள்

செங்கால்—பண்புத்தொகை

தமிஇ சொல்லிசையளபெடை

## பிரித்தெழுதல்

செங்கால்—செம்மை + கால்

தென்றிசை—தெற்கு + திசை

வாவியுட்டங்கி—வாவி + உள் + தங்கி

## 5. எழிலோவியம்

முன்னுரை: வாணிதாசனார் இயற்றிய பாடல். இவர் எளிய இனிய கவிதைகள் இயற்றுவதில் வல்லவர்.

ஆசிரியர் வரலாறு: ஆசிரியர்—வாணிதாசனார், இயற்பெயர்-அரங்கசாமி, பிறப்பிடம்—சேலியமேடு (புதுச்சேரிக்குப் பக்கம்) இவர் பாரதிதாசனாரின் மாணவர்.

பதவுரை: பொன்மணிக்கோவை—பொன்னால் செய்யப்பட்ட மணிமாலை போல, கொன்றைப்பூங் கொத்துஆம் — கொன்றை மலர்கள் இருக்கின்றன, அக்கொத்தின் கீழ் — அப்பூங்கொத்தின் கீழாக, முன் நீண்டு தொங்கும் காய்கள்—முன்னால் நீண்டு தொங்கும் காய்கள், குரங்கின் வாய் குமட்டி முன்னர்ப் பொன் செய்யும் கொல்லன் ஊதாங்குழல் எனில்—குரங்கு, கொல்லனின் நெருப்புக் குமட்டி முன்னால், ஊதும் குழல் என்றால், பொருந்தும் — பொருந்துவதாகும், காட்டுப்பன் மலர் மொய்க்கும் வண்டோ — காட்டுப்

பூக்களில் மொய்க்கும் வண்டுகளோ வென்றால், தம்பி—தம்பீ!, கருநாவல் பழமே — கருநாவற்பழமேயாகும். களிமயில்—களிப் புடன் கூடிய மயில், அகவும்— அகவும். புள்ளிக்கருங்குயில்— புள்ளிகளையுடைய கருங்குயில்கள், பாட்டு இசைக்கும்— பாட்டுக் களைப்பாடும், துணை பிரிந்த புள்ளினம்—துணை பிரிந்த பறவைகள், விளித்திடும்—கூப்பிடும், விளாமரத்தில் ஒளித்துண்ணும் அணிலோ—விளாமரத்தில் ஒளித்துத் தின்னும் அணிலோ, கிள்ளை ஒளி மூக்கை—கிளியின் ஒளியோடுள்ள மூக்கை, மிளகாய் என்று-மிளகாய் என்று நினைத்து, களித்து உண்ணப்பாயும்-களித்து உண் பதற்குப் பாயும், எழில் ஓவியத்தைக் காண்— இந்த அழகு ஓவியத் தைக் காணுங்கள்.

**தெளிவுரை:** காட்டில் உள்ள கொன்றை மலர்க் கொத் துக்கள், பொன்மணியால் செய்யப்பட்ட மாலைகளாகும்; அக் கொத்தின் கீழ் முன்னால் நீண்டு தொங்கும் காய்கள், குரங்கின் வாய் என்றாவது, குமட்டி அடுப்பின் முன் கொல்லன் ஊதும் குழல் என்றாவது சொல்வது பொருந்தும்; கட்டுப்பன் மலர்களில் மொய்க் கும் வண்டுகள் கருநாவற் பழங்களாகும்.

காட்டில் மயில்கள் அகவும்; புள்ளிகளோடு கூடிய குயில்கள் பாட்டுக்கள் பாடும்; துணைகளைப் பிரிந்த பறவைகள் தம் துணை யைக் கூப்பிடும்; விளாமரத்தில் ஒளித்துண்ணும் அணிலோ, கிளி யின் மூக்கை மிளகாய் என்று களிப்புடன் உண்பதற்குப் பாயும். இவ்வகை யழகையெல்லாம் காட்டில் கண்டு மகிழவும்.

### இலக்கணம்

தொங்கும்—பெயரெச்சம்

பன்மலர்—பண்புத்தொகை

கருநாவல் பழம், கருங்குயில் } பண்புத்தொகைகள்

கொன்றைப் பூங்கொத்து—கொன்றை + பூ + கொத்து

கருநாவல்—கருமை + நாவல்

பன்மலர்—பன்மை + மலர்

முன்னீண்டு—முன் + நீண்டு

## 6. சோலை

**முன்னுரை:** நைடதத்திலிருந்து எடுக்கப்பட்ட பாடல்.

**ஆசிரியர் வரலாறு:** ஆசிரியர்—அதிவீரராமபாண்டியர் கொற்கை மன்னர்.

**காலம்:** கி. பி. 15ஆம் நூற்றாண்டு.

**பதவுரை:** பூங்கரும்பு—அழகிய கரும்பின், அடைந்த தீம் சாறு—இனிமையான சாறு. அடுபுகை—காய்ச்சும்போது உண்டாகும் புகையை, புயல் என்று எண்ணி—மேகம் என்று கருதி, மாங்குயில் தொகுதியாவும்—மாஞ்சோலைக்குயிலினம் முழுவதும், வாய் விடாது ஒழிந்த—வாய்விடாது, தூங்கிசை வண்டும்—இசைபாடும் வண்டுகளும், தேனும் கரும்பொடு ஞிமிறும்—தேன் குடிக்கும் கரும்பும் ஞிமிறும், பாட — இணைந்து பாட, தேங்கமழ் சோலை தோறும்—வாசனை கமழும் சோலைகள் முழுவதும், சிறை விரித்து —தன் தோகைகளை விரித்து, மஞ்ஞை—மயில்கள், ஆடும்— ஆடும். (மாதோ—அசை)

**தெளிவுரை:** அழகிய கரும்பின் இனிமையான சாறு ஆலையை அடைந்து காய்ச்சப்படும்பொழுது எழுந்த புகையை மேகம் என்று நினைத்து, மாஞ்சோலைக் குயில்கள், வாய்விடாது பாட, இசை பாடும் வண்டினமும் கரும்பும் ஞிமிறும் இணைந்துபாட, மயில்கள் தன் அழகிய தோகையை விரித்து, சோலைகளில் ஆடின.

## இலக்கணம்

தீஞ்சாறு—பண்புத்தொகை

அடுபுகை—வினைத்தொகை

பாட—'செய' என்னும் வாய்பாட்டு வினையெச்சம்

## 7. வண்ணத்துப் பூச்சி

**முன்னுரை:** வண்ணத்துப்பூச்சியின் அழகு வர்ணிக்கப்படுகிறது.

**ஆசிரியர் வரலாறு:** ஆசிரியர்—தணிகை உலகநாதன்
பிறப்பிடம்—வட ஆர்க்காடு மாவட்டம். வாழ்ந்து வருபவர்.

**பதவுரை:** கண்ணினைக் கவரும் நல்ல கவின் உறும் மலரில் மேவும்—கண்ணைக்கவரும் நல்ல அழகு பொருந்திய மலரில் அமரும், வண்ணத்துப்பூச்சியே உன் வனப்பினை என்ன சொல்வேன்— வண்ணத்துப்பூச்சியே உன் அழகை எப்படிப் புகழ்வேன்?, மண் உயர் தோட்டம் எல்லாம் மாண்புடன் ஆளும் உன்னை—மண்ணுலகில் உள்ள தோட்டங்களில் எல்லாம் மாட்சிமையுடன் ஆளும் உன்னை, எண்ணியே படைத்தோன் தன்னை என்றுமே வணங்குவேனே—எண்ணி உன்னைப் படைத்த நான்முகனை என்றும் வணங்குவேன்; தேனினை அதிகமாகக் குடித்ததால் உனது நாக்கு—தேனை மிகுதியாகக் குடித்துவிட்டதால் உனது நாக்கு; ஊனமாய்ப் போனதோ நீ ஊமையாய் இருக்கிருயே-குறைபட்டுப் போனதாகக் கருதிப் பேசாமல் இருக்கிருயே; தேன் அதைக் குடிக்கும் ஈயும் சில்லென்று பறக்கும் வண்டும்—தேன் குடிக்கும் வண்டும், சில்லென்று பறக்கும் வண்டும்; கானமே புரியும் நீதான் காதில் கேட்டிடாயோ—பாட்டுப் பாடுவதை நீ செவியால் கேட்டதில்லையா?;

பட்டுப்போல் மேனி பெற்றாய் பறக்கின்ற மலரே போல்வாய்—பட்டுப் போன்ற உடலைப் பெற்றுள்ளாய், பறக்கும் மலர் போலும் இருக்கின்றாய்; தொட்டு உனைப் பார்க்க உள்ளம் துடிக்கின்றது—உன்னைத் தொட்டுப் பார்க்க மனம் துடிக்கின்றது; இங்கு வந்து திட்டமாம் எனது கையில்—ஆகவே, இங்கு வந்து என்னுடைய கையில்; சிறுபொழுது இருப்பாய்—சிறிது நேரம் இருப்பாயாக; பின்னர் இட்டமாய் பறந்து போவாய்—பிறகு உன் இச்சைப்படி பறந்து போவாயாக; எழில் வண்ணப்பூச்சி நீயே—அழகு வண்ணப்பூச்சி நீயே.

தெளிவுரை: கண்ணைக்கவரும், நல்ல அழகுடன் பொருந்திய மலரில் அமரும் வண்ணத்துப்பூச்சியே உன அழகை எப்படிப் புகழ்வேன்? மண்ணுலகத் தோட்டங்களில் எல்லாம் பெருமையுடன் ஆளும் உன்னைப படைத்த நான்முகனை எப்பொழுதும் வணங்குவேன். தேனை மிகுதியாகக் குடித்ததால், உன் நாக்குக் குழறவு பட்டதென்று பேசாதிருக்கிறாயோ? தேன் குடிக்கும் ஈக்களும், வண்டுகளும் பாட்டுக்கள் பாடித் திரிவதை நீ கேட்டதில்லையோ? பட்டுப் போன்ற உடலைப் பெற்றுள்ளாய்; பறக்கும் மலரே போல் இருக்கிறாய். உன்னைத் தொட்டுப் பார்க்க ஆசையாக இருக்கிறது. சிறிது நேரம் என் கைகளில் வந்து இருந்து, பிறகு உன் இச்சைப்படி பறந்து செல்! அழகு வண்ணப்பூச்சி நீயே!

## இலக்கணம்

படைத்தோன்—வினையால் அணையும் பெயர்

போவாய்—முன்னிலை வினைமுற்று

## (ஆ) சீட்டுக்கவி

முன்னுரை: செய்யுள் வடிவில் எழுதப்படும் மடங்கல் சீட்டுக்கவி என்று அழைக்கப்படும். இச்செய்யுளை எழுதியவர் சீர்காழி அருணாசலக் கவிராயர்.

ஆசிரியர் வரலாறு: ஆசிரியர்-சீர்காழி அருணாசலக் கவிராயர். 'இராம நாடகம்' என்ற நாடக நூலை எழுதியவர். இந்நூலை அரங்கேற்றும் பொருட்டு, உதவி கோரி மணலி முத்துக்கிருட்ண முதலியார் என்பவர் மீது பாடியது.

பதவுரை: சித்தி தருகிறவல்லி—காரிய சித்தியை யளிக்கின்ற கொடி போன்ற அம்பிகை, புத்தி தருகிறவல்லி—அறிவு தருகின்ற அம்பிகை, தேவர்கள் வணங்கும் வல்லி—விண்ணவர்கள் வழிபடுகின்ற தேவி, தில்லைநாயக வல்லி—தில்லைக்குத் தலைமை பூண்ட அம்பிகை, சிவகாமவல்லி—சிவகாமி யென்னும் திருப்பெயருடைய அம்பிகை என்பவளுடைய, இருதிரு விழிக் கருணையாலே—இரண்டு திருக் கண்களின் கடைக்கருணையாலே, சத்தியவாசகன் என்று

பூமண்டலாதிபர்கள் தாம் துதிக்கும் — மெய்வாக்கினன் என்று பூவுலகத்தார் போற்றுகின்ற, சகலபாஷா நிபுண மணவி முத்துக் கிருஷ்ண சதுர—எல்லா மொழிகளிலும் தேர்ச்சியுள்ள மணவி என்னும் ஊரில் வீற்றிருக்கும் முத்துக்கிருட்ண முதலியாராகிய சாமர்த்தியவானே! நீ வாழி கண்டாய்—நீ நீடூழி வாழ்வாயாக.

நத்து மலர் குவளை நான் மதியம் நீ — சங்குகள் தங்கும் குவளைப் பூப்போல்வன் நான். அதற்கு மலர்ச்சி தருகின்ற சந்திரனைப் போல் வாய்நீ, செஞ்சாலி நான் கருவி மழை மேகம் நீ—செந்நெற் கதிர் நான், கார்காலத்து மழை பொழிகின்ற மேகம் நீ, நளினம் நான் பரிதிநீ — தாமரை மலர் நான், கதிரவன் நீ, பிள்ளைநான் அன்னை நீ—குழந்தை நான், தாய் நீ, நான் கவிஞன் வழுதி நீ — நான் பாவலன். நீ பாட்டிற்குப் பரிசளிக்கின்ற பாண்டியன், சுத்த மூள ராமாயணந்தனைக் கொண்டு உனது சுமுகமது பெற வருகிறேன், குற்றமில்லாமற் செய்த இராமாயணக் கீர்த்தனையோடு உன்னுடைய நன்மதிப்புப் பெற வருகிறேன், சொல் பொருள் அறிந்து அளவு சொல்லுவேன் கேட்கவே துணையாக வேணும் நீயே—சொல்லின் பொருளை யானறிந்த அளவு எடுத்தியம்புவேன் (அதை எல்லாரும்) கேட்கும்படி நீ உதவி செய்ய வேண்டும்.

**தெளிவுரை:** காரியசித்தியைத் தருகின்ற அம்பிகையும், அறிவைத் தருகின்ற அம்பிகையும், தேவர்கள் வழிபடுகின்ற தேவியும், தில்லைப்பதிக்குத் தலைமை பூண்டவளுமாகிய சிவகாமவல்லியின் திருக்கண்களின் கருணைப் பார்வையினால், உண்மை பேசுகின்றவன் என்று இம்மண்ணுலகத்தவர் யாவரும் போற்றுகின்ற, எல்லா மொழிகளிலும் தேர்ச்சி பெற்ற, மணவி என்னும் ஊரில் வாழ்கின்ற முத்துக்கிருட்ணன் ஆகிய திறமை பொருந்தியவனே! நீ நீண்டகாலம் வாழ்வாயாக.

நான் குவளை மலர் போன்றவன், நீ அதற்கு மலர்ச்சியளிக்கின்ற வெண்மதி போன்றவன்! நான் செந்நெற்கதிர் போன்றவன், நீ அப்பயிருக்குப் பயனாகும் மழை போன்றவன். நான் தாமரை மலர் போன்றவன், நீ அதனை மலரச் செய்கின்ற கதிரவனைப் போன்றவன். நான் குழந்தை போன்றவன், நீ அதனைப் பாதுகாக்கும் தாய் போன்றவன்.

நான் இயற்றிய குற்றமற்ற இராமாயண நாடகத்தை என்னுடன் எடுத்துக்கொண்டு, உன்னுடைய நன்மதிப்பைப் பெறுவதற்கு வருகின்றேன். அந்நூலின் சொற்பொருளை நான் அறிந்த அளவு சொல்லுவேன். அதனை எல்லோரும் கேட்கும்படியாக நீ எனக்கு உதவி செய்ய வேண்டும்.

**இலக்கணம்:** வல்லி—உவம ஆகுபெயர். நத்து—நந்து என்பதன் வலித்தல் விகாரம். வாழி — வியங்கோள் வினைமுற்று. பூமண்டலாதிபர்-பூ + மண்டலம் + அதிபர், அறிந்தளவு-அறிந்த + அளவு.

## (இ) இரட்டுற மொழிதல்

முன்னுரை: இரு பொருள்படும் படியாகச் சொல்லையேனும், தொடரையேனும் அமைத்துச் செய்யுள் பாடுவது சிலேடை அல்லது இரட்டுற மொழிதல் (இரு சொல் அலங்காரம்) எனப்படும். இது இரண்டு வகைப்படும். (1) செம்மொழிச் சிலேடை—ஒரு சொல்லைப் பிரிக்காமல் இரு பொருள் கூறுவது (2) பிரிமொழிச் சிலேடை—சொல்லைப் பிரித்துப் பொருள் கூறுவது.

ஆசிரியர் வரலாறு: ஆசிரியர்—கவிகாளமேகம்; இளமைப் பெயர்—வரதன்; பிறப்பிடம்—நந்திக் கிராமம்; காலம்—கி. பி. 15 ஆம் நூற்றுண்டு.

### பாம்புக்கும் எலுமிச்சம் பழத்துக்கும் சிலேடை

பதவுரை: தேம்பொழியும் சோலை—தேன் பாய்கின்ற பூஞ் சோலைகளை உடைய, திருமலைராயன் வரையில்—திருமலைராயனுடைய மலையின் மீது, பாம்பு—பாம்பானது, பெரிய விடமே சேரும்—உயிரைக் கொல்லக் கூடிய நஞ்சை உடையதாகும். பித்தர் முடியேறும்—பித்தன் என்னும் பெயரையுடைய சிவபெருமான் திருமுடியின் மீது தங்கியிருக்கும். அரியுண்ணும்—காற்றைப் புசிக்கும், உப்பும்—காற்றினலே உடல் பருக்கும, மேல் ஆடும்—தலை தூக்கி ஆடும், எரிகுணமாம்—கோபக் குணமுடையதாகும், எலுமிச்சம்பழம்—எலுமிச்சம் பழமானது, பெரிய இடமே சேரும்—பெரியவர்கள் கையிற் கொடுக்கப்படும்; பித்தர் முடியேறும்—அதன் சாறு சிவபெருமான் முடியின் மீது அபிடேகம் செய்யப்படும்; அரியுண்ணும்—(ஊறு காய்க்காக) அது துண்டு துண்டாக அரியப்படும்; உப்புமேல் ஆடும்—உப்பு அதன்மேல் தூவப்படும், எரி குணமாம்—அதன் சாறுபட்டால் எரிச்சல் உண்டாகும். (ஆதலால்) பாம்பு எலுமிச்சம் பழத்துக்குச் சமமாகும்.

தெளிவுரை: தேன் பாய்கின்ற பூஞ்சோலைகளை உடைய திருமலைராயனுடைய மலையின் மீது பாம்பானது, உயிரைக் கொல்லக கூடிய நஞ்சை உடையதாகும். பித்தன் என்னும் பெயரையுடைய சிவபெருமான் திருமுடியின் மீது தங்கியிருக்கும. காற்றைப் புசிக்கும். காற்றினலே உடல் பருக்கும். தலை தூக்கி ஆடும். கோபக் குணமுடையதாகும்.

எலுமிச்சம் பழமானது பெரியவர்கள் கையிற் கொடுக்கப் படும். அதன் சாறு சிவபெருமான் முடியின் மீது அபிடேகம் செய்யப்படும். ஊறுகாய் போட அது துண்டு துண்டாக அரியப் படும். உப்பு அதன் மேல் தூவப்படும். அதன் சாறுபட்டால் எரிச்சல் உண்டாகும். (ஆதவால்) பாம்பு எலுமிச்சம் பழத்துக் குச் சமமாகும்.

## இலக்கணம்

பித்தர் முடி—6ஆம் வேற்றுமைத்தொகை
சேரும், ஏறும், ஆடும் — செய்யும் என்னும் வாய்பாட்டுவினை முற்றுக்கள்

## பானைக்கும் யானைக்கும் சிலேடை

**முன்னுரை:** கரந்தைக் கவியரசர் பாடல்

**ஆசிரியர் வரலாறு:** ஆசிரியர்—அரங்கவேங்கடாசலம் பிள்ளை தந்தை—அரங்கசாமி பிள்ளை, பிறப்பிடம்—மோகனூர், தொழில்-தஞ்சை தூய பேதுரு உயர் நிலைப்பள்ளி, திருவையாறு அரசர் கல்லூரி, கரந்தை தமிழ்க் கல்லூரி முதலிய பள்ளிகளில் தமிழாசான் பணி.

**இயற்றிய நூல்கள்:** ஆசாறுற்றுப்படை, இன்பப்பத்து, துன்பப் பத்து, பிணிப்பத்து, வறுமைப் பத்து, காலம்—கி. பி. 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதி.

**பதவுரை:** அம்குசவன்—அழகிய குயவன், கை உருக்கொண்டு ஆடும்—கையினால் உருவத்தைப் பெற்றுச் சுழலும், அரிசி கொளும்—அரிசி வைக்க முடியும், பொங்குதலை வெண்கோடு பூணும் — பொங்கும் பொழுது, வெண் கோலங்கள் போட்டு அணி செய்யப் பெறும், தங்குபுடைத்தானையொடு வந்து இறங்கும் — துணி முதலியவற்றோடு சீராக வந்திறங்கும், தாவு கரியாம்—கரிய நிறமுடன் விளங்கும.

**யானைக்கு:** அங்குசவன் கை—அங்குசத்தைக் கொண்ட வலிய கைக்கு, உருக்கொண்டாடும்—அச்சம் கொண்டு அடங்கி நடக்கும், அரிசி கொளும்—அரிசி தின்னும், பொங்குதலை வெண் கோடு பூணும் —பெரிய தலை, வெள்ளைத்தந்தங்கள் கொண்டு விளங்கும், தங்குபுடைத்தானையொடு வந்து இறங்கும் — வேறு சேனைகளுடன் வந்து போர்க்களத்தையடையும், தாவு கரியாம்—கரிய நிறம் பெற்றிருக்கும். இவற்றால்—இக்காரணங்களால், பானைக்கு —பானைக்கு, யானை நேர்—யானை இணையாகும், பார் — பார்த்துக் கொள் (தெரிந்து கொள்)

**தெளிவுரை:** (பானைக்கு) அழகிய குயவன் கையினால் உருவத்தைப் பெற்றுச் சுழலும்; அரிசி ஏற்கும்; பொங்கும் பொழுது, வெண்கோலங்கள் போடப்பட்டு அணி செய்யப் பெறும்; துணி முதலியவற்றோடு சீராக வந்திறங்கும்; கரிய நிறமுடன் விளங்கும்.

**யானைக்கு:** அங்குசத்தைக் கொண்ட வலிய கைக்கு அச்சங் கொண்டு அடங்கி நடக்கும்; அரிசி கொடுத்தால் ஏற்றுக்கொள்ளும்; பெரிய தலை, வெள்ளைத் தந்தங்களோடு விளங்கும்; வேறு

சேனைகளுடன் வந்து போர்க்களத்தையடையும்; கரிய நிறம் பெற்றுத் திகழும்; இக்காரணங்களால் பானைக்கு யானை சமமாகும்.

### இலக்கணம்

ஆடும்—'செய்யுட' என்னும் வாய்பாட்டு வினைமுற்று

கொளும்—இடைக்குறை

வெண்கோடு—பண்புத்தொகை

ஆல்—அசை

நேர்—உவமஉருபு

## (ஈ) சிற்றிலக்கியம்

முன்னுரை: சிறு இலக்கியங்கள் கொண்ட பகுதி. சிறுபிரபந்தங்கள் என்றும் கூறலாம். பிள்ளைத் தமிழ் 96 வகையான பிரபந்தங்களில் ஒன்று. கடவுளையோ, மக்களுள் சிறப்புடைய ஒருவரையோ குழந்தையாகப் பாவித்து அவர் தம்குழந்தைப் பருவ நிகழ்ச்சிகளைப் பத்துப் பருவங்களாகப் பிரித்துப் பருவத்துக்குப் பத்துப் பாடல் வீதம் ஆசிரிய விருத்தங்களால் பாடப்படும நூல்

மதுரையில் கோயில் கொண்டு விளங்கும் மீனாட்சியம்மையைப் பற்றிய பிள்ளைத்தமிழ் இது.

### பிள்ளைத்தமிழ் – 10 பருவங்கள்

1) காப்பு 2) செங்கீரை 3) தால் 4) சப்பாணி 5) முத்தம் 6) வருகை 7) அம்புலி 8) கழங்கு 9) அம்மானை 10) ஊசல் (இது பெண்பாற் பிள்ளைத்தமிழ்) ஆண்பாற் பிள்ளைத்தமிழுக்கு இறுதி மூன்று பருவங்களும் சிற்றில், சிறுபறை, சிறுதேர் என வரும்,

வருகை: (நம் பாடப் பகுதி) ஓராண்டு நிரம்பப்பெற்று, தளிர்நடையிட்டு வருகின்ற குழந்தையைத் தாய் வருக வருக என அழைப்பது. (மீனாட்சியாகிய குழந்தையின் வருகைப் ப்ருவம்)

பதவுரை: தொடுக்கும் — தொடுக்கப்பட்டுள்ள, கடவுள் பழம் பாடல்—தெய்வத்தன்மை பொருந்திய பழைய பாடல்கள் என்னும் நான்கு மறைகளாலாகிய, தொடையின் பயனே—மாலையின் பொருளாக விளங்குபவளே, நறைபழுத்த — தேன்சுவை மிகுந்த, துறை தீம்தமிழின் — அகத் துறைகளும், புறத்துறைகளும் அமையப்பெற்ற இனிய தமிழினின்றும், ஒழுகுநறும் சுவையே — ஒழுகுகின்ற நல்ல சுவையானவளே!, அகந்தைக் கிழங்கை — ஆணவமாகிய கிழங்கினை, அகழ்ந்து எடுக்கும் — தோண்டி எடுக்கின்ற, தொழும் பர்உளக் கோயிற்கு—தொண்டர்களின் மனமாகிய கோயிலுக்கு, ஏற்றும் விளக்கே—ஏற்று

கின்ற விளக்காய் உள்ளவளே! வளர் சிமயம் இமயப்பொருப்பில்—உயர்ந்த சிகரங்களையுடைய இமயமலையில், விளையாடும்—விளையாடுகின்ற, இளமென்பிடியே — இளமையும் மென்மையும் பொருந்திய பெண் யானையே, எறிதரங்கம் உடுக்கும்—அலைகளைக் கொண்ட கடலை ஆடையாக உடுத்துள்ள, புவனம் கடந்து நின்ற—இவ்வுலகத்திற்கு அப்பாற்பட்டுத் தோன்றுகின்ற, ஒருவன்—ஒப்பற்றவனாகிய சிவபெருமான், திருவுள்ளத்தில்—தன் மனத்தில் அழகு ஒழுக — அழகு வழியும்படி, எழுதிப் பார்த்திருக்கும் — வரைந்து பார்த்துக் கொண்டிருக்கும், உயிர் ஓவியமே—உயிருள்ள ஓவியமே!, மதுகரம் வாய் மடுக்கும் — வண்டுகள் உண்ணும், குழல் காடு வந்தும்—கூந்தலாகிய காட்டைத் தாங்குகின்ற, இள வஞ்சிக் கொடியே—இளமையான வஞ்சிக் கொடியே, வருக—வருக! மலயத்துவசன் பெற்ற—மலயத்துவசப் பாண்டியன், பெற்றெடுத்த பெருவாழ்வே—பெற்றெடுத்த பெரிய வாழ்வாக இருப்பவளே! வருக வருக—வருக வருகவே!

**தெளிவுரை:** தொடுக்கப்பட்ட தெய்வத் தன்மை பொருந்திய பழைய பாடல்கள் என்னும் நான்கு மறைகளாலாகிய, மாலையின் பொருளாக உள்ளவளே! அகப் பொருள் புறப்பொருள் துறைகள் அமையப் பெற்ற இனிய தமிழ்விருந்து ஒழுகும் சுவையே! ஆணவமலமாகிய கிழங்கினைத் தோண்டி எடுக்கின்ற அடியார்களின் மனக்கோயிலில் இருள் நீக்கும் விளக்காக உள்ளவளே! உயர்ந்த சிகரங்களையுடைய இமயமலையில் விளையாடுகின்ற இளமையும் மென்மையும் பொருந்திய பெண் யானையே! அலைகளை உடைய கடலை ஆடையாக உடுத்த இந்த உலகிற்கு அப்பாற்பட்ட ஒப்பற்ற சிவ பெருமான் தன் மனத்தின் கண் தீட்டிப் பார்த்துக் கொண்டிருக்கின்ற உயிர் ஓவியமே! வண்டுகள் உண்ணும் கூந்தலாகிய காட்டினைத் தாங்குகின்ற இளவஞ்சிக் கொடியே! வருக! மலயத்துவசன் பெற்ற பெருவாழ்வே வருக வருகவே!

**இலக்கணம்:** தொடை—தொழிலாகு பெயர்; சுவை, விளக்கு, ஓவியம், பிடி, கொடி—உவமையாகு பெயர்கள்; பெரு வாழ்வு, பழம் பாடல், தீந்தமிழ்—பண்புத் தொகைகள்; அகந்தைக் கிழங்கு—உருவகம்; குழற்காடு, உளக்கோயில—உருவகங்கள், வளர் சிமயம—வினைத்தொகை; இமயப் பொருப்பு—இரு பெயரொட்டுப் பண்புத் தொகை; வருக வருக—அடுக்குத் தொடர்.

## 2. முக்கூடற் பள்ளு

### மழைக்குறிகள்

**முன்னுரை:** மழை வருவதற்கு முன் தோன்றும் குறிகளைக் கண்டு மகிழ்ந்து விடுவதாக அமைந்துள்ளது. முக்கூடற்பள்ளு—முக்கூடலில வாழும் பள்ளர் ஆகிய உழவர்க்குரிய பாடல். முக்கூடல் என்பது திருநெல்வேலி மாவட்டத்தில் தாமிரவருணி நதியின் வடகரையிலுள்ள சிற்றூர். இப்பொழுது இவ்வூரின் பெயர் சீவலப் பேரி.

ஆசிரியர்: என்னுயினுப் புலவர்; காலம்—கி. பி. 17 ஆம் நூற்றுண்டு.

பதவுரை: ஆற்று வெள்ளம் நாளைவரத் தோற்றுதே குறி—ஆற்றில் வெள்ளம வருவதற்கான அடையாளங்கள் காணப்படுகின்றன; மலையாள மின்னல் ஈழமின்னல் சூழ மின்னுது—மேற்குத் திசை மின்னலும் கீழ்த்திசை மின்னலும் சேர்ந்து மின்னுகின்றன; நேற்றும் இன்றும் கொம்பு சுற்றிக் காற்றடிக்குது—நேற்றைக்கும் இன்றைக்கும் சுழல் காற்று வீசுகிறது: கேணி நீர்ப்படுஞ் சொறித் தவளை கூப்பிடுகுது—குளங்களில் வசிக்கும் சொறித் தவளைகள் கத்துகின்றன; சேற்று நண்டு சேற்றைக் கிள்ளி ஏற்றடைக்குது—சேற்றில் வாழும் நண்டு சேற்று மண்ணினுல் தன் வளைகளை அடைக்கின்றன; மழை தேடி ஒரு கோடி வானம்பாடி ஆடுது—மழையை விரும்பிக் கோடிக் கணக்கான வானம் பாடிப் பறவைகள் ஆடுகின்றன; போற்று திருமால் அழகர்க் கேற்ற மாம் பண்ணை—புகழப்படும் அழகர்க்குரிய சிறந்த பண்ணை வயல்களில் வாழும், புள்ளிப் பள்ளர் ஆடிப்பாடித் துள்ளிக் கொள்ளுமே—பள்ளர்களாகிய நாம் ஆடிப்பாடி மகிழ்வோம்.

தெளிவுரை: ஆற்றிலே வெள்ளம் வருவதற்கான அடையாளங்கள் காணப்படுகின்றன. மேற்குத் திசை மின்னலும், கிழக்குத் திசை மின்னலும் சேர்ந்து மின்னுகின்றன. நேற்றும் இன்றும் சுழற் காற்று வீசுகிறது. குளங்களில் வசிக்கும் தவளைகள் கத்துகின்றன. சேற்றில் வாழும் நண்டு சேற்று மண்ணினுல் தன் வளையை அடைத்துக் கொள்ளுகின்றது. மழையை விரும்பி கோடிக் கணக்கான வானம்பாடிப் பறவைகள் ஆடுகின்றன. அழகர்க்குரிய பண்ணை வயல்களில் வேலை செய்யும் பள்ளர்களாகிய நாம் ஆடிப்பாடி மகிழ்வோம்.

## இலக்கணம்

ஆற்று வெள்ளம் — 7 ஆம் வேற்றுமைத் தொகை.

### 2

பதவுரை: மேகம் எல்லாம் ஒன்ருய்க் கூடித்தான் கறுக்குதே—மேகங்கள் யாவும் ஒன்று சேர்ந்து கறுத்துக் காணப்படுகிறது; மின்னல் மின்னிவாசவன் கை வில் எடுக்குதே—மின்னல் மின்னுவதோடு வானவில்லும் தோன்றுகிறது; நாகரிகப் பொதியமலைக் காற்று அடிக்குதே—நாகரிகத்தை முதலில் நல்கிய பொதியமலைத் தென்றல் வீசுகிறது; கொண்டல் நாலுதிக்கும் கோடியிடிதான இடிக்குதே—நீர் உண்ட மேகம் நான்கு திசைகளிலும் உராய்ந்து இடியாக இடிக்கிறது; ஏகபோக மாமரத்தில் குயில்கள் கூவுதே—ஏகபோகமாக உள்ள மாமரக் குயில்கள் கூவுகின்றன; மழைக்கேற்ற மாம்சொறித் தவளை கூப்பிடுகுதே — மழை விரும்பும் சொறித் தவளைகள் கத்துகின்றன; ஆகையினுல் — ஆதலால்,

எங்கள் திருக்கூடல் நகரில்—எங்களுடைய திருக்கூடல் நகரில்; அந்தி நேரமெல்லாம்—மாலைப்பொழுதெல்லாம், மழை வந்து பெய்யுமே—மழை வந்து பெய்யும்.

தெளிவுரை: மேகங்கள் யாவும் ஒன்று சேர்ந்து கறுத்துக் காணப்படுகின்றது; மின்னல் மின்னுவதோடு வானவில்லும் தோன்றுகிறது; பொதியமலைக் காற்று வீசுகிறது; கொண்டல் நான்கு திசைகளிலும் உராய்ந்து இடியாக இடிக்கிறது; மாங்குயில்கள் கூவுகின்றன; மழை விரும்பும் சொறித் தவளைகள் கத்துகின்றன; ஆதலால், திருக்கூடல்மா நகரில் மாலைப்பொழுதெல்லாம் மழை பெய்யும்.

### இலக்கணம்

வாசவன் கை- 6ஆம் வேற்றுமைத் தொகை

## 3. கலிங்கத்துப்பரணி

முன்னுரை: போர்க்களத்தில் ஆயிரம் யானைகளைக்கொன்ற வீரனது வீரத்தைப் பாடும் நூலே பரணி எனப்படும். முதற் குலோத்துங்க சோழன் கலிங்க நாட்டை வென்று அடிமைப்படுத்திய செயலைப் பாராட்டி எழுதப்பட்ட நூலே கலிங்கத்துப்பரணி.

ஆசிரியர் வரலாறு: ஆசிரியர்—சயங்கொண்டார், பிறப்பிடம்—தீபங்குடி (சோழநாடு), காலம் (1070—1118)

### 1. களத்தில் வீழ்ந்த வீரரின் நிலை

பதவுரை: விருந்தினரும் வறியவரும் — விருந்தினரும் ஏழைகளும், நெருங்கி உண்ண—நெருக்கமாக அமர்ந்து உண்ண, மேன்மேலும்—மேலும் மேலும், முகம் மலரும்—முகம் மலர்ந்து உபசரிக்கும், மேலோர் போல — சான்றோர் போல, பருந்து இனமும் கழுகு இனமும—பருந்துக் கூட்டமும, கழுகுக் கூட்டமும், தாமே உண்ண—தாமே புசிக்க, பதுமமுகம் மலர் நீ தாரை—தாமரை மலர் போல முகமலர்ச்சியுடன், மலர்ந்தாரை — மகிழ்ந்து கிடப்பாரை, பார்மின் பார்மின்—பாருங்கள் பாருங்கள்.

தெளிவுரை: விருந்தினரும் ஏழைகளும் நெருக்கமாக அமர்ந்து உண்ண, மேலும் மேலும் முகம் மலர்ந்து உபசரிக்கும், சான்றோர் போல், பருந்துக் கூட்டமும் கழுகுக் கூட்டமும், தம்மைப் புசிக்க, தாமரை மலர் போல மலர்ந்து கிடக்கும் வீரர்களைப் பாருங்கள்.

இலக்கணம்: பார்மின் பார்மின்—அடுக்குத்தொடர், முகம் மலரும்—தொகுத்தல் விகாரம், மலர்ந்தாரை — வினையாலணையும் பெயர்,

## 2. கொடிகளின் நிலை

பதவுரை: சாய்ந்து விழும் கட களிற்றுடனே சாய்ந்து— சாய்ந்து விழும், மதநீர் ஒழுகும் யானைகளுடனேயே சாய்ந்து, தடம் குருதி மிசை—மிக்க இரத்தத்தின் நடுவே, படியும்—விழும், கொடிகள்—கொடிகள், தங்கள் காந்தருடன்—தங்கள் கணவருடன், கனல் அமளி யதன் மேல் வைகும்—நெருப்பின் மேல் விழும்; கற்புடை மாதரை யொத்தல்—கற்புடைய பெண்களுக்கு ஒத்திருத்தலை, காண்மின்—காணுங்கள் காணுங்கள்.

தெளிவுரை: சாய்ந்து விழும், மதநீர் ஒழுகும் யானைகளுடனேயே சேர்ந்து, மிக்க இரத்தத்தின் மேலே விழும் கொடிகள்—தங்கள் கணவருடன் நெருப்பின்மேல் விழும் கற்புமிக்க பெண்களை ஒத்திருத்தலைப் பாருங்கள் பாருங்கள்.

இலக்கணம்: தடங்குருதி—உரிச்சொற்றொடர், காண்மின் காண்மின்—அடுக்குத்தொடர்.

## 4. திருக்குற்றாலக் குறவஞ்சி

முன்னுரை: குறவஞ்சி—குறவர்கள் மலையில் வாழும் வாழ்க்கையை விளக்கும் நாடக நூல். இந்த நூல் இசைத்தமிழ்ப் பாடல்களால் ஆனது. குற்றாலநாதர் பெருமையையும், அவர் மலை வளத்தையும் பற்றிக் கூறுவது.

ஆசிரியர் வரலாறு: திரிகூட ராசப்பக் கவிராயர். பிறப்பிடம்-மேலகரம் (திருக்குற்றாலத்துக்கு அண்மையில் உள்ளது) காலம்-கி. பி, 18ஆம் நூற்றாண்டு.

பதவுரை: வானரங்கள்—குரங்குகள், கனிகொடுத்து—பழங்களைக் கொடுத்து, மந்தியொடு கொஞ்சும்—பெண் குரங்குகளுடன் கொஞ்சும், மந்தி சிந்தும் கனிகளுக்கு—பெண் குரங்குகள் தின்று சிந்தும் கனிகளுக்கு, வான் கவிகள் கெஞ்சும்—ஆண் குரங்குகள் கெஞ்சும், கானவர்கள்—வேடுவர்கள், விழியெறிந்து — பார்த்து வானவரை அழைப்பார்—தேவர்களை அழைப்பார்கள், கவனசித்தர் வந்து வந்து—விரைவாகச் செல்லும் சித்தர்கள் வந்து, காயசித்தி விளைப்பார்—காய சித்திகளைச் செய்வார்கள், தேனருவித் திரையெழும்பி—குற்றாலத்தில் உள்ள தேனருவி அலையுடன் எழும்பி, வானின் வழி ஒழுகும்—வானத்திலிருந்து இறங்கும், செங்கதிரோன் பரிக்காலும்—கதிரவனுடைய குதிரையின் காலும், தேர்க்காலும்-தேர் உருளையும், வழுகும் — வழுகும், கூனல் இளம் பிறை முடித்த—வளைவான மூன்றாம் பிறைச் சந்திரனை சூடிய, வேணியலங்காரர் — சடையுடைய பெருமான், குற்றாலத் திரிகூட மலை எங்கள் மலையே—வீற்றிருக்கும் குற்றாலத் திரிகூட மலை எங்கள் மலையே,

**தெளிவுரை:** குரங்குகள் பழங்களைக் கொடுத்து, பெண்குரங்குகளுடன் கொஞ்சும்; பெண் குரங்குகள் தின்று சிந்தும் கனிகளுக்கு ஆண் குரங்குகள் கெஞ்சும். வேடுவர்கள் பார்த்துத் தேவர்களை அழைப்பர். விரைவாகச் செல்லும் சித்தர்கள் காரிய சித்தி விளைப்பர். குற்றாலத்தில் தேனருவி அலையுடன் எழும்பி, வானத்திலிருந்து இறங்கும். கதிரவனுடைய குதிரையின் காலும் தேரின் உருளையும் வழுகும். வளைவான மூன்றும் பிறைச் சந்திரனைச் சூடிய, சடையையுடைய பெருமான், வீற்றிருக்கும் குற்றாலத் திரிகூட மலை எங்கள் மலையாகும்.

**இலக்கணம்:** சிந்து கனிகளுக்கு—பெயரெச்சம், வந்துவந்து-அடுக்குத்தொடர், செங்கதிர்—பண்புத்தொகை, இளம்பிறை—பண்புத்தொகை, எங்கள் மலை — 6ஆம் வேற்றுமைத்தொகை, கொஞ்சும், கெஞ்சும்—'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினைமுற்றுக்கள்.

## 2 வழிபாட்டுப் பாடல்கள்

### சகலகலாவல்லிமாலை

**முன்னுரை:** இறைவனைப் பல்வேறு சமயத்தினரும் வழிபாடு செய்வதற்குரிய பாடல்கள் இப்பகுதியில் அடங்கும்.

**ஆசிரியர் வரலாறு:** நீதிநெறிவிளக்கப் பகுதியில் காண்க.

**பதவுரை:** பண் கண்ட அளவில்—என் பாடலைக்கேட்டவுடன், மண் கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னரும் — மண்ணுலகில் வெண்கொற்றக்குடைக்கீழ் ஆட்சி செய்யும் உயர்ந்த மன்னர்களையும், பணியச் செய்வாய்—என்னைப் பணியும்படி செய்பவளே; படைப்போன் முதலாம்—நான்முகக்கடவுள் முதலாக, விண் கண்ட தெய்வம் பலகோடி உண்டேனும் — விண்ணுலகக் கடவுளர்கள் பல கோடி இருந்தாலும், விளம்பில் — சொல்லப் போனால், உன்போல்—உன்னைப்போல, சகலகலாவல்லியே — கலைமகளே!, கண் கண்ட தெய்வம் உளதோ?—கண் கண்ட கடவுளர்கள் உலகில் இருக்கிறார்களோ?

**தெளிவுரை:** மண்ணில் வெற்றி பெற்ற பல மன்னர்களையும், என் பாடலைக் கேட்டவுடன் என்னைப் பணியும்படி செய்பவளே! நான்முகன் முதல் விண்ணுலகக் கடவுளர்கள் பல கோடி இருந்தாலும், சகலகலாவல்லியே! உன்னைப் போல கண்கண்ட தெய்வம் உலகில் உள்ளதோ?

**இலக்கணம்**

வெண்குடை—பண்புத்தொகை
செய்வாய்—முன்னிலை வினைமுற்று
படைப்போன்—வினையால் அணையும் பெயர்
உளதோ—உள்ளதோ என்பதன் தொகுத்தல் விகாரம்

## 2. தேவாரம்

முன்னுரை: வாழ்த்துப் பகுதியில் காண்க.

ஆசிரியர் வரலாறு: ஆசிரியர்—சுந்தரமூர்த்தி சுவாமிகள், தேவாரம் பாடிய மூவருள் ஒருவர், காலம்—கி. பி. 7ஆம் நூற்றுண்டு.

பதவுரை: பண்ணிடை—பாடும் பண்களில், தமிழ் ஒப்பாய்—தமிழ் போல்பவனே, பழத்தினில்—பழங்களில், சுவை ஒப்பாய்—சுவை போன்றவனே!, கண்ணிடை—கண்களில், மணி ஒப்பாய்—கண்ணின்மணி போன்றவனே!, கடுஇருள்—கடுமையான இருளில், சுடர் ஒப்பாய்—சுடர் போன்றவனே!, மண் இடை—மண்ணுலகில், அடியார்கள் மனம் அத்து இடர்—உள் அடியார்களின் மனத்தில் துன்பம், வாராமே—வாராதபடி, விண்ணிடை — விண்ணில், குருகாவூர் வெள்ளடை நீ அன்றே—குருகாவூரில் உள்ள கோயில் நீயல்லவா?

தெளிவுரை: (நான்) பாடும் பண்களில் தமிழ் போன்றவனே! பழத்தினில் சுவைக்கு நிகரானவனே! கண்ணில் கண்மணி போன்றவனே! கடுஇருளில் சுடர் போன்றவனே! மண்ணில் அடியார்கள் மனத்தில் துன்பம் வராதபடி காப்பாற்றும், விண்ணிடைக் குருகாவூர்க் கோயிலில் வீற்றிருக்கும் இறைவன் நீயல்லவா?

### இலக்கணம்

ஒப்பாய்—முன்னிலை வினைமுற்று

கடுவிருள்—பண்புத்தொகை

மனத்திடர்—அத்து சாரியை

## 3. வில்லி பாரதம்

முன்னுரை: வில்லிபாரதத்தை எழுதியவர் வில்லிபுத்தூரார். திருமாலைப்புகழ்ந்து பாடிய பாடல்.

ஆசிரியர் வரலாறு: ஆசிரியர்—வில்லிபுத்தூரார், பிறப்பிடம்—திருமுனைப்பாடி நாட்டுச் சனியூர், ஆதரித்தவர்—வக்கபாகையை ஆண்ட வரபதியாட்கொண்டான், சமயம்—வைணவம், காலம்—500 ஆண்டுகளுக்கு முற்பட்டு வாழ்ந்தவர்,

பதவுரை: அருமறை முதல்வனை—அரிய வேதங்கள் போற்றும் முதல்வனை, ஆழிமாயனை—சக்கரப் படையேந்திய மாயனை, கருமுகில் வண்ணனை—கருநிறங்கொண்டு தோன்றும் மேகம் போன்று விளங்குபவனை, கமலக் கண்ணனை—தாமரை போன்ற கண்ணனை, திருமகள் தலைவனை—திருமகளின் கணவனை, தேவ தேவனை—தேவர்களுக்கெல்லாம் தேவனை, இருபத முளரிகள்—இரு திருவடிகளாகிய தாமரைகளை, இறைஞ்சி ஏத்துவாம்—வணங்கித் துதிப்போம்.

**தெளிவுரை:** அரிய வேதங்கள் போற்றும் முதல்வனை, சக்கரப் படையேந்திய மாயனை, கருநிற மேகம் போன்றவனை, தாமரைக் கண்ணனை, திருமகள் கணவனை, தேவர்களுக்குத் தேவனை, இரு திருவடிகளாகிய தாமரைகளை வணங்கித் துதிப்போம்.

**இலக்கணம்:** அருமறை—பண்புத் தொகை; கருமுகில்—பண்புத் தொகை; கமலக் கண்ணன்—உவமத் தொகை; திருமகள் தலைவன்—நான்காம் வேற்றுமைத் தொகை; பதமுளரிகள்—உருவகம்; ஏத்துவாம்—தன்மைப் பன்மை வினைமுற்று; இறைஞ்சி—வினையெச்சம்.

## 4. தமிழ் மொழி

**முன்னுரை:** தமிழ் மொழியை வாழ்த்திப் பாடிய பாடல்.

**ஆசிரியர் வரலாறு:** ஆசிரியர்—சி. சுப்பிரமணிய பாரதியார்; பிறப்பிடம்—எட்டையபுரம்; பெற்றோர்—சின்னச்சாமி ஐயர், இலக்குமியம்மையார்.

**இயற்றிய நூல்கள்**—பாப்பாப் பாட்டு, கண்ணன் பாட்டு, குயிற் பாட்டு, ஞானரதம், சந்திரிகையின் கதை, பாஞ்சாலி சபதம், தேசிய கீதங்கள் முதலியன.

**காலம்**—கி. பி. 1882—1921

**பதவுரை:** வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி வாழிய வாழியவே—நிலையாகத் தமிழ்மொழி வாழ்க. என்றென்றும் தமிழ் மொழி வாழ்க, வானம் அளந்து அனைத்தும் அளந்திடும் வண் மொழி வாழியவே — வானத்தை விட உயர்ந்ததாக விளங்கும், எல்லாவற்றிலும் மேம்பட்ட வளம் நிறைந்த தமிழ்மொழி வாழ்க. ஏழ்கடல் வைப்பினும் தன் மணம் வீசி இசை கொண்டு வாழியவே -ஏழ்கடல்களுக்கு அப்பாலும் தன் மணத்தைப் பரப்பிக் கொண்டு, புகழ் பெற்று வாழ்க. எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி —எங்களுக்குத் தாய்மொழியாக விளங்கும் தமிழ்மொழி, என்று என்றும் வாழியவே—என்றைக்கும் அழியாது வாழ்க.

**தெளிவுரை:** தமிழ் மொழி நிலையாக வாழ்க. தமிழ் மொழி எப்பொழுதும் வாழ்க, வானத்தைவிடப் புகழுடன் மேம்பட்டு வாழ்க. ஏழுகடல்களுக்கப்பாலும் தன் மணத்தைப் பரப்பிக் கொண்டு புகழுடன் வாழ்க. எங்களுடைய தாய் மொழியாகிய தமிழ் என்றென்றும் நிலைபெற்று அழியாது வாழ்க.

**இலக்கணம்:** வாழ்க—வியங்கோள் வினைமுற்று; வண்மொழி—பண்புத் தொகை, (வண்மை+மொழி); தன் மணம்—6 ஆம் வேற்றுமைத் தொகை; எங்கள் தமிழ் மொழி—6 ஆம் வேற்றுமைத் தொகை; தமிழ் மொழி—இரு பெயரொட்டுப் பண்புத் தொகை. என்று என்று—அடுக்குத் தொடர்.

# செய்யுள் விருந்து

## வினு விடை

1 இறைவனின் இயல்புகளாக இராமலிங்க அடிகள் கூறுவன யாவை?

இறைவன் இன்பப் பெருக்கானவன்; அருட்கடலானவன்; அழிவற்ற பெரும்பொருள்; அடியார்களுக்கு அருள் புரியும் கருணைக்கடல்; உணர்வால் ஆகிய பயனாக விளங்குபவன்; கொடியவர்களுக்குக் காணமுடியாத பேரொளி போன்றவன்; கூரியவேல் தாங்கும் மணி. இவையே இராமலிங்க அடிகள் கூறும் இறைவனின் இயல்புகள்.

2 இறைவனுடைய திருவடி நிழல் சிறப்பு நாவுக்கரசரால் எங்ஙனம் விளக்கப்படுகிறது?

குற்றமற்ற வீணையின் நாதம் போலவும், மாலைக் காலத்து வெண்மதி போலவும், வீசுகின்ற தென்றல் காற்று போலவும், இன்பமான இளவேனில் போலவும், மொய்க்கும் வண்டுகள் நிறைந்த குளம் போலவும் இறைவனுடைய திருவடி நிழல் இன்பம் தருவதாகும் என்கிருர்.

3 திருமாலின் தன்மைகளை நம்மாழ்வார் எங்ஙனம் விளக்குகின்ருர்?

இதற்குமேல் உயர்வு இல்லை என்று கூறும்படி உயர்ந்த நலத்தைத் தருபவன்; அறியாமையாகிய மயக்கத்தைப் போக்குபவன், அறிவு நலத்தைத் தருபவன; அமரர்களின் தலைவன் — என்று நம்மாழ்வார் திருமாலின் தன்மைகளை விளக்குகின்ருர்.

4 இறைவன் புரிந்துள்ள நன்மைகளாக வீரமாமுனிவர் கூறுவதென்ன?

அறம் தாய் தந்தை மற்றும் எல்லாச் செல்வங்களும் இறைவனே! எனக்குக்கதி நீயே! உயிரைப் போன்றவனே! இந்த உலகில் பிறந்து எம் துன்பங்களையும் பகையையும் போக்கினாய். எங்களுக்கு விடுதலையளித்தாய். பாவத்தால் பூட்டப்பட்ட வீட்டுலக வாயிலைத் திறந்தாய்—என்று இறைவன் அருள் செய்த நன்மைகளைக் கூறுகின்ருர்.

5 இறைவனின் சிறப்புத் தன்மைகளை உமறுப்புலவர் எங்ஙனம் விளக்குகின்ருர்?

இறைவன் செல்வங்களுள் சிறந்த செல்வம்; பொருள்களில் சிறந்த மெய்ப்பொருள்; ஞானிகள் கண்ட தெளிவுகளுள் சிறந்த

தெளிவு; மணங்களில் சிறந்த மணம்; அணுக்களுள் சிறந்த அணு; பெரிய ஒளிகள் ஒன்று திரண்டாலும் அவற்றுக்கு ஒப்பாகாத பேரொளி; அழகிற் சிறந்த அழகு; பூமியில் பொருந்தியுள்ள பல உயிர்களின் கருக்களுள் பொருந்திய கரு; பெரிய உலகைப் பேரருளால் காத்து வருகின்ற இறை. இவ்வாறு உமறுப்புலவர் கூறுகின்றார்.

6 பிரித்தெழுதுக.

அருட்கடல், இளவேனில், எவனவன், பேரொளி, பல்லுயிர்.
அருள் + கடல், இளமை + வேனில், எவன் + அவன், பெருமை + ஒளி, பல + உயிர்.

7 சேர்த்தெழுதுக.

பெருமை + கருணை, மயர்வு + அற, தொழுது + எழு, பெருமை + தலம், பெருங்கருணை, மயர்வற, தொழுதெழு, பெருந்தலம்.

# II அறவுரை

## (அ) திருக்குறள்

1 உலகில் நீடுவாழ்பவர் யார்?

இறைவனுடைய திருவடிகளைச் சேர்ந்தவர்கள் உலகில் நீடு வாழ்வார்கள்.

2 பெரியோர், சிறியோர் செயல்கள் எப்படிப்பட்டவை?

பெரியோர் சாதாரண மக்களால் செய்ய முடியாத அரிய செயல்களைச் செய்வார்கள்; சிறியோர் எளிய செயல்களையே செய் வார்கள்.

3 அறத்தின் இயல்பு என்ன?

மனத்தில் குற்றம் இல்லாது, சொல்லையும் செயலையும் உடைய வனாக இருத்தலே அறமாகும்.

4 தந்தையின் கடன் யாது?

தந்தை தம் மகனுக்குச் செய்யும் கடன், கற்றவர் கூட்டத்தில் கல்வியில் சிறந்தவனாக அவனை முதன்மையாக இருக்கும்படி செய் வதேயாகும்.

5 நடுவுநிலைமை, நாவடக்கம் பற்றித் திருக்குறள் கூறுவ தென்ன?

நடுவுநிலைமை—தீமை இல்லாமல் நன்மையே கொடுப்பதாக இருந்தாலும், நடுவுநிலை நீங்கி உண்டாகின்ற செல்வத்தை நீக்கி விடல் வேண்டும்.

நாவடக்கம்—எதைக் காக்காவிட்டாலும் நா ஒன்றினையாவது காத்தல் வேண்டும்.

6 பொறையுடைமை பற்றி வள்ளுவர் கூறுவது யாது?

எப்பொழுதும் பிறர் செய்த குற்றத்தைப் பொறுத்தல் வேண் டும், அதனை அக்கணமே மறத்தல் பொறுத்தலை விட நல்லது— என்று கூறுகிறார்.

7 புறங்கூறாமை, பயனில சொல்லாமை பற்றிக் குறள் கூறுவதென்ன?

புறங்கூறாமை — ஒருவனை முன்னிலையில் இகழினும், பின் இகழாதிருப்பது நல்லது.

பயனில சொல்லாமை — பயன் தரும் சொற்களையே சொல்ல வேண்டும், பயன் தராத சொற்களை நீக்க வேண்டும்.

8 ஈகை, புகழ் பற்றிக் கூறும் திருக்குறள் கருத்துக்களைத் தருக.

ஈகை:- பசியால் வருந்துவோரின் பசியைப் போக்குவதே மேலான வலிமை.

புகழ்: தமக்குப் புகழ் உண்டாகுமாறு வாழத் தெரியாதவர், தம்மை நொந்து கொள்ளாமல், தம்மை இகழ்வாரை நோவதில் பயன் இல்லை.

9 வாய்மை, வெகுளாமை பற்றித் திருவள்ளுவர் கூறுவதென்ன?

வாய்மை:- ஒருவன் தன் மனம் அறிந்த ஒன்றை, பிறர் அறியமாட்டார் என்று மறைக்காது, ஒழிதல் வேண்டும். அவ்வாறு மறைத்தானாயின், அதனை அறிந்த அவன் மனமே சாட்சியாக நின்று வருத்தும்.

வெகுளாமை: முகமலர்ச்சியையும், மனமகிழ்ச்சியையும் கெடுக்கும் சினத்தை விட்டொழிக்க வேண்டும்.

10 இன்னா செய்தாரைத் தண்டிக்கும் முறை யாது?

இன்னா செய்தாரைத் தண்டித்தல், அவர்கள் நாணும்படி அவர்களுக்கு நல்ல உதவிகளைச் செய்தல் ஆகும்.

11 கல்வியின் சிறப்பு யாது? கேள்வியின் பெருமை யாது?

ஒரு மனிதனுக்குக் கேடற்ற செல்வம் கல்வி. அது நீங்கிய பிற செல்வங்கள் செல்வங்கள் ஆகா.

ஒருவன் கல்லாதவனாக இருந்தாலும், கற்றறிந்தார் சொல்வதையாவது கேட்க வேண்டும். அவ்வாறு கேட்கப்பட்ட கேள்வியானது, தளர்ச்சிக்காலத்தில், ஊன்றுகோல் போல் உதவும்.

12 பழி நாணுவாரின் செயல் யாது?

பழிநாணுவார், தம் கண் தினையின் அளவாம் குற்றம் வந்தாயினும், அதனை அவ்வளவாகஅன்றிப் பனையின் அளவாகக் கொள்வர்.

13 ஞாலங் கருதினும் கைகூடும். எப்போது?

காலமும் இடமும் அறிந்து ஒரு வினையைச் செய்பவன், நிலவுலக முழுவதையும் தான் ஒருவனே ஆளக் கருதினாலும், கைகூடப் பெறுவான்.

14 செல்வத்தைத் தேய்க்கும் படை எது?

கொடுங்கோன்மையால் துன்பப்பட்டு, பொறுக்கமுடியாது, குடிமக்கள் அழுது வடிக்கும் கண்ணீர் செல்வத்தைத் தேய்க்கும் படையாகும்.

15 இன்பம் பயக்கும் செயலை எங்ஙனம் செய்தல் வேண்டும்?

இன்பம் பயக்கும் செயலை, முதற்கண் துன்பம் மிகுதியாக வந்தாலும், தளராது துணிவுடன் செய்ய வேண்டும்.

16 நட்பின் இலக்கணம் எங்ஙனம் கூறப்படுகிறது?

கண்டவழி அகமொழிய முகை மாத்திரமே மலரும் வகையில் நட்பாவது நட்பாகாது.

17 குடிப்பிறந்தார் இயல்பு யாது?

குடிப்பிறந்தார் ஒழுக்கம், உண்மை, நாணம் இவற்றிலிருந்து தவறுர்.

18 'குன்றின் அனையாரும் குன்றுவர்' எப்பொழுது?

குடிப்பிறப்பால் மலை போல் உயர்ந்தவரும், தாம் தாழ்வு அடைதற்குக் காரணமாகிய செயல்களைக் குன்றிமணியளவாயினும் செய்வாராயின், தாழ்ச்சியை அடைவர்.

19 எவர்க்குத் தெய்வம் மடிதற்று முந்தும்?

தன் குடியை உயரச்செய்யும் எண்ணமுடன் உறுதியான செயல்களைச் செய்பவருக்கு, தெய்வம் ஆடையை இறுகக் கட்டிக் கொண்டு, உதவி செய்யத் தானே முன்வந்து நிற்கும்.

20 பிரித்தெழுதுக.

மாசிலனுதல், ஊற்றாந் துணை, சொல்லிழுக்கு, துணிவாற்றி
மாசு + இலன் + ஆதல், ஊற்று + ஆம் + துணை, சொல் + இழுக்கு, துணிவு + ஆற்றி.

## (ஆ) நாலடியார்

1 பொருள் பெற்றான் அடையும் நன்மையும், பொருளைப் பெறாதான் அடையும் தீமையும் யாவை?

பொருளைப் பெற்றான் அறத்தையும், இன்பத்தையும் அடைவான். பொருளைப் பெறாதான் கொல்லனுடைய உலைக்களத்திலே இட்டுக் காய்ச்சப்படுவதனால் உண்டாகும் துன்பத்தைப் போன்ற துன்பத்தை யடைவான்.

2 பெரியோரைச் சேர்ந்த சிறியோர் இழிவு எப்படி நீங்கும்?

பாலோடு சேர்ந்த நீர் பாலாகித் தோன்றுமே தவிர, தண்ணீரின் நிறம் பெற்றுத் தோன்றாது. அது போல, பெரியாரோடு சேர்தலால், சிறியாரோடு குறைபாடும் தோன்றாது மறையும்.

3. 'மனத்தனையர் மக்களென்பர்' இதை விளக்குக.

கடலையடுத்தும் இனிய சுவை மிக்க ஊற்றுநீர் தோன்றுதல் உண்டு; மலையை யடுத்தும் உவர்ப்பு மிகுந்த உப்புநீர் தோன்றுதல் உண்டு. பகுத்தறிவுடைய மக்கள் என்று சிறப்பிக்கப்படுவோர் தமது சார்போடொத்த இயல்பினர் அல்லர்; தத்தம் இயற்கை யறிவோ டொத்த நிலையினர் ஆவர்.

4. பச்சை ஓலை, வற்றிய ஓலை – இவை எவரெவர்க்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளன?

கற்றறிந்தார் மிகுதியாகப் பேசார். பச்சை ஓலைக்கு இணையாவர்; கற்றறியாத மூடர் ஓயாது பேசுவர். வற்றிய ஓலைக்கு ஒப்பாவார். பச்சை ஓலைக்கு ஒலி இல்லை. வற்றிய ஓலை கலகலக்கும்.

5. பிரித்தெழுதுக:—

பாலோடளாய், இன்னீர், பச்சோலை, நடுவண தெய்த, எஞ்ஞான்றும் பால்+ஒடு+அளாய்; இனிமை+நீர், பசுமை+ஓலை, நடுவணது+எய்த, எ+ஞான்றும்,

## (இ) பழமொழி

1. 'மதியம் போல் பன்மீனும் காய் கலா ஆகும் நிலா' என்னும் உவமையால் விளக்கப்படும் உண்மையாது?

வானத்தில் உள்ள பலவாகிய விண் மீன்களும் ஒன்று சேர்ந்தன வானாலும் பரந்த இருளைப் போக்குகின்ற திங்களைப்போல அவை நிலவைத் தரா; (அது போல) அறிவில்லாதவர்கள் ஆயிரம் பேர்களாக ஒன்றுசேர்ந்த பொழுதும், மிகப்பெரிய இவ்வுலகின்கண் அறிவின் மாட்சியினை உடைய ஒருவனை ஒவ்வார்கள் என்ற உண்மை விளக்கப்படுகிறது.

2. திருவினும் திட்பம் பெறும், எங்ஙனம்? விளக்குக.

செல்வர்களின் மிக்க விலையினை யுடைய மாட்சிமைப்பட்ட நலன்களும், நிறைந்த பொருள்களும், அவர்களிடம் நிலைத்திராமல் மாறியும் வரும். ஆனால், அறிவுச் செல்வம் மாறுதல் இல்லாதது. அதனால், நிலையற்ற பொருட் செல்வத்தைக் காட்டிலும், நிலைத்த அறிவுச் செல்வமே சிறப்பினைப் பெற்று விளங்கும்.

3. 'கல் தேயும்; தேயாது சொல்' இதனால் உணர்த்தப்படும் நீதி யாது?

ஒருவன் பெற்ற பழிச் சொல் எக்காலத்திலும் தேய்வடையாது. ஆதலால் இப்பழிச் செயலைச் செய்யாவிடின் யான் கெடுவேன் என்று

ஒருவன் அறிந்த விடத்தும், அவன் தனக்கு எவ்விதப் பழியும் தராதன வாகிய செயல்களையே செய்தல் வேண்டும் என்ற நீதி உணர்த்தப் படுகிறது.

4. ஒழுக்கம் பற்றிப் பழமொழி கூறுவது யாது?

ஆநிரைகளுக்கு உண்டான அரிய துன்பங்களை நீக்கிப் பாதுகாத்த திருமாலையும், பசுக்களுக்கே ஏற்ற இடையன் என்று புல்லர் உலகம் இழித்துக்கூறும். (ஆதலால்) இது தேவர்களுக்குக் கூறுஞ்சொல், இது மக்களுக்குக் கூறுஞ்சொல் என்று சொற்களை வேறுபடுத்திக் கூறுதலைப் புல்லர் அறியார். ஏனெனில் பிற திமைகளை எடுத்துக் கூறும் நாவிற்குச் சொற்களில் வறுமை இல்லை – என்று ஒழுக்கம் பற்றிப் பழமொழி செப்புகிறது.

5. முயற்சி பற்றி முன்னுரை அரையனார் கூறுவது யாது?

வெந்நீரிலும் குளிக்காதவர் தீயில் பாய்வார்களோ? (பாய மாட்டார்கள்) ஆதலால், ஒருவர் தம்மால் செய்து முடிக்கக் கூடிய செயலை, தாமே செய்து முடிக்காதவராய், வேறொருவரால் செய்து முடித்துக்கொள்வோம் என்று எண்ணியிருத்தல் அறியாமையாகும்.

6. பிரித்தெழுதுக.

மாயிருஞாலம், பன்மீன், பெருவரை, வடுவல்ல, தீங்குரைக்கும், சென்னீர். மா + இரு + ஞாலம், பன்மை + மீன், பெருமை + வரை, வடு + அல்ல, தீங்கு + உரைக்கும், செல் + நீர்.

7. சேர்த்தெழுதுக:

அருமை + விலை, வெம்மை + நீர் அருவிலை, வெந்நீர்.

## (ஈ) நீதிநெறி விளக்கம்

1. கல்வியின் பெருமைகள் யாவை?

ஒழுக்கமும் செல்வமும் இன்பமும் என்னும் மூன்றையும், வீடு பேற்றையும் கொடுக்கும். உலகில் குற்றமற்ற புகழையும் நிலை நிறுத் தும். நேரக் கூடிய வருத்த மொன்று நேர்ந்தபொழுதும், கை கொடுத்து உதவி செய்யும். ஆகவே, கல்வி மக்களுக்கு அவசியம்.

2. பிறரால் பெருஞ் சுட்டு வேண்டுவான் செய்ய வேண் டுவன யாவை?

பிறரால் பெருஞ் சுட்டு வேண்டுவான் எப்பொழுதும் மறவாமல் பிறருடைய பெருமைகளையெல்லாம் மறைக்காமல் வெளியே பரப்பி, அவர்களுடைய தீய வொழுக்கத்தை மட்டும் அங்ஙனம் வெளியே பரப் பாமற்காத்து, எல்லோரிடத்திலும் வணக்கமான மொழிகளையே பேசு தலாகும்.

3. கெடுவது காட்டுங்குறிகள் யாவை?

நண்பர்களைப் பகையாக்கிக் கொள்ளலும், ஒற்றர்களை இழித்துரைத்தலும், பக்கத்திலுள்ள எல்லாரிடத்திலும் ஐயுறவு கொள்ளுதலும் பெரியோருடைய அறிவுரைகளை மீறலும், இயல்பான தன்மைக்கு மாறுதலும், ஆக இந்த ஆறு பொருந்தாத செயல்களும் பின்னால் வரும் கெடுதிகளைக் காட்டுங்குறிகளாகும்.

4. பிரித்தெழுதுக:

புறங்கடை, பெருஞ்சுட்டு, சிற்றுயிர், நெடுமொழி.
புறம் + கடை, பெருமை + சுட்டு, நெடுமை + மொழி, சிறுமை + உயிர்.

## (உ) ஏலாதி

1. 'வீடேபுரிதல் விதி' என்று கூறக் காரணம் என்ன?

இளமை நில்லாது மறையும். நோயும் முதுமையும் வந்தடையும்; செல்வமும் வளமும் வாடும்; ஆகவே இவ்வைந்தானும் வரும் துன்பத்தை நுகர விரும்பாது, வீடு பேற்றுக்கான அறச்செயலை ஆற்றுவதே முறை.

2. பெரியோர்க்குரிய குணங்கள் யாவை?

தான் ஒருயிரைக் கொல்லான்; பிறர் கொன்ற கொலையினை விரும்பான்; பொய் சொல்லான்; பிறனில் விழையான்; கீழிசை சேர்க்கை விரும்பான்; பிறர் மறை கேட்க விரும்பான்; பிறரைத் தீச்சொற் சொல்லுமிடத்து மூங்கை போலிருப்பான். இவ்வேழும் பெரியோருடைய குணங்களாகும்.

3. காலனை நீக்க என்ன செய்ய வேண்டும்?

காலனை நீக்க விரும்புவோன், வீடு பேற்றை அடையும் பொருட்டு ஏற்பட்ட அருட்டன்மை வாய்ந்த அறிவு நூல் ஒழுக்கங்களை அடைதல் வேண்டும்.

4. பண்டிதராய் வாழ்வார் எங்ஙனம் இருப்பார்கள்?

கற்றாரைக் கற்றிலர் என்று மனத்திற் கொள்ளாமலும், உற்றாரை உற்றார் என்று கொள்ளாமலும், பொருளற்றார்க்கு உணவும், மருந்தும், உறைவிடமும், உடுக்கையும் பயின்று கொடுத்தும் வாழ்வாரே பண்டிதராய் வாழ்வார் ஆகும்.

5. நூல் நோக்கி வாழ்வான் எங்ஙனம் இருப்பான்?

பிறர்க்குப் பணிந்து, நெறியே யொழுகி, சான்றோர்களின் அறிவுரைகளை மேற்கொண்டு, நுண்ணிய நூல்களையோதி, அந்நூற்

பொருள்களில் அறிவைச் செலுத்தி, பொருத்தமான பகுதிகளை ஆய்ந்து, அவற்றின்படி வாழ்கின்றவன் நூல் நோக்கி வாழ்வான் ஆகும்.

6. பிரித் தெழுதுக:—

மூப்பியையும், வனப்பஞ்சான், அற்றூர்கட் குண்டி,
மூப்பு + இயையும், வனப்பு + அஞ்சான், அற்றூர்கட்கு + உண்டி.

## (ஊ) சிறுபஞ்சமூலம்

1. எது பெருமை? எது சிறுமை?

தனக்குப் பிறன் ஒருவன் செய்த பிழையைப் பொறுத்துக் கொள்ளுதல் பெருமையாகும். பிறர் செய்த தீமையை எண்ணிக் கொண்டேயிருத்தல் சிறுமையாகும்.

2. நகைப்புக்குரிய செயல்கள் யாவை?

நாணமில்லாதவனுடைய அமைதியும், நல்லொழுக்கமில்லாதவனுடைய நோன்பும், தனக்கே உண்ணும் பொருள் இல்லாதவன் செய்யும் வண்மையும், வலியற்றவன் சொல்லும் வீர மொழியும், செந்தமிழை அறியாதவன் கவிதை இயற்றுதலும் ஆகிய ஐந்தும் நகைப்புக்குரிய செயல்களாகும்.

3. வாழும் முறையைச் சிறு பஞ்சமூலம் எவ்வாறு கூறுகிறது?

தான் பிறந்த குடியை நினைத்து, தன்னை ஒழுக்கத்தினின்று வழுவாத வகை கடைப்பிடித்து, தான் பிறரால் மதிக்கப்படுஞ் செய்கையை உணர்ந்து, தான் பிறராற் சாக வென்று சொல்லும்படியொழுகாது, சான்றோராலே பல் யாண்டும் வாழ்வானாக என்று சொல்லும்படி யொழுகுதலே வாழும் முறையாகும்.

4. பிரித் தெழுதுக :—

தீங்கெண் ணியிருத்தல், நாணிலான், வரப்புயர, செந்தமிழ்,
தீங்கு + எண்ணி + இருத்தல், நாண் + இலான், வரப்பு + உயர, செம்மை + தமிழ்.

# III. கதைப் பகுதி

## (அ) கம்பராமாயணம்

### 1. இராமன் வருகையைக் கண்ட கைகேயி அவன் முன் எவ்வாறு தோன்றினாள்?

இராமன் வருகையைக் கண்ட கைகேயி, யமனைப் போல, ஒப்பற்ற கொடுமையையுடைய கைகேயி இராமன் முன் தோன்றினாள்.

### 2. இராமன் கைகேயியிடம் அன்பும் பணிவும் உடையவன் என்பதை எப்படித் தெரிந்து கொள்ளலாம்?

மாலைப் பொழுதில் வந்து சேர்ந்த தாயைப் பார்த்த பசுவின் கன்றையொத்த இராமன், அவ்வாறு வந்த கைகேயியை, தலைநிலத்திற் படும்படி எண்சாண் கிடையாக வணங்கி, மணமுள்ளதையும் சிந்தூரத்தையும் பவழத்தையும் ஒத்ததான, சிவந்தவாயை, சிவந்த ஒரு கையால் மூடிக்கொண்டு, அழகிய பெரிய மற்றொருகை, ஆடையை மடக்க வணங்கி நின்றான் என்று கம்பர் விளக்குவதன் மூலம் அறியலாம்.

### 3. தசரதனின் கட்டளையாகக் கைகேயி இராமனிடம் கூறியவை யாவை?

"கடல் சூழ்ந்த உலகமனைத்தையும் பரதனேயாண்டு கொண்டிருக்க, நீ போய் தொங்குகின்ற பெரிய சடைகளைத் தரித்துக் கொண்டு, தரித்தற்கரிய தவ வேடத்தை மேற்கொண்டு, புழுதியையுடைய பெரிய காட்டையடைந்து, பரிசுத்தமான நதிகளிலே நீராடி, பதினான்கு ஆண்டுகள் கழித்த பின்பு, திரும்பிவருக" என்று தசரதனின் கட்டளையாகக் கைகேயி கூறினாள்.

### 4. இராமன் கைகேயியிடமிருந்து கோசலையிடம் வந்து சேர்ந்த நிலையைக் கவிஞர் எங்ஙனம் விளக்குகின்றார்?

வீசுகின்ற சாமரம் இல்லாமல், வெண்கொற்றக்குடையுமில்லாமல், நன்மை தீமைகளை உண்டாக்குகின்ற ஊழ்வினை முன்னே போகவும், அறக்கடவுள் வருந்திப்பின்னே வரவும், தன்னந்தனியனாய், அவ்விராமன் கோசலையிடம் வந்தான் என்று விளக்கப்படுகின்றது,

### 5. இராமனைக் கண்ட கோசலை எண்ணியதும், இராமனைப் பார்த்துக் கேட்டதும் யாவை?

"இராமன் மணிமுடியை சூட்டிக்கொண்டானில்லை; தலைமயிர் நீராட்டத்திற்குரிய பரிசுத்தமாகிய தீர்த்தத்தினால் நனையப் பெற்றானில்லை; இதற்குக் காரணம் யாதோ?" என்று எண்ணினாள்.

இராமனைப் பார்த்து, "சக்கரவர்த்தி நினைத்த செயல் என்னுயிற்று? நீண்ட மணிமுடியைச் சூடுதற்கு யாதாயினும் தடையுளதோ?'' என்று கேட்டாள்.

## 6. 'பரதனே முடிசூடுகிருன்' என்று இராமன் கூறியதைக் கேட்ட கோசலை கூறியதென்ன?

"மூத்தவன் இருக்க இளையவன் அரசு புரிதல் முறையன்று என்கின்ற ஒரு குறை மட்டும் உண்டு. அதுவல்லாமல், மற்றைப்படி அந்தப் பரதன் யாவரினும் நிறைந்த குணத்தை யுடையவன்; உன்னைக் காட்டிலும் நல்லவன்; அன்றியும் ஒருவகையாலும் குறைவு இல்லாதவன்'' என்ருள்.

## 7. இராமன் காடு செல்ல வேண்டும் என்ற செய்தி கேட்ட கோசலை எவ்வாறு வருந்தினுள்?

இராமனுடைய சொல் என்கிற தீ, குழை யென்னுங் காதணி அசைகின்ற தன்னுடைய செவிகளில் விழாததற்கு முன்னமேயே, அந்தக் கோசலை இரங்கினுள்; மெலிந்தாள்; மனந்திகைத்தாள்; மயக்கம் மிகுந்தாள்; அழுதாள்; கீழே விழுந்தாள்.

## 8. தன்னையும் உடன் அழைத்துச் செல்லுமாறு கூறிய கோசலைக்கு இராமன் கூறிய ஆறுதல் உரையைக் கூறுக.

"அன்னையே! நீ என்னைப் பிரிந்து துக்கக் கடலில் மூழ்குகின்ற சக்கரவர்த்தியைத் தைரியப்படுத்தாமல், என்னுடன் நெருங்கிய காட்டிற்கு வரத்துணிவது, தகுமோ? அறத்தை ஆராய்ந்து பார்க்கவில்லை போலும்? நீ செய்ய வேண்டிய கடமை கணவனின் பணிவிடையாயிருக்க, நீ மனங் கலங்குதற்குக் காரணம் யாது? தேவராயிருப்பவர்களும், தமது மனத்திட்பத்துக்குத்தக்க பெருந்தவத்தைச் செய்து, அதனுல் வளர்ச்சி பெற்ருர்களல்லவா? இப்பொழுது என்னைக் காட்டில் வாழுமாறு, தந்தையார் விதித்த ஆண்டுகள் எத்தனை இருக்கின்றனவோ, அந்தப் பதினுன்கு ஆண்டுகளும் தேவமானத்தாற் பதினுன்கு நாட்கள் அல்லவா?'' என்ருன்.

## 9. பிரித்தெழுதுக:

செவ்வாய், ஒன்றுனக்கு, மழைக்குன்ற மனையான், இன்னநன்று; செம்மை + வாய், ஒன்று + உனக்கு; மழை + குன்றம் + அனையான், இன்னம் + நன்று.

## 10. சேர்த்தெழுதுக:

பங்கம் + இல் + குணம் + அத்து + எம்பி — பங்கமில் குணத்தெம்பி
அறம் + எனக்கு + இலையோ — அறமெனக்கிலையோ
என்பது + யானும் — என்பதியானும்

## (ஆ) பெரிய புராணம்

### 1. இளையான்குடி மாறனாரின் இயல்பு யாது?

சிவபெருமானிடத்து நிறைந்த பெருமை மிகுந்த அன்பும், அந்த அன்பினால் நிலைபெற்ற மனமும், பாரோர் விரும்பும்படியான மற்றைய சிறப்புக்களையும் பெற்றுத் திகழ்ந்தார்.

### 2. நாயனார் சிவனடியார்களை எங்ஙனம் உபசரித்து வந்தார்?

எலும்புகளை மாலையாக அணிந்த சிவபெருமானுடைய அடியார்களை, யாவராக இருப்பினும், நிலையான பக்திமிக எதிரே சென்று, கைகளைக் குவித்து வணங்கிநின்று, அடியவர் செவிகளில் குளிர்ச்சியும், மென்மையும், இனிமையும், அன்பும் நிறைந்த சொற்களால் மகிழ்ச்சியை ஏற்படுத்துவார். அவ்வடியார்களைத் தன் இல்லத்திற்கு அழைத்துவந்து, அடியவரின் சிறப்பு மிகுந்த திருவடிகளைக் கழுவி, நிறைந்த காதலுடன் ஆதனத்தில் அமரச் செய்து, அர்ச்சித்து நான்கு வகையான உணவுகளை, அறுசுவையுடன் உண்பிக்கச் செய்து, அடியார் உள்ளத்தை மகிழ்ச்சியில் திளைக்கச் செய்வார். இங்ஙனம் நாயனார் சிவனடியார்களை உபசரித்து வந்தார்.

### 3. வறுமை நிலையடைந்தும் நாயனார் அடியார்களை எங்ஙனம் உபசரித்தார்?

வளஞ் சுருங்கி வறுமை நிலையடைந்த போதும், நாயனார் மனஞ் சுருங்குதலின்றி, தம்மிடம் உள்ள பொருள்களை விற்று, தம்மையே விலைக்கு விற்றுக் கொடுக்கத் தக்க கடன்கள் பல வாங்கி, முன்னைப் போல, குற்றமற்ற திருப்பணிகளில் சிறந்து விளங்கினார்.

### 4. நாயனார் சிவனடியாரை எங்ஙனம் வரவேற்றார்?

மழையால் நனைந்து வந்த சிவனடியாரின் ஈர ஆடையைப் போக்கி, ஆதனத்தில் அமர்த்தினார். வயிறு நிறையும்படி இனிமையான உணவு படைக்க ஆசை கொண்டார்.

### 5. நாயனாரிடம் மனைவியார் உணவு சமைக்க எவ்வழியைக் கூறினார்?

நாயனாரிடம் மனைவி, 'நம் துன்பம் நீங்க வேண்டுமானால், நாம் பகலில் வயலில் விதைத்த செந்நெல் முளைகளை வாரியெடுத்துக் கொண்டு வந்தால், கூடியவரை அமுதாக்கக் கூடும்; இதைத் தவிர வேறு வழியேதும் அறியேன்'' என்றாள்.

### 6. நாயனார் புன்செய்ப் பயிரைப் பறித்தது எதற்கு ஒப்பிடப்பட்டுள்ளது?

நாயனார் புன்செய்ப் பயிரைப் பறித்தது, பாசத்தின் இழிந்த வேரைப் பறிப்பவரைப் போல, அவற்றைப் பறித்து வந்தார் என ஒப்பிடப்பட்டுள்ளது.

7. சிவபெருமான் நாயனுருக்குக் காட்சி தந்து கூறியது என்ன?

சிவபெருமான் நாயனுருக்குக் காட்சி கொடுத்து, "அடியவனே! அடியார்களுக்கு வழிபட்டு விருந்தளித்த நீ, உன் மனைவியோடு எம் பெருமை பொருந்திய உலகிற்குவந்து, பெருஞ் செல்வத்திற்குரியவனுன குபேரன் தன் நிதியையேந்தி, உன் ஏவல்களை யெல்லாம் கேட்டு நடக்க, இன்பம் பெற்று வாழ்வாயாக" என்று கூறியருளினுர்.

8. பிரித்தெழுதுக:

ஈரமென் மதுரப்பதம் பரிவெய்த காலினுற்றடவி, வெந்தழல், குறும்பயிர், இருநிதி. ஈரம் + மென்மை + மதுரம் + பதம் + பரிவு + எய்த, காலினுல் + தடவி, வெம்மை + தழல், குறுமை + பயிர், இருமை + நிதி.

## (இ) திருவிளையாடற் புராணம்

1. வந்தி சோமசுந்தரக் கடவுளிடம் எங்ஙனம் முறையிட்டாள்?

வந்தி சிவபெருமானிடம் பின் வருமாறு முறையிட்டாள், "பிட்டு விற்று உண்டுவாழும் பேதையேன் துன்பமடைந்தேனே! வேலை செய்ய முடியாத எனக்கு இப்படியோர் இடையூறு ஏற்பட்டு விட்டதே! பாண்டியன் ஆணையை எப்படி நிறைவேற்றுவேன்? தேவர்களுக்கும் கிடைக்கப்பெருத தேவனே! அடியார்க்கு எளியவனே! வேந்தரின் அமைச்சர் சீற்றத்துடன் என்னை அடையுமுன், எனக்குக் கூலியாளனுக வந்து ஏவல் செய்வாரைக்காணு விட்டால், ஏழையேனுகிய நான் என்ன செய்வேன்?" என்ருள்.

2. சிவபெருமானின் கூலியாள் கோலத்தை விளக்குக.

சிவபெருமான் அழுக்கடைந்த பழமையான துணி ஒன்றை இடுப்பில் உடுத்திக் கொண்டார். சிறப்பான தொண்டர்களுக்கும் கிடைக்கப்பெருத முடியில் சும்மாடு ஒன்றை முடி மாலைபோல் வைத்துக் கொண்டார். கூடையொன்றையும் கவிழ்த்துக் கொண்டார், இரும்புத் தூணை வென்றதற்கொப்பான ஒப்பற்ற திருத் தோள்களில் மண் வெட்டியைப் போட்டுக்கொண்டு புறப்பட்டார்.

3. வந்தியும் கூலியாளும் செய்து கொண்ட உடன்பாடு யாது?

சிவபெருமானுக வந்த கூலியாள் வந்தியிடம், "எனக்கு அன்னை யிடுங் கூலியாதோ?" என்ருர். பெரு மூதாட்டியான வந்தியும், "உனக்குக் கூலியாகப் பிட்டு இடுவேன் என்ருர்.

4. கூடற் பெருமான் செய்த திருவிளையாடல் எது?

கூடற்பெருமான் வந்தி கொடுத்த பிட்டை வாயில் மிதக்க உண்பார்; பெருவலி கொண்டவர் போல மண் வெட்டியால் வெட்டுவார்; வெட்டி யெடுத்த மண்ணைக் கொண்டு போய் அயலார் பங்கான கரையில் கொட்டுவார்; உடைப்பு நின்றதைக் கண்டு ஆரவாரஞ் செய்வார்; தமது வலுவான தோள்களைத் தட்டுவார்; அயலில் நின்றோரைத் தழுவி மகிழ்வார். இதுவே திருவிளையாடல்.

5. பாண்டியன் சிவபெருமான் மேல் அடித்த அடி எவ்வெவ்விடங்களில் பட்டது?

சிவபெருமான் மேல் விழுந்த அடி பாண்டியன் முதுகிற்பட்டது; அவனுடைய மனைவியர் மீது பட்டது; அமைச்சர்கள் மேனியிற்பட்டது; அரசிளங்குமரர் மீது பட்டது; குதிரைகள் மீது பட்டது; யானைகள் மீது பட்டது; எவ்வுயிரின் மீதும் பட்டது. கதிரவன், வெண்மதி, கிரகங்கள், இராகு, கேது, விண்மீன்கள், பஞ்ச பூதங்கள், மேகம், வேதம், தேவர்கள், துறவிகள், தொண்டர்கள், பூதகணங்கள் எல்லாவற்றின் மீதும் பட்டது,

6. பிரித்தெழுதுக :—

கீழ்த்திசை, எட்டுணை, எவனீ, கிழக்கு + திசை, எள் + துணை, எவன் + நீ.

## (ஈ) சீருப்புராணம்

1. முகம்மதுவை நோக்கி யூதர்கள் கூறிய வஞ்சனை மொழிகள் யாவை?

யூதர்கள் தம் பொய் திகழ் நாவால், "மேகங்கள் தவழ்ந்து வரும் குடையினையுடையீர், நீங்கள் எங்களுடைய இந்தக் குடிலுக்கு எழுந்தருளுமாறு, நாங்கள் அடைந்த இத்தன்மையானது, நாங்கள் செய்த தவத்தின் பயனோ? எங்களுடைய முன்னோர் செய்த நிறைந்த புண்ணியத்தின் பேறுதானோ?" என்று கூறினர்.

2. கல்லைத் தள்ளிய யூதன் பட்ட துன்பம் யாது?

கல்லைத் தள்ள முயன்றபோது, அக்கல்லானது தன்னை விட்டு நீங்குதற்கு அரிய, அவனுடைய கைகளைப் பற்றிக் கொண்டு' அக்கைகள் நெரிபடுமாறு இறுக்கியது. அந்த யூதன் கைகளிலே பதிந்த அக்கல்லைக் கழற்ற முற்பட்டான். ஆனால் முடியவில்லை. எனவே அவன் வலிமையுடன், அக்கல்லின் மீது காலை ஊன்றி, அதனை உதைத்தும், இழுத்தும், பற்களினால் உதட்டைக் கடித்தும், நெற்றியின் மீது புருவத்தை யேற்றி, மலைபோன்ற பெரிய தோள்கள் வியர்க்குமாறு, அக்கல்லை வலிமையாக இழுத்தும், அதனைக் கழற்ற முடியாதவனாய், மிகவும் சோர்வுற்று வருந்தினான்.

3. யூதர்கள் நபியிடம் வேண்டியதென்ன?

"வளர்கின்ற நல்லறமாகிய பயிரினை அடியுடன் அறுத்து, தீவினையாகிய பயிரினை விளைக்க நினைத்து விட்டோம். நாங்கள் செய்த இத் தீவினையை, உங்களுடைய சான்றாண்மையால் பொறுத்துக்கொண்டு, எங்களிடத்தே நல்லருளைப் புரிவீராக" என்று வேண்டினர்.

4. அறுந்த கைகள் பொருந்த நபிகள் என்ன கூறினார்?

"கரிய நிறம் பொருந்திய கல்லிலே பொதிந்துள்ள அந்தக் கைகளில் உன்னுடைய இந்தக் கைகளைப் பதியுமாறு வைப்பாயாக" என்றார். அக்கொடிய யூதன், சொரிகின்ற குருதியுடன் காணப்படுகின்ற துடுப்பினைப் போன்ற தன்னுடைய கைகளை, முயற்சியுடன் நீட்டி, அக் கல்லிலே பதிந்துள்ள கைகளைத் தொட, (அவ்வளவில்) அக்கைகளுடன் இக்கைகள் ஒட்டின.

5. கைகள் பொருத்தப்பட்ட யூதன் பெருமானிடம் வேண்டியதென்ன?

"பெருமானே! என் துன்பத்தினைப் போக்கினாய். அறுபட்ட இருகைகளையும் ஒன்றாக்கினாய். இப்பொழுது என்னை ஆட்கொள்வீராக. அது உங்களுக்குக் கடன்" என்று கூறிப்பணிந்தான்.

6. பிரித்தெழுதுக:—

பொருட்டொகை, நல்லருள், காலையூன்றி பொருள் + தொகை, நன்மை + அருள், காலை + ஊன்றி.

## (2) தேம்பாவணி

1. ஏசுநாதர் பிறந்த சிறப்பு எங்ஙனம் விளக்கப் படுகிறது? (கதைப் பகுதியைக் கூறுக).

ஏசுநாதர் மரியம்மையின் குழந்தையாக மார்கழித் திங்கள் 25ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமையில் அவதரித்தார். மிக்கயேல், காபிரியேல் என்னும் வானவர் இருவர் குழந்தையை யெடுத்து மரியம்மைக்குக் காட்டினர். குழந்தை ஏசுவை மரியன்னை முத்தமிட்டாள். குழந்தை அயர்ந்து தூங்கியது. மரியம்மையின் கைகளில் தூங்கும் குழந்தையைக் கண்டு மகிழ்ச்சி கொண்ட சூசை பலவாறு பாராட்டினார்.

2. திருமகனான இயேசுவின் தோற்றத்தை ஆசிரியர் எங்ஙனம் விளக்குகின்றார்?

மூன்று உலகங்களிலும் தனக்கு ஒப்புவமை இல்லாதவளாய், முக்காலத்திலும் அழிவில்லாது, விளங்கிய மரியன்னை (பிதா, சுதன், தூய ஆவி) என்னும் ஒரே தெய்வத்தின் மூன்று ஆட்களுள், நடுவாக அமைந்துள்ள சுதனை, ஞாயிறு, திங்கள், என்னும் மூன்று சுடர்களினும் ஒளி விளங்குமாறு, மகவாகப்

பெற்ருள். மார்கழித் திங்கள் இருபத்தைந்தாம் நாளில், இரவு பதினைந்து நாளிகையில், ஆதிவாரம் என்று சொல்லக்கூடிய ஞாயிற்றுக் கிழமையில், ஆதியாகிய கர்த்தாவை, அன்பினையுடைய மரியம்மை தன் உள்ளத்தில் இன்பம் மிகுமாறு இவ்வுலகத்திற்குத் தந்தாள்.

3. ஏசுநாதர் குழந்தையாகப் பாலுண்டமை எங்ஙனம் புனைந்து கூறப்பட்டுள்ளது?

தெளிவு உண்டாக்கப்பெற்ற அலைகளை உடைய கடலால் சூழப் பெற்ற இவ்வுலகமெங்கும் பொருள்களைத் தொகுதியாகச் சுரந்து, பலவாகிய உயிர்களெல்லாம், நிறைய உண்ணும்படி, அவற்றிற்கு உணவுகளைப் படைத்தருளிய நாதன், உயிர்களுக்கு மயக்கத்தினுல் வந்த, பாவங்களைப் போக்கும் பொருட்டு, இவ்வுலகில் மனிதனுகத் தோன்றி, அன்பினுல் சுரந்த தாய்ப்பாலை மரியன்னை தரக் குடித்தான்.

4. மரியம்மையின் கையிலிருந்த குழந்தையின் அழகினை வீரமாமுனிவர் எவ்வாறு எடுத்துக் கூறியுள்ளார்?

பிறைத் திங்களைப் போன்ற நெற்றியும், விண் மீன்கள் போன்ற கண்களும், தாமரை மலர் போன்ற முகமும், தனது இயல்பினுல் மணம் பொருந்திய குளிர்ந்தமலர் போன்ற உடலும் கொண்டு விளங்கினுன் என்று வீரமாமுனிவர் கூறுகின்ருர்.

5. சூசை இயேசுவை எங்ஙனம் பராவினுன்?

கருணையின் இருப்பிடமானவனே! இன்பக் கடல் போன்றவனே! புண்ணுகத் துன்பப்பட்டு வருந்துகின்ற எல்லோருடைய மனத்திற்கும் ஓர் ஒப்புவமையில்லாத இனிய மருந்து போன்றவனே! அருள் நிறைந்த அன்பாக உள்ளவனே! இவ்வுலகத்தைச் சூழ்ந்து அலைகின்ற கடலைப் போன்ற மயக்கத்தினையுடைய என் மனத்திற்கு உயிராகிய நிலைக்களனே! எண்ணிக்கையற்ற செல்வங்களுக்கரசே! நீ அன்னையின் கைகளின் மேல் கண்களைமூடி உறங்க உன்னைக் கண்டேன் அல்லவோ? நீ என் மீது இரங்கிக் காட்டுகின்ற கருணை இதுவோ!" என்று பராவினுன்.

6. பிரித்தெழுதுக:

ஐயைந்து, மாங்குயில், சொக்களாவுரு. ஐந்து + ஐந்து, மா + குயில், சொக்கு + அளாவு + உரு.

# IV. பல்சுவை

## 1. கதிரவனின் உதயத்தை தோலாமொழித்தேவர் எங்ஙனம் விளக்குகின்றார்?

குளிர்ந்த தென்றல் அசைந்து அசைந்து இன்பமாகத் தவழ்ந்து வர, ஒளிமிக்க கதிரவனின் சிவந்த நிறம் கீழ்த்திசையில் விரைவாகப் பரவிவர, அழகுமிக்க மென்சிறகுகள் கொண்ட பறவைகள் ஒன்றுகூடி, பலவகை ஒலிகளில் பாட்டிசைக்க, இலைதளிர் நிறைந்த பூங்காவில், குளிர்ச்சியான மலர்கள் விரிந்து மணம் வீசும்.

## 2. நெற்பயிரின் வளர்ச்சியை எவ்வுவமையால் திருத்தக்கத் தேவர் விளக்குகின்றார்?

நெற்பயிர்கள் பச்சைப் பாம்பைப் போலக் கருக்கொண்டிருந்து, பின்பு கதிர் ஈன்று, கீழ்மக்களைப் போல வணக்கமின்றித்தலை நிமிர்ந்து நின்று, கதிர் முற்றியபின், கற்றார் தலைவணங்குவது போல இறைஞ்சிச் சாய்ந்து விளைந்தன.

## 3. சோலையின் அழகு எங்ஙனம் புனைந்து கூறப்பட்டுள்ளது?

அழகிய கரும்பின் இனிமையான சாறு ஆலையையடைந்து காய்ச்சப்படும்பொழுது எழுந்த புகையை மேகம் என்று நினைத்து, மாஞ்சோலைக் குயில்கள், வாய்விடாதுபாட. இசை பாடும் வண்டினமும், சுரும்பும், ஞிமிறும், இணைந்துபாட, மயில்தன் அழகிய தோகை விரித்து, சோலைகளில் ஆடும் – இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

## 4. காளமேகப் புலவர் பாம்புக்கும் எலுமிச்சம்பழத்துக்கும் பொருந்தும் இயல்புகளாகக் கூறுவன யாவை?

பாம்பு: உயிரைக் கொல்லக்கூடிய நஞ்சை உடையது; பித்தனான சிவன் மீது தங்கியிருக்கும்; காற்றை உண்ணும்; காற்றினாலே உடல் பருக்கும்; தலை தூக்கி ஆடும்; சினமுடையது.

எலுமிச்சம்பழம்: பெரியோர் கைகளில் கொடுக்கப்படும்; அதன் சாறு சிவ பெருமானுக்கு அபிடேகம் செய்யப்படும்; ஊறுகாய் போட துண்டு துண்டாக அரியப்படும்; உப்பு அதன் மேல் தூவப்படும்; அதன் சாறு பட்டால் எரிச்சல் உண்டாகும்; ஆகவே இரண்டும் ஒன்று.

## 5. பானைக்கும் யானைக்கும் அமைந்த சிலேடைப் பொருளைத் தருக.

பானை: அழகிய குயவன் கையால் உருவத்தைப் பெற்றுச் சுழலும்; அரிசி கொள்ளும்; பொங்கும் பொழுது வெண் கோலங்கள் போடப்பட்டு அணி செய்யப்பெறும்; துணி முதலியவற்றோடு சீராக வந்திறங்கும். கருநிறமுடையது.

யானை : அங்குசத்தைக் கொண்ட வலிய கைக்கு அச்சங்கொண்டு அடங்கி நடக்கும்; அரிசி ஏற்கும்; பெருந்தலை; வெள்ளைத் தந்தங்கள் பெற்றுத் திகழும்; வேறு படைகளுடன் போர்க்களத்தை யடையும்; கருநிறம் பெற்றுத் திகழும்.

6. குமரகுருபரர் மீனாட்சியம்மையின் சிறப்புத்தன்மை களாகக் கூறுவதென்ன?

தொடுக்கப்பட்ட தெய்வத்தன்மை பொருந்திய பழைய பாடல்கள் என்னும் நான்கு மறைகளாலாகிய மாலையின் பொருளாக உள்ளவள். அகப்பொருள் புறப்பொருள் துறைகள் அமையப்பெற்ற இனிய தமிழி விருந்து ஒழுகும் சுவை போன்றவள். ஆணவ மலமாகிய கிழங்கினைத் தோண்டி எடுக்கின்ற அடியார்களின் மனக்கோயிலில் இருள் நீக்கும் விளக்காக உள்ளவள். உயர்ந்த சிகரங்களையுடைய இமயமலையில் விளையாடுகின்ற இளமையும் மென்மையும் பொருந்திய பெண் யானை போன்றவள். அலைகளை உடைய கடலை ஆடையாக உடுத்த இந்த உலகிற்கு அப்பாற்பட்ட சிவபெருமான் தன் மனத்தின் கண் தட்டிப்பார்த்துக் கொண்டிருக்கின்ற உயிர் ஓவியம் போன்றவள். வண்டுகள் உண்ணும் கூந்தலாகிய காட்டினைத் தாங்குகின்ற இளவஞ்சிக் கொடி போன்றவள். மலயத் துவசன் பெற்ற பெருவாழ்வாக உள்ளவள் — இவையே சிறப்புத் தன்மைகள் ஆகும்.

7. மழைக் குறிகளாகக் கூறப்படுவன யாவை?

மேற்குத் திசை மின்னலும், கிழக்குத் திசை மின்னலும் சேர்ந்து மின்னுகின்றன. நேற்றும் இன்றும் சுழற்காற்று வீசுகிறது. குளங்களில் வசிக்கும் தவளைகள் கத்துகின்றன. சேற்றில் வாழும் நண்டு சேற்று மண்ணினால் தன் வளையை அடைத்துக் கொள்ளுகின்றது. மழையை விரும்பி கோடிக்கணக்கான வானம்பாடிப் பறவைகள் ஆடுகின்றன. மேகங்கள் யாவும் ஒன்று சேர்ந்து கறுத்துக் காணப்படுகின்றன. வானவில் தோன்றுகிறது. பொதியமலைக் காற்று வீசுகிறது. கொண்டல் நான்கு திசைகளிலும் உராய்ந்து இடியாக இடிக்கின்றது. மாங்குயில்கள் கூவுகின்றன; மழை விரும்பும் சொறித் தவளைகள் கத்துகின்றன; இவையே மழைக்குறிகளாகும்.

8. கலிங்கத்துப்பரணியின் ஆசிரியர் கொடிகளின் நிலையை எங்ஙனம் புனைந்துரைக்கின்றார்?

சாய்ந்து விழும் மதநீர் ஒழுகும் யானைகளுடனேயே சேர்ந்து, மிகுதியான இரத்தத்தின் மேலே விழும் கொடிகள் தங்கள் கணவருடன் நெருப்பின் மேல் விழும் கற்புமிக்க பெண்களை ஒத்திருந்ததாகப் புனைந்துரைக்கின்றார்.

9. திருக்குற்றாலத்தின் அழகைக் குறவஞ்சி எங்ஙனம் செப்புகிறது?

குரங்குகள் பெண் குரங்குகளுக்குப் பழங்களைக் கொடுத்துக் கொஞ்சும். பெண் குரங்குகள் தின்று சிந்தும் கனிகளுக்கு ஆண்

குரங்குகள் கெஞ்சும். வேடுவர்கள் தேவர்களை அழைப்பர். விரைவாகச் செல்லும் சித்தர்கள் காரிய சித்தி விளைப்பர். தேனருவி அலையுடன் எழும்பி, வானத்திலிருந்து இறங்கும்; கதிரவனுடைய குதிரையின் காலும், தேரின் சக்கரமும் வழுகும் என்று செப்புகின்றது.

## 10. குமரகுருபரர் கலைமகளை எங்ஙனம் வழிபடுகின்றார்?

மண்ணில் வெற்றிபெற்ற பல மன்னர்களையும், என் பாடலைக் கேட்டவுடன் என்னைப் பணியும்படி செய்பவனே! நான்முகன் முதல் விண்ணுலகக் கடவுளர்கள் பலகோடி இருந்தாலும், சகலகலா வல்லியே! உன்னைப் போலக் கண்கண்ட தெய்வம் உலகில் உள்ளதோ? என்று வழிபடுகின்றார்.

## 11. குருகாவூர்க் கோயில் இறைவனைத் தேவாரம் எங்ஙனம் போற்றுகின்றது?

(நான்) பாடும் பண்களில் தமிழ் போன்றவனே! பழச்சுவைக்கு நிகரானவனே! கண்ணில் கண்மணி போன்றவனே! கடு இருளில் சுடர் போன்றவனே! மண்ணில் அடியார்கள் மனத்தில் துன்பம் வராதபடி காப்பாற்றும், குருகாவூர்க் கோயில் இறைவன் என்று தேவாரம் போற்றுகின்றது,

## 12. பிரித்தெழுதுக:

செவ்வண்ணம், எங்கோன், தேங்கமழ், பெரியவிடம் (இருவகை) கூனவிளம்பிறை, இருபதமுளரி, பவளக்கூர்வாய், வெண்கோடு; தீந்தமிழ், வண்மொழி.

செம்மை + வண்ணம், எம் + கோன், தேம் + கமழ், பெரிய + இடம் (பெரிய + விடம்) கூனல் + இளம் + பிறை, இரு + பதம் + முளரி; பவளம் + கூர் + வாய், வெண்மை + கோடு, தீம் + தமிழ், வண்மை + மொழி.

# உரைநடைப் பகுதி

## வினா — விடை

## 1. பொதுமறை தந்த புலவர்

### 1. தமிழின் சிறப்புத் தன்மைகள் யாவை?

தமிழ் தேனினும் இனிய மொழி. இனிமையும், தொன்மையும் உடைய மொழி. உலகில் தலை சிறந்த மொழிகளில் ஒன்று. 'யாமறிந்த மொழிகளில் தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்' என்று பாரதி பாராட்டியுள்ளார். மக்கள் வாழ்க்கைக்கு வேண்டிய அறம், பொருள், இன்பம், வீடு இவற்றை விளக்கும் அறநூல்களும், தலைசிறந்த அறநூலான திருக்குறளும் தமிழில் உண்டு.

### 2. திருவள்ளுவர் பிறப்பிடம், பெற்றோர், மனைவி யார் யார் எனக் கூறப்படுகிறது?

பிறப்பிடம் மைலாப்பூர், பெற்றோர் பகவன்–ஆதி, மனைவி வாசுகி என்று கூறப்படுகிறது.

### 3. திருவள்ளுவர் இளமைப் பருவத்திலே பெற்றிருந்த அருங்குணங்கள் யாவை?

திருவள்ளுவர் இளம் பருவத்திலேயே கற்பனவற்றைக் கசடறக் கற்றார். கற்ற வழி நின்று கடவுளைப் போற்றினார். அன்பு, இன்சொல், அடக்கம், முதலிய அருங்குணங்களின் உறைவிடமாக விளங்கினார். 'மக்கள் எல்லாரும் பிறப்பினால் சமமானவர்; அவரவர் செய்யும் தொழிலால் சிறப்பு வேறுபடும், என்று கருதினார். 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்பதே அவர் தம் கொள்கை.

### 4. வள்ளுவர் என்ற பெயர் ஏற்படக் கூறப்படும் காரணங்கள் யாவை?

இயற்பெயர் எனக் கூறப்படுகிறது. தமிழ் வளப்பம் உடையவராகையால் இவரைவள்ளுவர் என்பர் சிலர். வள்ளுவன் ஒருவனால் வளர்க்கப்பட்டமையால், இப்பெயர் வந்தது என்று கூறுவாரும் உண்டு. அரசரிடம் நெருங்கி ஆலோசனை கூறும் அதிகாரிக்கு வள்ளுவர் என்னும் பெயர் உண்டு என்றும், இப்பதவியை வகித்தபடியால் இப்பெயர் பெற்றார் என்றும் கூறுவர்.

### 5. திருக்குறளை உலகப் பொது நூல் என்று எப்படிக் கூறலாம்?

திருக்குறள் சாதிசமய வேறுபாடு அற்ற ஒரு பொதுநூல். உலகில் வாழும் எல்லா மக்களுக்கும், எல்லா நாட்டிற்கும், எல்லா காலத்துக்

கும் பொதுவான நீதிகளை எடுத்துக் கூறுவதால், உலகப் பொது நூல் என்று கூறலாம்.

6. திருக்குறளுக்கு அப்பெயர் ஏற்படக் காரணம் என்ன?

திரு என்பது அடைமொழி. இந்நூல் இரண்டடிகளைக்கொண்ட குறள் வெண்பாக்களால் ஆகியது. அதனால் இப்பெயர் பெற்றது.

7. திருக்குறளின் சிறப்புக்கள் யாவை?

திருக்குறளைக் கேட்டாலும் செவி இனிக்கும்; நினைத்தாலும் நெஞ்சு இனிக்கும்; சொன்னாலும் வாய் இனிக்கும்; இல்லறத்தார், துறவறத்தார், அரசர், அமைச்சர், முதலிய எல்லாருடைய நல்வாழ்க்கைக்கும் ஏற்ற நூல் திருக்குறள்.

8. பிரித்தெழுதுக:

கசடற, பல்லுக்குறுதி, நாலடியார்.
கசடு+அற, பல்லுக்கு+உறுதி, நான்கு+அடி+ஆர்

9. சேர்த்தெழுதுக:

யாம்+அறிந்த, குறள்+பா, மூன்று+பால்
யாமறிந்த, குறட்பா, முப்பால்.

10. சொற்றொடர்களில் அமைக்க:

தொன்மை, தலைசிறந்த.
நம் மொழியான தமிழ் தொன்மையான மொழி.
நம் நாட்டுத் தலைவர்களில் தலைசிறந்தவர் மகாத்மா காந்தி.

## 2. தூது நடந்த மூதாட்டி

1. ஔவையாரின் அருங்குணங்கள் யாவை?

ஔவையார் சிறந்த தமிழ்ப் புலவர். அவர் பாடிய பாடல்கள் கருத்துக்கள் நிரம்பியவை. மக்கள் அறநெறியில் நடப்பதற்கு வேண்டிய நீதிகள் அவர் பாட்டுக்களில் உள்ளன. ஔவையார் சிறந்த அரசியல் அறிஞர். அக்காலத் தமிழரசர்கள் தவறான வழியில் நடந்தால், அவர்களை நன்னெறியில் செலுத்தி வந்தார். ஔவையாரால் பல போர்கள் தவிர்க்கப்பட்டன.

2. அதியமான் ஔவையாரை எவ்வாறு சிறப்பித்தான்?

அதியமான் ஔவையாரை அகமும் முகமும் மலர்ந்து வரவேற்றான். பரிசில்கள் பல தந்து பாராட்டினான். ஔவையார் பல நாட்கள் அவன் அரண்மனையிலே தங்கி இருந்து செந்தமிழ் விருந்து அளித்து அவனைப் பெரிதும் மகிழச் செய்தார்.

3. தொண்டைமான் யார்? அதியமான் மீது படையெடுக்கக் காரணமென்ன?

காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட மன்னன் தொண்டைமான். அதியமானின் சீரும் சிறப்பும் அறிந்து, அவன் மீது அழுக்காறு கொண்டான். அதியமான் மீது போர் தொடுத்து, அவனை வீழ்த்த வேண்டும் என்று கருதினான்.

4. தொண்டைமானின் படைக்கலன்களைக் கண்டு ஔவையார் கூறியவை யாவை?

"மன்னர் பெரும! உன்னுடைய படைக்கலன்கள் யாவும் புத்தம் புதியவை; இவை நெய்பூசப் பெற்றுப் பள பள வென்று மின்னுகின்றன. மயிற் பீலிகளும் மாலைகளும் அணியப்பட்டு, அரண்மனையில் மிகவும் அழகாக வைக்கப்பட்டுள்ளன. என் அரசனான அதியமானுடைய போர்க்கருவிகளோ, பகைவர்களைக் குத்தியதால், ஓரமும் நுனியும் தேய்ந்து பழுது பார்ப்பதற்காகக் கொல்லனுடைய உலைக்கூடத்திற் கிடக்கின்றன" என்று கூறினார்.

5. ஔவையார் பேசிய பேச்சின் கருத்து யாது?

"எங்கள் அரசன் எப்போதும் போர் செய்வதால் அவனுடைய போர்க் கருவிகள் அடிக்கடி பழுது பார்க்கப்படுகின்றன. நீயோ போர்க் களத்துக்கே செல்லாமல் இருப்பதால், உன் போர்க்கருவிகள் புதியனவாக இருக்கின்றன" என்ற கருத்தை வைத்தே பேசினார்.

6. ஔவையார் சென்ற தூதின் பயன் யாது?

தொண்டைமான் அதியமானின் தோள் வலிமையையும், வாள் வலிமையையும் நன்கு உணர்ந்தான். தகடூர் மீது படையெடுக்க வேண்டுமென்ற எண்ணத்தைக் கைவிட்டான். இதுவே பயன்.

7. ஔவையாரின் செய்யுட்களை எந்நூல்களில் காணலாம்?

புறநானூறு, நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு என்னும் இலக்கியங்களில் காணலாம்.

8. பிரித்தெழுதுக:

சிற்றரசன், எடுத்துரைத்தான், அருந்தமிழ், மயிர்பீலி, போர்க்களம்.

சிறுமை + அரசன், எடுத்து + உரைத்தான், அருமை + தமிழ், மயில் + பீலி, போர் + களம்.

9. எதிர்ச்சொற்கள் தருக:

அறியாதவர் × அறிந்தவர், விலக்கி × விலக்காது, பெருமை × சிறுமை.

## (3) தேன் தேன் தேன்

### 1. தேன் எங்ஙனம் சிறப்புப் பெற்றது?

தேன் என்னும் போதே நாவில் நீர் சுரக்கின்றது. தேனைச் சிறியோர் முதல் பெரியோர் ஈறாக யாவரும் விரும்புகின்றனர். குழந்தைகளைத் தேனே என்றழைப்பதுண்டு நல்ல செய்யுட்களைத் தேன் போல இருப்பதாக அறிஞர் கூறுவர். இறைவனைத் தேனே என்பர். இவை தான் தேனின் சிறப்பு.

### 2. தேனின் பயன்கள் யாவை?

தேன் சிறந்த மருந்து. உடல் வலிமையையும், இரத்த வளர்ச்சியையும் தரவல்லது. இருமல் பித்தம் போன்ற நோய்களைத் தீர்ப்பதற்கு இது சிறந்த மருந்து. மாத்திரைகளைச் சாப்பிட தேன் உதவுகிறது.

### 3. எத்தனை வகைத் தேனீக்கள் உள? எவை?

தேனீக்களில் பலவகை உண்டு. மலைத் தேனீ, அடுக்குத் தேனீ, கொம்புத் தேனீ, கொசுத் தேனீ எனப் பலவகைகள் உண்டு.

### 4. எளிதில் பழகக் கூடிய தேனீ எது? அது பற்றி எழுதுக.

எளிதில் பழகக்கூடிய தேனீ அடுக்குத் தேனீ. பெரும்பாலும் மரப் பொந்துகளில் கூடு கட்டி வாழும். சில சமயங்களில் கற்பாறைகளின் இடையிலும் சுவர்களின் இடுக்குகளிலும் அடுக்கடுக்காகக் காணப்படும். தனியாக வசிப்பதில்லை. கூட்டங் கூட்டமாக வாழும் தன்மை பெற்றவை. இவை பழக்கமானவர்களிடம் அடக்கமாகவே இருக்கும்.

### 5. தேன்கூட்டில் உள்ள மூவகை ஈக்கள் யாவை?

தேன் கூட்டில் மூவகை ஈக்கள் உண்டு. ஒன்று இராணி ஈ; மற்றொன்று உழைப்பாளி ஈ, பிறிதொன்று ஆண் ஈ.

### 6. உழைப்பாளி ஈக்கள் செய்யும் பணிகள் எவை?

உழைப்பாளி ஈக்கள் தம் உடலினின்று சுரக்கும் மெழுகைக் கொண்டே தம் கூட்டை அமைக்கின்றன கூடு கட்டுதல், முட்டைகளை அடைகாத்தல், குழவித் தேனீக்களுக்கு உணவு ஊட்டிக்காத்தல், தேன் சேர்த்தல் முதலிய பணிகளைச் செய்கின்றன.

### 7. தேனீ வளர்க்கும் பெட்டியின் அமைப்பைக் கூறு.

இப்பெட்டியில் நான்கு பாகங்கள் உண்டு அவை அடிப்பலகை, பெரிய அடுக்கு, சிறிய அடுக்கு, மேல்மூடி என்பன. பெரிய அடுக்குக்

கும் அடிப்பலகைக்கும் இடையே நீண்ட துவாரமொன்று இருக்கும். அத்துவாரம் ஈக்கள் வெளியே சென்றுவர இருக்கிறது. பெரிய அடுக்கிலும், சிறிய அடுக்கிலும் ஒன்றன் மேல் ஒன்ருகச் சதுரமான கட்டங்கள் இருக்கின்றன. கீழே உள்ள பெரிய அடுக்கில் ஈக்கள் வாழ்கின்றன. மேலே உள்ள சிறிய அடுக்கில் தேனைச் சேர்க்கின்றன.

8. தேனீக்களிடம் என்ன பண்புகள் காணப்படுகின்றன?

சிறிய உயிர்களாக இருப்பினும் அரிய செயல்கள் ஆற்றுபவை. தலைவருக்கு அடங்கி நடக்கும் பண்பு வாய்ந்தவை. இவை சுறுசுறுப்பானவை.

9. பிரித்தெழுதுக:

சிற்றுயிர், நாற்பதாயிரம், உடலுழைப்பு, சிறுவீடு, தேனடை.

சிறுமை + உயிர், நாற்பது + ஆயிரம், உடல் + உழைப்பு, சிறுமை + வீடு, தேன் + அடை.

10. வாக்கியங்களில் அமைக்க.

நாடோறும்: நாடோறும் வைகறைப் பொழுதில் எழுந்திருப்பது நற்பழக்கமாகும்.

ஓயா உழைப்பு: ஓயா உழைப்பினுல், உழைப்பாளி ஈக்கள் ஆறு திங்களில் இறந்து போகின்றன.

## 4. பயண முடங்கல்

1. மாமல்லபுரத்தை யடைந்ததும் அதியமான் எண்ணியதென்ன?

வாதாபியை அழித்தொழித்த மாமல்லனின் வீரத் திருவடி மிதித்த மண்ணை, களம்பல கண்டு, உளம்பல கவர்ந்த மகேந்திரவர்மனின் திருவடி மிதித்த மண்ணை என் காலும் மிதிக்கின்றது. கலைவல்லாராகிய மகேந்திரனும் நரசிம்மனும் ஆண்டு களித்த மல்லையை என் கண்களும் காண்கின்றன என்று நினைத்தான்.

2. பல்லவ மன்னர்களில் சிறந்தோர் யாவர்? அவர் தம் சிறப்புக்கள் எவை?

பல்லவ மன்னர்களில் சிறந்தோர் மகேந்திரவர்னும் நரசிம்மவர்மனும் ஆவர். அவர்கள் இருவரும் வீரம் விளைத்ததிலும், வியன்மிகு கலை வளர்த்ததிலும் சிறந்தவர்கள். தமிழகத்தில் முதன் முதலில் கல்லைக் கொண்டு கோயில்களைக் கட்டியவன் மகேந்திரவர்மனே யாவன்.

3. நரசிம்மவர்மனுக்கு மாமல்லன் என்று பெயர்வரக் காரணம் யாது?

நரசிம்மன் வாதாபியில் வெல்லற்கரிய இரண்டாம் புலிகேசியை வென்றான். ஆதலால் சிறந்த வீரன் எனப் பொருள்படும் 'மாமல்லன், என்ற பெயர் அவனுக்கு உண்டாயிற்று.

4. பகீரதன் தவம் காட்டும் சிற்ப அழகைக் கூறுக.

ஒரு துறவி ஒற்றைக் காலில் நின்று தவம் செய்கிறார். அவரது உடல் மெலிந்துள்ளது. மார்பின் எலும்புகள் தெளிவாகத் தெரிகின்றன. சுற்றிலும் முனிவர்கள், விலங்குகள் ஆகியோரின் உருவங்கள் காணப்படுகின்றன. ஒரு பெரும் பாறையில் அவ்வளவும் பொறிக்கப் பட்டுள்ளன. இதை 'அருச்சுனன் தவம் என்றும் கூறுவர். அப்பகீரதன் உருவத்தில் வடக்கில் பூனை யொன்று தவம் செய்வது போலச் செதுக்கப்பட்டு உள்ளது. இதுவே இச் சிற்பத்தின் சிறப்பு.

5. மகிடாசுர மர்த்தினியின் கோயில் பற்றிச் சிறு குறிப்பு வரைக

தென் மேற்குப் பகுதியில் மகிடாசுர மர்த்தினியின் கோயில் காணப்படுகிறது; துர்க்கை மகிடா சுரனை அழித்த வரலாற்றைச் சுவரில் பொறித்து வைத்துள்ளனர். ஒரு பெரும் பாறையே கோயிலாக அங்கும் காணப்படுகிறது. அக் கோயிலின் நடுவே உமைபங்கராகச் சிவபெருமான் காட்சி தருகின்றார். உமை யம்மையின் மடியில் முருகப் பெருமான் காட்சி தருகின்றார்.

6. வெண்ணெய் திரட்டிக் கல், வராகர் கோவில் பற்றிக் குறிப்புக்கள் வரைக

பகிரதன் தவத்திற்கு வடக்கில் 'வெண்ணெய் திரட்டிக்கல்' உள்ளது. ஒரு பெரும் பாறையின் சரிவில் சிறிய இடத்தே ஒட்டிய படி ஒரு பெரும் பாறை நிற்கின்றது. அதைக் காண்பவர் 'அஃது எவ்வாறு விழாமல் இருக்கின்றது?' என வியவாமல் இருக்க முடியாது. அதன் வடபால் வராகர் கோவில்' உள்ளது. கடலில் ஆழ்ந்த பூதேவியை வராக அவதார மெடுத்துத் திருமால் மீட்டுவரும் காட்சியை அங்குக் காணலாம்.

7. கடற் கரைக் கோயிலைப் பற்றிச் சிலவரிகள் கூறு.

கடற்கரைக் கோயில் 'தலசயனப்பெருமாள் கோவில்' என அழைக்கப்படுகின்றது அக் கோயிலுடன் இருந்த கோயில்கள் ஆறும் கடலால் கொள்ளப்பட்டனவாம். இக்கோயிலில் சிவபெருமான், நான் முகன் திருவுருவங்களும் காணப்படுகின்றன. அலைவந்து இக்கோயிலருகே மோதுவது கண்கவர் வனப்பாகும்.

8. பிரித்தெழுதுக.

பேரின்பம், செங்கல், கருங்கடல், ஐயமில்லை.

பெருமை + இன்பம், செம்மை + கல், கருமை + கடல் ஐயம் + இல்லை.

9. வாக்கியங்களில் அமைக்க:—

கண்களுக்கு விருந்து.

மகாபலிபுரம் கண்களுக்குப் பெரு விருந்து தருவதாகும்.

அழகுற

பாண்டவர் இரதங்கள் அழகுற அமைக்கப்பட்டுள்ள கற்கோயில்கள் ஆகும்.

## 5. நாடுகண்ட நல்லார்

1. நாடுகண்ட நல்லவர்கள் யாவர்? அவர் கண்ட நாடுகள் எவை?

நாடுகண்ட நல்லவர்கள் 1) கொலம்பஸ்–கண்டநாடு அமெரிக்கா 2) வாஸ்கோடகாமா – கண்டநாடு–இந்தியா. 3) டேவிட் லிவிங்ஸ்டன்–கண்டநாடு ஆப்பிரிக்கா. (4) கேப்டன் குக் கண்ட நாடு ஆஸ்திரேலியா, நியூசிலாந்து.

2. குக் இளம் பருவத்தில் பார்த்த வேலை எது? அதை ஏன் அவர் விரும்பவில்லை?

அவர் பதின்மூன்று வயதை அடைந்த பொழுது கடை யொன்றில் பணியாளராக இருந்தார். அது அவருக்குப் பிடிக்கவில்லை. நாடு பல கண்டு பீடு பெற நினைத்த அவர், அவ்வேலையை விட்டு ஓடினார்.

3. குக் தொழில் புரிவதில் எப்படிப்பட்டவர்?

குக் எத்தொழிலையும் கண்ணுங் கருத்துமாகச் செய்து முடிப்பார். அதை முடிக்கும்வரை தமக்கு உண்டாகும் எத்தகைய துன்பத்தையும் பொருட்படுத்தமாட்டார்.

4. குக் டஹிட்டி தீவு செல்லும்போது உடன் சென்றவர் யாவர்?

விஞ்ஞானி பாங்ஸ். தாவர இயல் அறிஞர் டாக்டர் சோலண்டர், பணியாளர் பலர் உடன் சென்றனர்.

5. டஹிட்டி தீவின் இயற்கை யழகு பற்றிக் கூறுக. மக்களின் இயல்புகளையும் குறிப்பிடுக.

டஹிட்டித் தீவு அழகானது அதைச் சுற்றிப் பல தீவுகள் இருந்தன. அங்கு வாழ்ந்த மக்கள் உயர்ந்த வடிவமும், அழகிய தோற்றமும், பழுப்பு நிறமும் கொண்டவர்கள். ஒரு நாளைக்கு மூன்று தடவை

குளிப்பர். அவர்களின் பற்கள் வெண்மையாக இருந்தன. முரட்டுத் துணிசெய்தல், கோரையில் கூடை முடைதல் முதலியவற்றை அறிந்திருந்தனர்.

6. நியூசிலாந்து மக்களைக் குக் குழுவினர் எப்படி அடக்கினர்?

நியூசிலாந்து மக்கள் அயலாரை உள்ளே விட விரும்பவில்லை, எனவே அக்குழுவினர் தங்களைக் காத்துக்கொள்ள துப்பாக்கியைப் பயன்படுத்த வேண்டியிருந்தது. துப்பாக்கியைக் கண்ட பின்னரே அவர்கள் அடங்கினர்.

7 ஆஸ்திரேலியாவின் கிழக்குக் கரையில் குக் குழுவினர் கண்டவை யாவை?

புதுமையான மரங்கள், செடி கொடிகள், பலநிறப் பறவைகள், வியப்புக்குரிய விலங்குகள் முதலியவற்றைக் கண்டனர். 'கங்காரு' என்ற விலங்கைக் கண்டனர்.

8. குக் குழுவினர் சென்ற கப்பலுக்கு ஏற்பட்ட துன்பத்தையும், நீக்கப்பட்ட முறையையும் கூறு.

கப்பல் வடக்கு நோக்கிச் சென்று கொண்டிருந்த போது, பவழப் பாறை ஒன்றில் கப்பல் மோதி, அடிப்பகுதி உடைந்தது. அதனால் கடல் நீர் கப்பலின் உள்ளே வரலாயிற்று. பாய்மரத் துணியொன்றைக் கொண்டு, அதிலே ஆட்டு மயிரையும் பசையையும் நிறைத்து ஓட்டையில் வைத்து நீர் வருவதை நிறுத்தினர்.

9. ஆஸ்திரேலிய மக்களின் இயல்புகள் யாவை?

ஆஸ்திரேலிய மக்கள் அன்புடன் பழகினர். உடலில் பல நிறச் சாந்துகளைப் பூசியிருந்தனர். கிளிஞ்சலாலான உடையை அணிந்திருந்தனர். மீன் பிடித்தல், பறவைகளை வேட்டையாடல் முதலியன அவர்களுடைய தொழில்களாகும்.

10. குக்கின் முயற்சியால் ஏற்பட்ட நன்மைகள் யாவை?

குக்கின் முயற்சியால், பசிபிக்கடல் தீவுகள், நியூசிலாந்து, ஆஸ்திரேலியா முதலிய பகுதிகளைப் பற்றி நாம் அறிந்தோம். நிலவரலாற்றுக்கும், விஞ்ஞானத்துக்கும் அவர் பயணம் பெரிதும் பயன்படுகின்றது.

11. வாக்கியங்களில் அமைக்க:

உடல் நலம்:

நாம் உடல் நலம் பெற்றிருந்தால் தான் உயர்ந்த செயல்களைச் செய்து புகழைப் பெற முடியும்.

கண்ணும் கருத்துமாக:

நாம் நமது பணிகளைக் கண்ணும்-கருத்துமாகச் செய்ய வேண்டும்.

**இடுக்கண்:**

இடுக்கண் ஏற்படும் பொழுதெல்லாம் சிரித்துக்கொண்டே, எதிர்த்து நிற்க வேண்டும்.

## 6. வானொலி நிலையம்

### 1. வானொலிப் பெட்டியின் காது, மூளை, வாய் எது?

வானொலிப் பெட்டியின் காது ஏரியல், மூளை – வால்வு. வாய் – ஒலி பெருக்கி.

### 2. வானொலி இயங்கும் விதத்தைக் கூறு.

பாடுவதும் பேசுவதும் ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து நடை பெற வேண்டும். அதனால் ஏற்படும் ஒலி, மின் துடுப்பக்களாக மாற்றப்பட்டு, வானின் வழியே பரப்பப் படுகிறது. வானில் பரவிச் செல்லும் அம்மின் அலைகள், ஏரியலால் இழுக்கப்பட்டு, வால்வின் மூலம் மீண்டும் ஒலி அலைகளாக மாற்றப் படுகின்றன. அப்போது தான் நாம் கேட்க முடிகிறது,

### 3. நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெறுவதற்காகச் செய்துள்ள ஏற்பாடு யாது?

நான்கைந்து அறைகள் உள்ளன. ஓர் அறையில் ஒரு நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கும் போதே, மற்றோர் அறையில் அடுத்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கும். ஆகவே காலத்தாழ்வு ஏற்படாமல் நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெறும்.

### 4. நிகழ்ச்சி அறைக்கு வெளியில் சிறிதும் ஒலி ஏற்படாததற்குக் காரணம் என்ன?

நிகழ்ச்சி அறையின் சுவர்கள் எதிரொலி ஏற்படாத வண்ணமும், வெளியில் ஏற்படும் ஒலிகள் உட்புகா வண்ணமும், நடக்கும் நிகழ்ச்சிகள் வெளியே கேட்காதவாறும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

### 5. திறந்த வெளிகளில் நடக்கும் நிகழ்ச்சிகள் எங்ஙனம் ஒலி பரப்பப்படுகின்றன?

மூன்று வகையான ஒலிபெருக்கும் கருவிகள் உள்ளன. அவை யாவன. 1 ஒரு திசையிலிருந்து மட்டும் ஒலியை இழுப்பவை. 2) இரண்டு திசைகளிலிருந்து ஒலியை இழுப்பவை 3) எல்லாப் பக்கங்களிலிருந்தும் ஒலியை இழுப்பவை. இவற்றால் திறந்த வெளி நிகழ்ச்சிகள் ஒலி பெருக்கப்படுகின்றன.

6. இடி, புயல் போன்ற ஒலிகள் வானொலியில் எவ்வாறு கேட்கின்றன?

மெழுகினால் ஆக்கப்பட்ட ஒருவகைத் தட்டுக்களில், இயற்கையாக நிகழும் இடி, புயல் முதலியவற்றை ஒலிப்பதிவு செய்து கொண்டு, பிறகு வேண்டும் போது, மின்சார இசைத்தட்டு இயக்கியில் வைத்து ஒலி பரப்பப்படுகிறது.

7. மத்திய அலை, சிற்றலை என்றால் என்ன?

வானொலியில் நடத்தப்பெறும் எல்லா நிகழ்ச்சிகளும் எல்லாருக்கும் பிடிப்பது என்பதில்லை. எவருக்கு எது தேவையோ அதைக் கேட்டுக் கொள்ளும் பொருட்டு இரண்டு வகையான நிகழ்ச்சிகளை ஒரே நேரத்தில் நடத்துகிறார்கள். இதற்காக மத்திய அலை, சிற்றலை என்று இரண்டு இடங்களில் வான் வழியே பரப்பப் படுகிறது.

8. வானொலியால் நாம் அடையும் நன்மைகள் யாவை?

அன்றாடச் செய்திகளை வானொலி மூலம் அறிய முடிகிறது. பாட்டு, நாடகம் போன்றவற்றைக் கேட்டுக் களிப்படைய முடிகிறது. பெரியோர் பேச்சுக்களைக் கேட்க முடிகிறது.

9. பிரித் தெழுதுக :—

சிற்றலை, வாயசைப்பு, நிகழ்ச்சியறை, வானொலி.

சிறிய + அலை, வாய் + அசைப்பு, நிகழ்ச்சி + அறை, வான் + ஒலி.

## 7. கதிரவன் மறையாத நாடு

1. ஸ்காண்டிநேவியாவின் இயற்கையமைப்பை விளக்குக

ஸ்காண்டிநேவியா:- ஐரோப்பாவில் வடமேற்குப் பாகத்தில் இருக்கிறது. நார்வே, ஸ்வீடன் ஆகிய இரு நாடுகள் உள்ளன. இவற்றுக்கு வடக்கே லாப்லாந்து இருக்கிறது. எப்பக்கம் நோக்கினும் மலைகளே காணப்படும். கோடைக்காலத்திலும் இங்குள்ள மலைமுகடுகளில் பனிப் படலம் மூடியிருக்கும். மலைகளிலிருந்து எண்ணற்ற நீர் வீழ்ச்சிகள் விழுகின்றன. இவை மலைப்பக்கங்களில் சிற்றோடைகளாக ஓடுங் காட்சி மிக அழகாக இருக்கும். வேனிற் காலத்தில் புற்கள் தழைத்து வரும்; மலர்கள் பூத்துக் குலுங்கும்.

2. ஸ்காண்டிநேவியாவில் குளிர்காலம் எப்படி இருக்கும்?

குளிர் காலத்தில் மலைகள், பள்ளத்தாக்குகள் ஆறுகள் எல்லாம் பனியால் மூடப்பட்டு, இரவு போலத் தோன்றும். இங்கு வசிக்கும்

பறவைகளும் குளிர் காலங்களில் உணவுப் பொருள்கள் கிடைக்காமை யால் தெற்கில் உள்ள நாடுகளுக்குப் பறந்து போய்விடுகின்றன. குளிர் காலத்திலும் இரவுப்பொழுது அதிகம்.

3. நார்வே நாட்டுச் சிறுவர்களின் தொழில்கள் எவை?

சிறுவர்களும். சிறுமிகளும் தங்கள் ஆடுமாடுகளை மலைச் சாரலில் உள்ள புல் வெளிகளுக்கு ஓட்டிச் செல்வார்கள். அங்கு அவர்கள் கல்லினால் குடிசைகள் அமைத்துக் கொண்டு, கோடைகாலம் முடியும் வரையில் தங்கியிருப்பார்கள் மாடு மேய்த்தல், பால் கறத்தல், பாலி லிருந்து வெண்ணெய் எடுத்தல், பாலடைக்கட்டி செய்தல் போன்றவை அவர்களுடைய இன்றியமையாத தொழில்களாகும். சிலர் தோட்டங் களுக்குச் சென்று தம் பெற்றோர்களுக்கு உதவுவர்.

4. எஸ்கிமோக்களின் வாழ்க்கையை விவரி.

எஸ்கிமோக்கள் கோடையில் வேட்டையாடும் தொழிலையும், மீன் பிடிக்கும் தொழிலையும் மேற் கொள்ளுகிறார்கள். சிறப்பாகக் கரிபோ என்னும் விலங்குகளையும் மலையாடுகளையும் வேட்டையாடுகிறார்கள். பறவைகள் அகப்படும் இடங்களை நாடி, அவற்றைக் கண்ணி வைத்துப் பிடிப்பார்கள். மீன்களை உப்பிட்டு உலர்த்தி அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். காட் என்னும் மீனிலிருந்து காட்லிவர் ஆயில் எடுக்கிறார்கள்.

5. கலைமான்களை எஸ்கிமோக்கள் எங்ஙனம் பயன் படுத்துகின்றனர்?

கலைமான்களின் தோலை சட்டைதைக்கப் பயன்படுத்துகிறார்கள். கூடாரங்கள் போடவும் பயன் படுத்துகின்றனர். கலைமான் தோலை ஏற்றுமதியும் செய்கின்றனர்.

6. லாப்லாந்து மக்கள் கலைமான்களை எங்ஙனம் பயன் படுத்துகின்றனர்?

லாப்லாந்தில் கலைமான்தான் செல்வம். வண்டிகளை இழுக்கக் கலைமான்களைப் பயன்படுத்துகிறார்கள். கலைமான்களின் ஊனும் பாலும் அவர்களுக்குச் சிறந்த உணவு. அவற்றின் கொம்புகளாலும், எலும்புகளாலும் ஆயுதங்கள் செய்கிறார்கள், கலைமான்களிடம் அன்பு காட்டுவர்.

7. துாந்திரப் பகுதிகளில் நெடுநாட்கள் உணவுப் பொருள்கள் கெடாமலிருப்பதற்குக் காரணம் என்ன?

பனிக் கட்டியின் அடியில் வைக்கும் பொருட்கள் கெடமாட்டா. எனவே இரண்டு மூன்று திங்களுக்கு வேண்டிய உணவுப் பொருளையும் ஒரேசமயத்தில் சமைத்து வைத்துக்கொள்வதுண்டு. நார்வேயில் இவ்வாறே ஐந்தாறு திங்களுக்குச் சேர்த்து வைத்துக்கொள்வர்.

8. தூந்திர மக்களிடம் காணப்படும் நற்குணங்கள் யாவை?

அவர்கள் வலிமை வாய்ந்தவர்கள். ஊக்கத்துடன் உழைப்பவர்கள். இடையூறுகள் பலவரினும் மனந்தளராதவர்கள். தன்னடக்கம் மிகுந்தவர்கள். சாதிச் சமயப் பூசலும், அரசியல் அதிகார வெறிகளும் அவர்களிடம் காணப்படா. இவைதான் குணங்கள் ஆகும்.

9. பிரித்தெழுதுக:—

எண்ணிறந்த, சிற்றோடை, பசும்புல், மனந்தளரார்.

எண் + இறந்த, சிறுமை + ஓடை, பசுமை + புல், மனம் + தளரார.

10. எதிர்ச் சொற்கள் தருக:—

கோடை × குளிர், சொற்பம் × நிரம்ப, அயல்நாடு × உள்நாடு, உட்புறம் × வெளிப்புறம்.

## 8. இளமுது சூரியர்கள்

1. இளமுது சூரியர்களின் நட்புபற்றி எழுதுக.

இளமுது சூரியர்கள் சோழ நாட்டில் ஆமிலந்துறை என்னும் ஊரில் ஏறக்குறைய 500 ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்து வந்தனர். இவ்விருவரும் உடன் பிறந்தவர் அல்லர். அம்மான் சேயும் அத்தை மகனும் ஆய உறவு உடையவர்கள். முது சூரியர் முடவர். இளஞ்சூரியர் குருடர். குருடர் முடவரைத் தோளில் தூக்கிக் கொள்ள முடவர் வழி கூறிச் செல்வர். இணை பிரியாத இரட்டைக் கிளவிகள் போல ஒன்றாக வாழ்ந்தார்கள்.

2. இளமுது சூரியர்களை உலகோர் எங்ஙனம் அழைத்தனர்? ஏன்?

சிறுவயது முதலாக இவ்விருவரும் சேர்ந்தே எங்கும் சென்றதால், இவர்களுக்கு இரட்டையர் என்னும் பெயர் ஏற்பட்டது.

3. இரட்டையர்களைத் தெய்வப் புலவர்கள் என்று அழைத்த காரணம் யாது?

இரட்டையர்கள் இறைவனருளால் விரைந்து கவிகள் பாடும் ஆற்றல் பெற்றவராக இருந்ததாலும், சிவ வழிபாட்டில் சிறந்தவராகத் திகழ்ந்ததாலும், 'தெய்வப் புலவர்கள்' என்று மக்கள் இவர்களை அழைத்தனர்.

4. இரட்டையர்கள் கலம்பகம் பாடுவதில் வல்லவர்கள் என்பதை ஒரு சான்றால் விளக்கு.

கலம்பகம் பாடுவதில் இரட்டையர்க்கு இணையில்லை என்று யாவரும் புகழ்ந்தனர். 'பண்பாய கலம்பகத்திற்கு இரட்டையர்கள்' என்னும் செய்யுளடியால் இதையறியலாம்.

### 5. தில்லைப்பதியில் இரட்டையர் யாரைப் புகழ்ந்து பாடினார்கள்? அதன் பயன் யாது?

தில்லைப்பதியில் ஈகைக் குணமற்ற ஒரு புல்லனை வள்ளல் என்று அரிய பாடல் ஒன்றால் புகழ்ந்து பாடினர். ஆனால் புல்லன் இரட்டையரின் அருமை பெருமையைத் தெரிந்து கொள்ளாமல் குருடும் மூடமும் கூடித் தொல்லை தருவதாய்க் கருதி விரட்டினான். உடனே முடவர், "மூடர் முன்னே பாடல் மொழிந்தால், அறிவரோ ஆடெடுத்த தென் புலியூர் அம்பலவா" என்று பாடினர். குருடர், "செந்திருவைப் போலணங்கைச் சிங்காரித்தென்ன பயன் அந்தகனே நாயகன் ஆனால்" என்று பாடினர். இப்பாடலைக் கேட்ட மூடச் செல்வன் நாணித் தலைகுனிந்தான்.

### 6. இரட்டையர்கள் வசை பாடுவதிலும் வல்லவர் என்பதை ஒரு சான்று கொண்டு நிறுவுக.

காவித்தண்டலம் என்னும் ஊரில் ஒமளநாதன் என்னும் செல்வன் ஒருவன் இருந்தான். இரட்டையர்கள் அவனை அடுத்துப் புகழ்ந்து பாடிப்பரிசில் கேட்டனர், அவனும் அண்டை வீட்டுக் காரனும் அவர்களை இகழ்ந்து பேசினர். புலவர்கள் மனம் புண்பட்டு வசை பாடவே, புல்லர்களின் வீடுகள் தீப்பற்றி எரிந்து சாம்பலாயின.

### 7. சம்பந்தாண்டானின் ஆணவத்தை இரட்டையர் எங்ஙனம் அடக்கினர்?

திருவண்ணாமலைக்கு இரட்டையர் சென்றனர். நாவிதனிடம் சம்பந்தாண்டான் தலைமயிர்க்கழிவு செய்து கொண்டிருந்தான். அவன் இரட்டையரிடம் 'மன்' என்று தொடங்கி 'மலுக்கு' என்று முடியும் வண்ணம் ஒரு வெண்பாப் பாடும்படி ஆணையிட்டான். அவனை அவமானஞ் செய்யக் கருதிய மூத்தவர் "மன்னு திருவண்ணாமலைச் சம்பந்தாண்டாற்குப் பன்னு தலைச்சவரம் பண்ணுவதேன்" என்று பாடினர். இளையவர், "மின்னின் இளைத்த இடைமாதர் இவன் குடுமி பற்றி வளைத்திழுத்துக் குட்டா மலுக்கு" என்று பாடினர். இவ்வாறு ஆணவம் அடக்கப்பட்டது.

### 8. பிரித்தெழுதுக :—

செங்கதிர், ஆடெடுத்த, பொற்றாமரை. இரட்டைக் கிளவி, செந்திரு.

செம்மை + கதிர். ஆடு + எடுத்த, பொன் + தாமரை, இரண்டு + கிளவி, செம்மை + திரு.

9. எதிர்ச் சொற்கள் தருக :—

இருள் × ஒளி, புகழ்ந்து × இகழ்ந்து, வசை × இசை. இளைத்த × பெருத்த.

## 9. லூயி பாஸ்டர்

### 1. அறிவியலினால் ஏற்பட்ட நன்மைகள் யாவை?

இருளைப் போக்க ஒளியும், தொலைவைக் குறைக்க ஊர்திகளும் உடைய பலதரப் பொறிகளும் விஞ்ஞானம் தந்தவையே. பல் வேறு மருந்துகளும் கருவிகளும் தந்து கோடிக்கணக்கான உயிர்களை ஓம்பி வருகின்றது அறிவியல், தொற்று நோய்களை ஒழித்தது அறிவியல்.

### 2. தொற்று நோய்க்கான காரணமாக லூயி பாஸ்டர் கண்டுபிடித்தது யாது?

தொற்று நோய்கள் சில நுண்ணிய உயிர்களால் உண்டாகின்றன என்று கண்டுபிடித்தார் அந்நுண்ணுயிர்களுக்குப் 'பாக்டீரியா' என்று பெயர்.

### 3. லூயிபாஸ்டர் எப்பொழுது எங்கு பிறந்தார்? அவருடைய பெற்றோர் எப்படிப்பட்டவர்?

லூயிபாஸ்டர் 1822ம் ஆண்டில் பிரான்சு நாட்டில் டோல் என்ற நகரத்தின்கண் தோன்றினார். அவருடைய பெற்றோர் மிகவும் வறியவர்.

### 4. பிரான்சு லூயிபாஸ்டரைத் தலைமேற்கொண்டு பாராட்டியது. ஏன்?

பிரான்சில் பட்டுப்பூச்சி வளர்ப்புக்குத் தடை ஏற்பட்டது. புதிய நோய் வந்து பட்டுப்புழுக்களை அழித்தன. இதை ஆராயும்படி கேட்டுக்கொள்ளப்பட்டார் லூயிபாஸ்டர். பட்டுப்புழு முதலியவற்றுள் கண்ணுக்குப் புலப்படாத பல நுண்ணிய உயிர்கள் காணப்பெற்றன, நோய்க்கு மூலகாரணம் அவ்வுயிர்களே என்பது அவருக்குப் புலனாயிற்று. அந் நுண்ணுயிர்கள் மலத்தாலும் காற்றினாலும் பரவுகின்றன என்பதையும் கண்டறிந்தார். அவற்றுடன் அந்நோய்க்கு மருந்தையும் கண்டு. பட்டு உற்பத்தித் தொழிலையும் அவர் காப்பாற்றினார். இதனால் பிரான்சு முழுவதும் அவரைத் தலைமேற்கொண்டு பாராட்டியது.

### 5. வெறி நாய்க்கடி பற்றிய பாஸ்டரின் ஆராய்ச்சியை எழுதுக.

பாஸ்டர் பைத்தியம் கொண்ட நாயிடம் உள்ள நுண்ணுயிர் நாய் கடிப்பதன் மூலம் பிறர்க்கும் பரவுகிறது என்பதை யறிந்தார்; நாய்களுக்கு ஒருவகைத் தொற்று நீரை ஊசியின் மூலம் செலுத்தினார். அதன் காரணமாக அந்நோய் நீங்குதலை அவர் கண்டறிந்தார். அவ்

வண்ணமே வெறிநாய்க் கடியால் துன்புறும் மக்களுக்கு அந்நீரைப் புகுத்தி நோய் நீங்குதலைக் கண்டார்.

6. பிரான்சு அரசியலார் பாஸ்டரை எங்ஙனம் ஆதரித்தனர்?

பிரஞ்சு அரசியலார் ஆண்டு தோறும் அவருக்குப் பன்னிரண்டாயிரம் பிராங்குகள் உதவிப் பணம் கொடுத்து ஆதரித்தனர். பிரஞ்சு மருத்துவ விஞ்ஞானக் கழகமும் அவருக்கு உதவியது.

7. பிரித்தெழுதுக

நுண்ணுயிர், மருத்துவத் துறை, கூட்டுப்புழு, மண்ணுலகம், அவ்வுயிர்

நுண்மை + உயிர், மருத்துவம் + துறை, கூடு + புழு, மண் + உலகம், அ + உயிர்.

8. எதிர்ச் சொற்கள் தருக :-

மேலாக × கீழாக, பகை × நட்பு, செந்தாமரை × வெண்தாமரை, புகழும் × இகழும், வறுமை × செல்வம்.

## 10. பிறர்க்கென உழைத்த பெண்ணரசி

1. மனிதன் எவ்வாறெல்லாம் பெருமையடையலாம் என்று எண்ணுகிறன்?

செல்வம் மிக்கிருப்பின் பெருமையடையலாம் என்று எண்ணுகிறன். நிறையப் படித்தால் புகழ்பெறலாம் என்று எண்ணுகிறன். அரசியலில் ஈடுபட்டால் புகழ்பெறலாம் என்று எண்ணுகிறன்.

2. பிளாரன்ஸ் அம்மையாரின் அறிவு எங்ஙனம் உயர்ந்தது?

பிளாரன்ஸ் இளமையிலேயே அறிவுத்திறன் படைத்தவராய் விளங்கினர். மேல்நாட்டு மொழிகள் பலவற்றைக் கற்றார். இவருடைய தந்தையார் இவ்வம்மையாரை நல்ல அறிவுடையவராக்குவதில் முழுக் கவனத்தைச் செலுத்தினர். உலகியல் அறிவு பெறுவதற்காக இவரை அயல் நாடுகளுக்கெல்லாம் இவருடைய தந்தையார் அழைத்துச் சென்றார். பல நகரங்களுக்கும் சென்று, பலதிறப்பட்ட மக்களோடு பேசி அறிவை வளர்த்துக்கொண்டார்.

3. பிளாரன்ஸ் இளமையிலேயே தொண்டுமனப்பான்மை பெற்றுத் திகழ்ந்தார் என்பதைக் கூறுக.

பிளாரன்ஸ் அம்மையார் சிறுமியராய் விளையாடிக் கொண்டிருந்த நாள் தொட்டே இவர் பிறர் துன்புறுவதைக் கண்டு பொறார். ஏழை

எளியவர்களின் வீடு செல்வார். அவர்கள் நல்வாழ்வு பெற உதவுவார். சிற்றூர்களுக்கு விரைந்தோடுவார். அங்கே மக்கள் சுகாதாரமற்ற முறையில் வாழ்வது கண்டு மனம் நொந்து, அவர்கள் தூய முறையில் வாழ வழி காட்டுவார். அங்கே ஏழை மாணவர்களுக்குக் கல்வி கற்பிப்பார்.

4. பிளாரன்ஸ் அம்மையாரின் தந்தையார் விரும்பியது யாது? அம்மையார் மேற்கொண்டபணி யாது?

இவருடைய தந்தையார் இவரை இலண்டனுக்கு அழைத்துச் சென்று, இராணியாரிடம் தொண்டுபுரியுமாறு செய்தார். ஏழைக்குத் தொண்டு செய்ய நாட்டமுள்ள மனம் அரசியாருக்குத் தொண்டு செய்ய இசையுமா? அம்மையாருக்கு அத்தொழில் பிடிக்கவில்லை. இலண்டனில் பல கழகங்கள் மூலம் தொண்டு புரியலானார்.

5. பிளாரன்ஸ் தாதியாகத் தொழிலாற்றிய திறத்தை விளக்குக.

1851ல் செல்வப் பெருமாட்டியாரான இவர் தாதியாக மாறினார். ஜெர்மனி சென்று கைஸர் வெர்த் என்னும் நகரத்திலுள்ள மருத்துவ மனையில் தாதியாகப் பயின்றார். பிறகு இலண்டன் நகரில் செல்வப் பெருமாட்டிகளுக்கென ஏற்படுத்தப்பட்டிருந்த மருத்துவமனையில் பணியாற்றினார். இவருடைய தொழில் திறத்தைக் கண்டு எல்லோரும் வியந்தனர்.

6. பிளாரன்ஸ் அம்மையார் நோயாளிகளிடம் எங்ஙனம் நடந்து கொண்டார்?

இவ்வம்மையார் நோயாளிகள் பக்கம் சென்று அவர்கள் நோய் நீங்கும் வகையில், இனிமையாகப் பேசுவார். இவரது முகம் புன் முறுவல் தவழும் இன்முகமாகத் திகழும். நோயாளிகள் என்ன கேட்டாலும் இவருக்குக் கோபமே வராது.

7. பிளாரன்ஸ் ஸ்குட்டாரி நகரத்தில் போர்ப்படை மருத்துவ மனையை எங்ஙனம் சீர்திருத்தினார்?

ஸ்குட்டாரி நகரத்தில் போர்ப்படை மருத்துவமனை நன்னிலையில் இல்லை. அதனைச் செவ்விய முறையில் அமைத்தார். அங்கு வரும் நோயாளிகளை நன்கு கவனித்தார். தாமே ஒவ்வொரு நோயாளியிடமும் சென்று என்ன வேண்டும் என்று கேட்பார். தம் நலத்தைக் கவனியாமல் இரவெல்லாம் தூங்காமல், கையிலே விளக்கு ஏந்தி நோயாளிக்கு மருத்துவம் செய்வார். பக்கத்தில் அமர்ந்து காயமடைந்த போர் வீரர்களைத் தம் மெல்லிய கரங்களால் தடவுவார். இன்சொல் கூறுவார்.

8. 'தீபம் ஏந்திய செல்வி' யார்? ஏன் அப்பெயர் ஏற்பட்டது?

பிளாரன்ஸ் அம்மையார் 'தீபம் ஏந்திய செல்வி' யாவர். இரவு முழுவதும் கையில் விளக்கினையேந்தி நோயாளிகளைக் கண்ணுங் கருத்துமாய்க் கவனித்து வந்தமையால் இப்பெயர் ஏற்பட்டது.

9. பிளாரன்ஸ் அம்மையார் பெற்ற பரிசுகள் எவை?

விக்டோரியா மகாராணியார் இரத்தின மாலையை அளித்தார்; துருக்கி நாட்டு மன்னராகிய சுல்தானும் இவருக்கு இரத்தின மாலையை அளித்தார். மக்கள் 'நைட்டிங் கேல் நிதி' என்ற பெயரில் ஒரு நிதி திரட்டி இவரிடம் கொடுத்தனர் இவையே அம்மையார் பெற்ற பரிசுகள்.

10. பிரித்தெழுதுக.

முழுக் கவனம், மருத்துவச் சாலை, இன்முகம், கடும்போர், அருந்தொண்டு.

முழுமை + கவனம், மருத்துவம் + சாலை, இனிமை + முகம், கடுமை + போர். அருமை + தொண்டு.

## 11. "சாதி இரண்டொழிய வேறில்லை"

1. புத்தர் என்பவர் யார்? அவர் உலகிற்கு உணர்த்திய உண்மைகள் யாவை?

புத்தர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றியவர் "ஆசையே துன்பங்களுக் கெல்லாம் காரணம். ஆசையை நீக்கினால் இன்பத்துடன் வாழலாம்' என்னும் உண்மையை உணர்த்தினார்.

2. இளவரசராக இருந்த புத்தர் உள்ளத்தில் என்ன அவாத் தோன்றியது? அதற்காக என்ன செய்தார்?

இளவரசராக இருந்த பொழுதே உயிர்கள் துன்பம் நீங்கிப் பேரின்ப வாழ்வை அடையும் வழியைக் காண வேண்டும் என்னும் அவாவினால் அரச வாழ்வைத் துறந்தார். ஆருயிர் மனைவியை மறந்தார்; இராகுலனை மறந்தார். நள்ளிரவில் தம் தலைநகரை விட்டு வெளியே சென்றார். இரவென்றும் பகலென்றும் பாராமல் அலைந்தார், நடந்து நடந்து அவருடைய கால்கள் தளர்ந்தன. அவர் உடல் தளர்ந்தது. மயங்கி விழுந்தார்.

3. மயங்கிக் கிடந்த புத்தரைக் கண்ட இடைச் சிறுவன் யாது செய்தான்?

மயங்கிக் கிடந்த புத்தரைக் கண்ட சிறுவன், தழைகளை வெட்டி வந்து, அவர் முகம் வெயிலில் துன்புறாத வண்ணம், அவர் அருகில் நட்டான். புத்தர் முகத்தில் நிழல் பரவியது. பெரியவரைத் தீண்டுதல் தகாது என நினைத்தான், உடனே ஓர் எண்ணம் தோன்

றியது. தன் மந்தையிலிருந்து வெள்ளாட்டை இழுத்து வந்தான். மயக்கம் தெளிய வேண்டி, அதன் பாலைப் புத்தரின் வாயில் கறந்து விட்டான்.

4. புத்தர் பால் கறந்து தருமாறு கேட்டதற்குச் சிறுவன் என்ன கூறினன்?

"ஐயனே! நான் ஓர் ஏழைச் சிறுவன். தங்களால் தீண்டத் தகுதியற்றவன். தாழ்ந்த குலத்தவனுகிய நான் தங்களுக்குப் பாலைக் கறந்து கொடுத்தால் பாவம் நேருமே. அருள் கூர்ந்து என்னை மன்னிக்க வேண்டும்" என்ருன்.

5. இடைச் சிறுவனுக்கு புத்தர் கூறிய உண்மை யாது?

"அப்பா, இதனுல் உனக்கு ஒரு பாவமும் உண்டாகாது. துன்பத்தில் என்னைக் காப்பாற்றுவது புண்ணியம் அன்ருே? உலகில் வாழும் யாவரும் ஒரு குலம்; எல்லாரும் கடவுளின் மக்களே; உயர்ந்த சாதி; தாழ்ந்த சாதி என்று கூறுவது வெறும் கற்பனையே" என்ருர். மேலும், "உன் உடலில் ஓடும் செந்நீரும் சிவப்பு; என் உடம்பில் ஓடும் செந்நீரும் சிவப்பு. பிறப்பினுல் உயர்ந்தவர் தாழ்ந்தவர் இல்லை. அவரவர் செய்யும் நற்செயல்களால்தான் அவர்கட்குச் சிறப்பு உண்டாகிறது. இவ்வுலகில் நன்மை செய்பவரே உயர்ந்த குலத்தவர். தீமை செய்பவரே தாழ்ந்த குலத்தவர். பெருந் துன்பத்தில் ஓர் உயிரைக்காத்த நீயே உயர் குலத்தவன்" என்ருர்.

6. பிரித்தெழுதுக:

அவனியெங்கும், நாடெங்கும், இராவென்றும்; ஓரெண்ணம், கண்ணீர்.

அவனி + எங்கும். நாடு + எங்கும், இரவு + என்றும், ஓர் + எண்ணம் கண் + நீர்.

7. எதிர்ச் சொற்கள் தருக:

வெளி நாடு × உள் நாடு, சிறிது × பெரிது. புதுமை × பழமை, துன்பம் × இன்பம்.

## 12. தமிழ்த் தென்றல்

1. திரு. வி. க. எங்கு பிறந்தார்? பெற்ருேர் யாவர்?

1883ல் செங்கற்பட்டு மாவட்டத்தில் துள்ளம் என்னும் ஊரில் பிறந்தார். பெற்ருேர் விருத்தாசல முதலியார் – சின்னம்மாள்.

2. இளம்பருவத்திலேயே அஞ்சாத துணிவு கொண்டவர் திரு வி. க. என்பதை விளக்குக.

ஒருநாள் தெருவில் விளையாடிக் கொண்டிருந்தார் திரு. வி. க. அமீனு முனுசாமிப்பிள்ளை யென்றால் எல்லோருக்கும் அக்காலத்தில் அச்சம். அன்று வண்டியில் அமீனு வரவே, பிள்ளைகள் ''ஐயோ அமீனு வருகிறார்'' என்று கூறிக்கொண்டே ஓடினர். ஆனால் திரு.வி.க நண்பர்களைப் பார்த்து, ''ஏன் இப்படி ஓடுகிறீர்கள்? அமீனு தலையில் கொம்பு முளைத்தவரோ'' என்று கேட்டார். இது அவருடைய அஞ்சாத துணிவல்லவா?

3. திரு.வி.க.வின் எதிர் காலத்தைப் பற்றி அமீனு கூறியது யாது?

''இச்சிறுவன் பிற்காலத்தில் பேரறிஞனாக வரக் கூடியவன். இவனை நீங்கள் நல்ல முறையில் வளர்த்தல் வேண்டும்'' என்று திரு. வி. க. வின் தந்தையிடம் அமீனு கூறினார்.

4. திரு. வி. க. ஆசிரியரிடத்துக் காட்டிய அன்பை விளக்குக.

திரு.வி.க.வின் தமிழாசிரியர் கதிரைவேற்பிள்ளை. அவர் மீது அருட்பா குறித்து ஒரு வழக்கு நடந்தது. அப்பொழுது திரு. வி. க. ஆறாம் படிவம் படித்துக் கொண்டிருந்தார். தமிழாசிரியருக்காகச் சாட்சி சொல்ல வேண்டியிருந்தது. திரு. வி. க.விற்குத் தேர்வு நாளும் சாட்சி சொல்ல வேண்டிய நாளும் ஒன்றாக இருந்தது. சாட்சிக்குச் செல்வதா? தேர்வுக்குச் செல்வதா? இரண்டு எண்ணங்களும் அவருடைய மனத்தை வாட்டின. ஒரு பக்கம் தம் ஆசிரியர்; மற்றொரு பக்கம் வாழ்வு. அவர் தம் ஆசிரியர்பால் இருந்த அன்பே விஞ்சியது. மறுநாள் நீதிமன்றத்துக்குச்சாட்சி கூறவே சென்றார்.

5. திரு. வி. க. யார் யாரிடம் கல்வி பயின்றார்?

திரு. வி. க. முதலில் கதிரைவேற் பிள்ளையிடமும், பின்னர் தணிகாசல முதலியாரிடமும் கல்வி பயின்றார்.

6. திரு. வி. க. வை தமிழ் முனிவர் என்று எவ்விதம் கூறலாம்?

இளம் பருவத்தே மனைவியைத் துறந்த அவர் தமிழ்ப்பற்றும், தாய் நாட்டுப் பற்றும் நிறைந்து ஒல்லும் வகையில் அறப்பணியாற்றி வந்தார், இவ்வருங் குணம் கருதி, அவரைத் தமிழ் முனிவர், என்று கூறலாயினர் மக்கள்.

7. தொழிலாளர் பொருட்டுத் திரு. வி. க. செய்த தொண்டுகள் யாவை?

தொழிலாளர் நிலை உயரப் பெரிதும் பாடுபட்டார். தொழிலாளர் சங்கம் ஒன்றை ஏற்படுத்தினார். தொழிலாளரிடையே ஒற்றுமை மலர

அச்சங்கம் உதவியது. அவர்கள் உரிமைகளைக் காக்கப் பல போராட்டங்களை நிகழ்த்தினர். பக்கிங்ஹாம் கர்னடிக் பஞ்சாலையில் ஏற்பட்ட பெரிய வேலை நிறுத்தத்தை நடத்தினர்.

8. திரு. வி. க. வின் தமிழ்த் தொண்டுகளைக் குறிப்பிடுக.

திரு வி. க. தமிழ் மொழி, சமயம், சீர்திருத்தம், பெண்கள் முன்னேற்றம், இளைஞர் இயக்கம் முதலிய துறைகளைப்பற்றி 50 நூல்களை இயற்றியுள்ளார். இவை அனைத்தும் செந்தமிழ் நடையில் இயன்றவை. படிக்கப் படிக்கத்தெவிட்டாத சொல்லழகும், பொருளழகும், தொடையழகும், நடையழகும் வாய்ந்தவை. முருகன் அல்லது அழகு, பெண்ணின் பெருமை, மனித வாழ்க்கையும், காந்தியடிகளும் என்னும் நூல்கள் குறிப்பிடத் தக்கவை. முருகன் அருள் வேட்டல், திருமால் அருள் வேட்டல், பொதுமை வேட்டல் ஆகிய கவிதைகள் பொருட் செறிவு வாய்ந்தவை.

9. தமிழகத்தின் எதிர்காலம்பற்றித் திரு. வி. க. கூறியிருப்பதென்ன?

"மரணம் என்னைத் தழுவ நிற்கின்றது என்பதை அறிந்து மனம் மகிழ்கிறேன். எல்லாரையும் போல மரணம் கண்டு எனக்கு அச்சம் எழவில்லை. எத்தனையோ பேருடன், பலதுறை அன்பர்களுடன் பழகினேன். ஆனால் இப்போது தமிழ்த்துறை அறிஞர்களே அடிக்கடி நினைவில் வந்து நிற்கிறார்கள். நான் நல்ல முறையில் வாழ்ந்துவிட்டேன். தமிழகத்துக்கு நல்ல எதிர் காலம் உண்டு; தாழ்வு வேண்டா'' என்று குறிப்பிட்டுள்ளார்.

10. சொற்றொடர்களில் அமைக்க:

உயிரும் உடலும் போல :-

கணவனும் மனைவியும் உயிரும் உடலும் போல வாழ வேண்டும்.

எண்ணி எண்ணி :-

இறைவனை நாள் தோறும் எண்ணி எண்ணி உருக வேண்டும்.

ஈடேறும் :-

முயற்சியுடன் உழைப்போருக்கு, எண்ணங்கள் யாவும் ஈடேறும்.

## 13. "யாதும் ஊரே யாவருங் கேளிர்"

1. பூனைக்குட்டிகளை உவமையாகக் கொண்டு பாரதியார் கூறும் நீதி யாது?

தாய் பூனை பலநிறமுடைய குட்டிகளைப் பெற்றாலும் அவை யாவும் ஒரே இனம் அல்லவா? ஆகையால் பிறப்புப் பற்றியும், சாதி பற்றியும்,

நிறம் பற்றியும் நமக்குள் வேற்றுமை பாராட்டுவது தக்கது அன்று என்று அறிவுறுத்துகிறார்.

2. 'உலகமே ஒரு குடும்பம்' என்பது எப்படித் தோன்றுகிறது?

உலகம் பரந்த நிலப்பரப்பை உடையது. விரிந்த கடல்களால் சூழப்பெற்றது. எங்குப் பார்த்தாலும் நம்மைப் போல் மக்களும், விலங்கு இனங்களும், பறவைகளும், நீர் வாழ் உயிர்களும் வாழ்வதைப் பார்க்கலாம். இவ்வுலகில் ஆசியா, ஐரோப்பா, என்ற கண்டங்கள் இருக்கின்றன. அக்கண்டங்களில் பலப்பல நாடுகள் இருக்கின்றன. மக்களின் நல்வாழ்வைக் குறித்து அவ்வந் நாட்டு அரசியல் நடைபெற்று வருகின்றது. இவற்றை யெல்லாம் நன்கு சிந்தித்துப் பார்த்தால், 'உலகமே ஒரு குடும்பம்' என்று தோன்றுகின்றது,

3. ஐக்கிய நாடுகள் கழகம் எதற்காக ஏற்பட்டது?

உலக அமைதியையே குறிக்கோளாகக் கொண்டு இக்கழகம் ஏற்பட்டது. உலக மக்களுள் சமரச எண்ணமும், சகோதரப் பண்பும் வளர்ப்பதில் இக்கழகம் சிறந்த தொண்டாற்றி வருகின்றது.

4. உலக மக்கள் அனைவரும் ஒன்று பட்டு வாழும் வழிகள் யாவை?

முதலில் உலக மக்கள் யாவரும் நம்மைப் போல இன்பமாக வாழ வேண்டும் என்ற எண்ணம் எங்கும் பரவ வேண்டும். "நாம் உயர்ந்தவர் ,பிறர் தாழ்ந்தவர் என்னும் வேற்றுமை உணர்ச்சி சிறிதும் கூடாது. செல்வ நிலையில் உயர்ந்த மக்கள் தாழ்ந்த நிலையில் இருக்கும் மக்களுக்கு உதவ வேண்டும். இவை ஒன்றுபட்டு வாழ வழிகள் ஆகும்.

5. ஆறுகள் நமக்கு உணர்த்தும் அறிவுரை யாது?

ஆறுகள் பலவாகப் பிரிந்து பாய்ந்து வந்தாலும், முடிவில் அவை யாவும் ஒரே கடலில் சென்று கலக்கின்றன. அதுபோலச் சமயங்கள் பல இருப்பினும் அவை குறிக்கும் பொதுக் கடவுள் ஒருவர் தான் என்பதைக் காட்டுகிறது. 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்பதை மறக்க முடியுமா?

6. உலக மக்கள் ஒற்றுமையாக வாழ்ந்தால் ஏற்படும் நன்மையும், வேற்றுமையாக வாழ்வதால் ஏற்படும் தீமையும் எவை?

ஒற்றுமையாக வாழ்ந்தால் உலகில் அமைதியும், இன்பமும், செல்வமும் நிறைந்து விளங்கும். வேற்றுமை பாராட்டினால், உலகில்

எங்கும் குழப்பமும், கலகமும், போரும் ஏற்பட்டு மக்கள் பலப்பல துன்பங்களுக்கு உட்படுவர்.

7. பிரித்தெழுதுக:

ஓரினம், நன்றிது, நமக்கெது, தொண்டாற்றி, பழந்தமிழ். ஓர்+இனம், நன்று+இது, நமக்கு+எது, தொண்டு+ஆற்றி, பழமை+தமிழ்.

8. எதிர்ச்சொற்கள் தருக:

வேற்றுமை × ஒற்றுமை, பொதுவாக × தனியாக, உயர்வு × தாழ்வு, அமைதி × அமைதியின்மை.

9. சொற்றொடர்களில் அமைக்க:

சிந்தித்து.

எச்செயலையும் நன்கு சிந்தித்துத் திட்டமிட்டுத் தொடங்க வேண்டும்.

உயர்வு

பிறப்பில் உயர்வு தாழ்வு கிடையாது.

## 14. மாப்பிள்ளையின் கோபம்

1. இளம்பூரணன் இலக்கணத்தை எங்ஙனம் படித்தான்?

இளம்பூரணன் 'இன்பம் இன்பம் இலக்கணமே, அன்பாய்க் கற்கின் அரைக் கணமே' என்று கூறி ஆசையோடு கற்றான்.

2. இளம்பூரணனுக்கு அப்பெயர் எங்ஙனம் பொருத்தமானது?

பிழை இல்லாமல் எழுதுவதிலும், பேசுவதிலும் அவன் இளமையிலேயே பூர்ணமான அறிவு பெற்றிருந்ததால், அவனுக்கு இளம்பூரணன் என்ற பெயர் மிகப் பொருத்தமுடையதே.

3. இளம்பூரணன் முதலில் திருமண அழைப்பைக் கண்டபோது மனம் வருந்தக் காரணம் யாது?

திருமண அழைப்பிதழில் இரு பிழைகள் இருந்தன. ஆகவே, "நான் தமிழ்ப் பேராசிரியனாக இருந்துங்கூட என் திருமண அழைப்பிதழில் இப்படிப்பட்ட பிழைகள் நேரலாமா? மற்றவர்கள் பார்த்தால் என்ன நினைப்பார்கள்?" என்று வருந்தினான்.

4. திருமண அழைப்பிதழில் இளம்பூரணன் கண்ட பிழைகள் யாவை ?

"மணமக்களை வாழ்த்தும்படி கோறுகிறேன்" என்று இருந்தது. "கோறுகிறேன்" என்றால் "கொல்லுகிறேன்" என்று பொருள். அழைப்பிதழில் "எனது மகள்" என்று அச்சிட்டிருந்தது. அஃறிணைப் பொருள்களைச் சொல்லும் போதுதான் எனது என்பதைச் சேர்க்க வேண்டும். மகள் அஃறிணைப் பொருளா? மேலும் "எனது மகள்" என்பது "செத்துப் போன மகள்" என்றும் குறிக்கும். மணமகளைப் பிணமகள் ஆக்கலாமா? "என் மகள்" என்றே இருக்க வேண்டும்.

5. இளம் பூரணனின் மாமனார் அவனுடைய கோபத்தை எவ்வாறு தணித்தார் ?

"கோபம் வேண்டாம் மாப்பிள்ளை. நான் யாருக்கும் இன்னும் அழைப்பிதழ் அனுப்பவில்லை. நீங்கள் சொன்ன திருத்தல்களின்படி வேறு அழைப்பிதழே அச்சிட்டு விடலாம்" என்று கூறி, மாப்பிள்ளையின் கோபத்தைத் தணித்தார்.

6. பிரித்தெழுதுக

கொண்டிருந்த, அழைப்பிதழ். திறமை யுடையவன்
கொண்டு+இருந்த, அழைப்பு+இதழ், திறமை+உடையவன்.

7. எதிர்ச் சொற்கள் தருக.

எளிதாக × அரிதாக, அறியாதவர் × அறிந்தவர், வெறுத்து × விரும்பி, இப்போது × அப்போது.

8. சொற்றொடர்களில் அமைக்க.

கடுகடுப்பாக.
இளம்பூரணன் அழைப்பிதழில் இரு பிழைகளைக் கண்டதும் கடுகடுப்பாகப் பேசினான்.

## 15. சொன்னவண்ணம் செய்தவர்

1. அரிய நாதரின் கைகளைப் பார்த்த அந்தணர் யாது கூறினார்?

அரியநாதரின் கைகளைப் பார்த்த அந்தணர், அப்பனே! உனக்குச் சிறந்த இராசயோகம் இருக்கிறது. நீ இந்த நாட்டின் அரியநாதனாகவே விளங்குவாய். உன் பேரும் புகழும் பாரெங்கும் பரவும் நீ சீரும் சிறப்பும் பட்டமும் பதவியும் அடைவாய்" என்றார்.

2. முன்னேற்றம் அடைய அரியநாதருக்கு அந்தணர் கூறிய வழி யாது?

'நீ குப்பையில் கிடக்கும் மாணிக்கம். நீ தற்காலத்தே ஏழைதான் நீ இங்கேயே இருப்பின் பயனில்லை, உடனே விசயநகரம் போக வேண்டும். அங்கு அரசவையில் பணியாற்ற வேண்டும். அதனுல் உனக்கு ஆட்சிப் பதவியும் கிடைக்கும்'' என்ருர் அந்தணர்.

3. அரியநாதர் ஓலை நறுக்கில் எழுதிக்கொடுத்தது யாது?

ஓலை நறுக்கில், ''எனக்கு அரசயோகம் கிடைத்தால் இந்த ஓலையைக் கொண்டு வருபவருக்கு என் உடைமையில் கால் பங்கைத் தவருமல் தருவேன்'' என்று எழுதிக் கொடுத்தான்.

4. விசய நகரம் போக விரும்பிய அரியநாதரைப் பார்த்து அவருடைய தந்தை கூறியது யாது?

அரிய நாதருடைய தந்தை, ''இவன் குழந்தையாக இருந்த போது நாகம் ஒன்று இவனது தலைப்பக்கமாகப்படம் விரித்து வலம் வந்து சென்றதும், வேதியர் ஒருவர் இவன் ரேகையைப்பார்த்து இவனுக்கு அரசயோகம் இருக்கிறது என்று சொன்னதும் உனக்கு நினைவு இல்லையா? இவனது எதிர்கால நல்வாழ்வுக்கு நாம் ஏன் தடையாக இருக்க வேண்டும்?'' என்று தன் மனைவியிடம் கூறி, அவளைச் சாந்தப் படுத்தினுர். அரிய நாதனிடம், ''நீ நம் நாட்டுக்கும் வீட்டுக்கும் புகழ் உண்டாகுமாறு நடந்துகொள்'' என்ருர்.

5. அரிய நாதன் எங்ஙனம் உயர் பதவிகள் பெற்ருன் ?

அரியநாதன் விசயநகர் சென்று அரண்மனைக் கணக்கர் ஒருவரிடம் வேலைக்கு அமர்ந்தான். அங்குத் தன் நுண்ணறிவாலும், செயல் திறமையாலும் கணக்கரின் நன்மதிப்பைப் பெற்ருன். அதனுல் மேலும் மேலும் உயர் பதவிகள் கிடைத்தன. கிருட்ண தேவராயரும் அரிய நாதனின் அறிவாற்றல்களைக் கண்டு வியந்து 'தளவாய் அரிய நாதன்' எனப் பட்டம் அளித்துப் பாராட்டினுர்.

6 'ஆம், இஃது என் கையெழுத்தே. இது நான் அன்று கொடுத்த ஓலை' இது யார் கூற்று? விளக்குக.

இதைக் கூறியவர் அரியநாதர். மெய்ப்பேட்டிலிருந்து வந்த வேதியர் கொடுத்த ஓலையை வாங்கிப்படித்த போது இவ்வாறு கூறினுர். வேதியர் அரியநாதரிடம் ''வரையாது கொடுக்கும் வள்ளலே! நான் காசியிலிருந்து என் சொந்த ஊராகிய மெய்ப்பேட்டுக்குத் திரும்பினேன். இந்தப் புரட்டாசித் திங்களில் கலைமகள் பூசை நடைபெற்ற போது பழைய ஓலைச் சுவடிகளைப் புரட்டினேன். இதில் தங்கள்

பெயர் இருந்தது. இது தங்கள் கையெழுத்துத் தானு, பாருங்கள்'' என்று கேட்டபொழுது கூறியது.

7. அரியநாதர் தம் வாக்குறுதியை எங்ஙனம் நிறைவேற்றினுர்?

அரியநாதர், "என் வாக்குறுதியை இப்போதே நிறைவேற்றச் சித்தமாக இருக்கின்றேன். இந்த ஓலையில் எழுதியுள்ளபடி என் உடைமையில் காற்பகுதியை உங்களுக்குத் தருகிறேன்'' என்றுர். அவையினர் பெருவியப்பு அடைந்தனர்.

8 அந்தணர் அரியநாதரிடம் பெற்றவை யாவை?

அந்தணர் அரியநாதரைப் பார்த்து '"சொன்ன சொல் விரும்பாத செம்மலே! தங்கள் சத்தியமே சத்தியம். ஏழை அந்தணனுக்குத் தங்கள் மாபெருஞ் செல்வத்தில் காற்பங்கு எதற்கு? காஞ்சிபுரத்தில் என் வாழ் நாள் வரை வாழ்வதற்கு ஒரு வீடும், உணவுக்கு வேண்டிய விளை நிலங்களும், கறவைப் பசு ஒன்றும் அளித்தால் போதும் 'என்றுர். அவ்வாறே கொடுக்கப்பட்டது.

9. பிரித்தெழுதுக:

முகப்பொலிவு, பிரிந்தறியாத, நன்மதிப்பு, வாக்குறுதி.

முகம் + பொலிவு, பிரிந்து + அறியாத, நன்மை + மதிப்பு, வாக்கு + உறுதி.

10. எதிர்ச் சொற்கள் தருக:

அண்மை × சேய்மை, அரிய × எளிய, பழைய × புதிய, நிறைந்து × குறைந்து.

11. சொற்றொடரில் அமைக்க:

பேரும் புகழும்: அரிய நாதர் தம் நுண்ணறிவால் பேரும் புகழும் பெற்றுர்.

சீருஞ் சிறப்பும்: உண்மையான முயற்சியும், ஓயாத உழைப்பும் இருந்தால் சீருஞ் சிறப்பும் அடையலாம்.

## 16. தேர் அளித்த சிறுவன்

1. வீரநரசிம்மர் இலிங்கையரை எவ்வாறு பாராட்டினுர்? அளித்த பரிசு யாது? பட்டம் யாது?

இலிங்கையருக்கு 'மும்முடிப் பல்லவராயர்' என்னும் பட்டம் வழங்கிப் பாராட்டினுர். அவருடைய மழலைச் செல்வனுகிய குமரனுக்கு நவமணிகள் பதித்துச் செய்யப்பட்ட தங்கத் தேர் அளிக்கப்பட்டது.

2. முத்து குமரனை எங்ஙனம் பாராட்டினான்?

“குமரா! நாங்கள் ஏழையென்றும் பாராமல் எங்களிடம் விளையாட விரும்புகிறாயே! ஒரு தங்கத் தேரையே எங்களிடம் கொடுத்து விளையாடச் சொல்கிறாயே! உன் அன்பை என்னவென்று சொல்வது?” என்று முத்து குமரனைப் பாராட்டினான்.

3. அரண்மனையடைந்த தமிழ்ப்புலவர் ஏன் வருந்தினார்?

தமிழ்ப் புலவர் அரண்மனையடைந்ததும் பல்லவராயர் இல்லை யென்பதை யறிந்தார். ‘ஐயோ கடவுளே! ஒரு நாளும் இல்லாமல் திருநாளுக்குப் போனானும் திருநாளும் இல்லாமல் வெறும் நாளான கதையாகி விட்டதே’ வீட்டில் உணவு இல்லாமல், என் மனைவி, மக்கள் என்ன பாடு படுகிறார்களோ? தெய்வமே! ஏழை நான் என்ன செய் வேன்?” என்று கூறி வருந்தினார்.

4. பல்லவராயரின் குமரன் புலவருக்கு அளித்த பரிசு யாது?

பல்லவராயரின் குமரன், தான் விளையாடிக் கொண்டிருந்த தங்கத் தேரையே தமிழ்ப் புலவருக்குப் பரிசாக அளித்தான்.

5. பல்லவராயரிடம் தமிழ்ப் புலவர் தம் துன்பத்தை எங்ஙனம் வெளியிட்டார்?

“செந்தமிழ் போற்றும் செம்மலே! வறுமைப்புலி என்னை வாட்டுகிறது. வீட்டில் அடுப்பு மூட்டி மூன்று நாட்கள் ஆயின. குழந்தைகள் பசியால் துடித்தனர். அவர்கள் தாய் முகம் நோக்கினர்; அவள் என் முகம் நோக்கினாள்; நான் தங்கள் முகம் நோக்கி வந்தேன்” என்றார்.

6. வாழையடி வாழை’ என்னும் சொற்றொடருக்குக் குமரனின் செயல் எவ்வாறு பொருந்தும்?

குமரனின் தந்தை தமிழ்ப் புலவர்களை ஆதரிப்பவர். அதே போலக் குமரனும் சிறு வயதிலேயே தமிழ்ப் புலவருக்குத் தங்கத் தேரையே பரிசாகத்தந்த செயல் ஒன்றே ‘வாழையடி வாழை’ என்னும் சொற்றொடருக்குப் பொருத்தமாக உள்ளது.

## 17. தேசீய ஒருமைப்பாடு

1. இந்தியாவின் வேறு பெயர்கள் யாவை?

இந்தியாவின் வேறு பெயர்கள் பாரதம், பரதகண்டம், பொன்னாடு என்றெல்லாம் பெயர் பெற்றுள்ளன.

## 2. இந்தியாவில் உள்ள இராச்சியங்கள் எவை?

இந்தியாவில் உள்ள இராச்சியங்கள்:— தமிழ்நாடு, ஆந்திரம், கேரளம், மைசூர். வங்காளம், மராட்டிரம், குசராத்து, பீஹார், மத்தியப்பிரதேசம், உத்தரப்பிரதேசம், இமாசலப்பிரதேசம், கிழக்குப் பஞ்சாப் பம்பாய்.

## 3. வெவ்வேறு சமயத்தவராயினும் வேறுபட்டு நில்லாமல் ஒன்றுபட்டு வாழ்ந்தமைக்கு எடுத்துக்காட்டுகள் தருக.

சிலப்பதிகாரத்தை இயற்றிய இளங்கோவடிகள் சமணர் – அவர்தம் அண்ணனே சைவன். (சேரன் செங்குட்டுவன்) இவ்விருவருக்கும் நண்பரான சாத்தனூர் பௌத்தர். இவர்கள் வெவ்வேறு சமயத்தவராயினும் முரண்பட்டு நிற்கவில்லை. நெஞ்சங்கலந்து உறவாடினர்.

## 4. இந்நாட்டில் உள்ள தலங்களை வேறுபாடு கருதாமல் மக்கள் வழிபட்டனர் என்பதை விளக்கு.

வடநாட்டினர் தென்னாட்டுத் தலங்களான காஞ்சி, தில்லை, இராமேசுவரம், கன்னியாகுமரி சென்று வழிபட்டனர். தென்னாட்டார் வடநாட்டுத் தலங்களான காசி, அரித்துவாரம், துவாரகை சென்று வழிபட்டனர்.

## 5. பண்டைய அரசியலில் காணப்பட்ட ஒருமைப்பாடு யாது?

பண்டைய அரசியலிலும் ஒருமைப்பாட்டுணர்ச்சி மேலோங்கி நின்றது. இந் நாட்டின் ஒரு பகுதியில் ஆண்ட அரசன் மேற்கொண்ட அரசியல் நெறியையே மற்றப் பகுதியின் மன்னர்களும் மேற்கொண்டனர். 'மக்களுக்காக மன்னன்' என்ற கொள்கை இந்தியாவில் எந்த மன்னனாலும் ஏற்றுக்கொள்ளப்படாமல் இல்லை.

## 6. பண்டைய இந்திய மன்னரிடை காணப்பட்ட தொடர்பை விளக்கு.

அரசாட்சி செலுத்திய முறை, போரிடு முறை, கலை வளர்த்தமை, அரசியலில் அமைந்த உட்பிரிவுகள் முதலியன இந்தியாவில் ஆண்ட மன்னர் அனைவரிடமும் ஒரே முறையில் அமைந்திருந்தன. சாணக்கியரின் பொருள் நூலும், திருவள்ளுவரின் திருக்குறளும் பல வகையில் ஒருமைப்பாட்டுடன் விளங்குகின்றன. ஒரு மன்னனின் மகளை வேற்றுமை கருதாமல் மற்றொரு மன்னன் மணந்தான். பாரதத்தில் அருச்சுனன் பாண்டியன் மகளை மணந்துகொண்டான், பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதன் என்பான் பாரதப் போரில் இருபடையினருக்கும் உணவளித்தான்.

7. நம் நாட்டு ஒருமைப்பாடு குறித்துப் பாரதியார் கூறுவன யாவை?

'முப்பது கோடி முகமுடையாள் – உடல்
மொய்ம் புற ஒன்றுடையாள்,
செப்பு மொழி பதினெட்டுடையாள் — எனில்
சிந்தனை ஒன்றுடையாள்.

'எனப் போற்றிப் புகழ்ந்துள்ளார். மேலும் பாரதியார் தமிழகத்தார் கங்கை யாற்றங்கரையில் விளையும் கோதுமைப் பண்டத்தைப்பெற்றுக் கொண்டு காவிரியின் கரையில் விளையும் வெற்றிலையைக் கொடுக்க வேண்டும் என்றும், சிங்க மராட்டியர்களின் கவிதைகளைச் சுவைத்து, அவர்களின் கவித் திறமையைப் பாராட்டி, அவர்களுக்குச் சேரத் தந்தங்கள் பரிசளிக்க வேண்டும் என்றும் கூறுகிறார். காசி நகரில் வாழும் புலவர் ஒருவர் பேசும் பேச்சைக் காஞ்சி நகரில் கேட்பதற்குத் தகுந்த கருவிகளைச் செய்ய வேண்டும் என்று கூறியிருப்பது நம்முடைய தேசிய ஒருமைப் பாட்டைத் தூண்டுவதாகும்.

8. சொற்றொடர்களில் அமைக்க.

பொன்னாடு:

இந்தியா நமது பொன்னாடு என்பதை மறக்கலாகாது.

அடைமொழி:

திரு என்பது வள்ளுவரின் பெயருக்கு முன்னால் வந்துள்ள அடைமொழியாகும்.

TB
03(87)
N67
47157

RGR/1294

4